

கல்கி
ஃபோன்
போனதே..!
KALKI
6.7.97
ரூ. 4.00
சுவலட்சுமியின்
டைரிக் குறிப்புகள்

நாட்டின் சிறந்த மருத்துவமனைகளில் ரூபாய் 5 லட்சம் பெறுமான மருத்துவ சிகிச்சை

உங்கள் வயதுக்கேற்ப, ரூ. 2,500 முதல் ரூ. 35,000 மட்டுமே செலுத்தி.

ஆரோக்கியம், நிதிவசதியும் உங்களை மிகவும் பாதிக்கும் தருணத்தில் உங்கள் ஆஸ்பத்திரி செலவை யார் ஏற்பது? யூடிஐ வழங்கும் சீனியர் சிட்டிசன்ஸ் யூனிட் பிளான் (SCUP) நீங்கள் காணும் மிகச்சிறந்த ஓய்வுக்கால மருத்துவகணிப்பு மூலம் நீங்களே அந்த செலவை ஏற்பீர். இது உங்களுக்கும், உங்கள் வாழ்க்கைத் துணைக்கும் ரூ. 5 லட்சம் ஆஸ்பத்திரி செலவை தரும், நாட்டின் மிகச் சிறந்த ஆஸ்பத்திரிகளில் தரும்.

திட்டம் செயல்படும் விதம் இவ்வாறு: நீங்கள் ஒரு சிறு தொகையை ஒரு முறை மட்டுமே செலுத்த வேண்டும். (எவ்வளவு குறைந்த வயதில் செலுத்துகிறீர்களோ, அவ்வளவு குறைவாக செலுத்துவீர்). 54-வது வயதில் உங்களுக்கும், உங்கள் வாழ்க்கைத் துணைக்கும் ஒரு அடையாள அட்டை-கம்-வாக் புக் தரப்படும். 58-வது வயதுக்கு பிறகு நீங்கள் நாட்டின் எந்த பகுதியில் வசித்தாலும், எந்த பகுதியில் முதலீடு செய்திருந்தாலும் கவலையில்லை. நாடெங்குமுள்ள மிகச்சிறந்த ஆஸ்பத்திரிகளை பயன்படுத்திக்கொள்ளலாம். தற்போது 55 நகரங்களிலுள்ள 184 ஆஸ்பத்திரிகள் இத்திட்டத்தில் பங்கு பெற்றுள்ளன.

உங்களுக்கோ, உங்கள் வாழ்க்கைத் துணைக்கோ ஆஸ்பத்திரியில் சேர வேண்டியிருந்தால், இத்திட்டத்தில் பங்கு பெறும் ஏதேனும் ஒரு ஆஸ்பத்திரிக்கு சென்று அட்மிட் ஆகவும். சிகிச்சை முடிந்து டிஸ்சார்ஜ் ஆகும் போது பில் தொகை செலுத்துவதற்கு பதிலாக உங்களிடமுள்ள வாக் புக்கில் என்ட்ரி போட்டுக் கொண்டால் போதும். பில்லுக்கு பணமாகவோ, செக்காகவோ ஏதும் தரவேண்டியதில்லை. நீங்கள் குணமாகி கவலையில்லாமல் வீடு திரும்புங்கள்.

அதோடு நீங்கள் உங்கள் முதலீட்டின் ரெசிடுயல் வேல்யூ அனுமதிப்படியும் பெறுவீர்கள். இத்திட்டத்தின் ஒரு அங்கத்தினராக திருமதி இந்துமதி ராம்நாத் "இதில் எனக்கு 101% திருப்தி" என்று இத்திட்டத்தை பாராட்டி கூறுகிறார். எனவே தாமதிக்காமல் இன்றே பதிவு செய்யுங்கள். உடல் ஆரோக்கியமே உங்களுக்கு பெரிய சொத்து.

SCUP-ன் கீழ் முதலீட்டு தொகை								
வயது	18	25	30	35	40	45	50	54
தொகை (ரூ.)	2.500	2,800	4,200	6.300	9,800	15.300	24,500	35,000

கவலையில்லாத ஆரோக்கிய பராமரிப்பு

எஸ் ஸி யு பி

யூனிட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா

உங்கள் வளமான எதிர்காலத்திற்காக

இடர்ப்பு நிலைகள் : [illegible]

மண்டல அலுவலகம்: 29, இராஜாஜி சாலை, சென்னை 600 001. போன்: 517101.
கிளை அலுவலகங்கள்: • கோயம்புத்தூர் போன்: 214973 • சென்னை போன்: 517101, 517190
• மதுரை போன்: 38186 • திருச்சி போன்: 760060

055/97 M TAM B



உன்னையே கல்யாணம் பண்ணிக்கறேன்

உன்னையே கல்யாணம் பண்ணிக்கறேன் என்று நாகார்ஜுன் தபுவிடம் சொல்லும்போது ஏறத்தாழ மங்களம் பாடவேண்டிய வேளை வந்து விடுகிறது. அதற்குக் கொஞ்ச நேரம் முன்புதான் அந்த மூன்றெழுத்து சமாசாரமே.

அதுவரை?

ஒரு எலிமென்டரி ஸ்கூல் அளவுக்கு ஜனமும் சப்தமும் நிரம்பிய இரண்டு குடும்பங்கள், அவர்களின் தோழமை, அந்நியோன்னியம், கொஞ்சம் நகைச்சுவை, பாட்டு - டான்ஸ் என்று ஹம் ஆப்கே, தில்வாலே பாணியில் குடும்பப்பாங்காக முயன்றிருக்கிறார்கள். ஒரே வித்தியாசம் - இந்தப் படத்தில் கொஞ்சம் குழந்தைத்தனமான ஸ்கிரிப்ட்.

ஏரோப்ளேன் ஓட்டக் கற்றுக் கொள்வதற்காக (கற்றுக் கொண்டாரா? இல்லையா?) தபு ஹைதராபாத்துக்கு வருகிறார். கூடவே கொஞ்சம் ஜில்லென்று காற்றும் வருகிறது.

வந்தவர் பிளேனை மறந்துவிட்டு, நாகார்ஜுனாவைக் காதலிக்க, அவரது பெற்றோர் ஆசி தர, இது ஏதடா ஒரு ட்விஸ்டே இல்லாத காதல் கதை என்று யோசிக்கத் தொடங்கும் வேளையில் 'தபு வேறு யாருமில்லை; இருபது வருஷம் முன்பு சண்டை போட்டுக் கொண்டு போன நாகார்ஜுன் அப்பாவின் சகோதரியின் மகள்தான்; ஆகவே குடும்பப் பகை; நோ கல்யாணம்' என்று சொல்லி இன்டர்வெலுக்கு அனுப்புகிறார்கள்.

பகையெல்லாம் மறந்து சுபமாகிற கிளைமாக்ஸைக் கண்டுகளிக்க வேணுமென்றால் சுமார் ஒன்றேகால் மணி நேர ரம்பத்தைத் தாங்கியாக வேண்டும்.

என்னவிதமான ரம்பம் என்று சொல்வதற்கு முன் கேமராக்காரரைக் கொஞ்சம் பாராட்டி விட வேண்டும். மிதமான, கண்ணை உறுத்தாத, ஒரு வித வெல்வெட் லைட்டிங்கைப் படம் முழுவதிலும் படர விட்டிருக்கிறார். இதில் விசேஷம் என்னவென்றால், காட்சியின் குணத்துக்கேற்ப அந்த வெல்வெட்டின் மிருதுத்தன்மை மாறிக் கொண்டே போகிறது! (ரொம்ப நாளைக்கு முன்பு மூன்றாம் பிறையில் இந்த ஜாலத்தை பாலு செய்திருக்கிறார்.)

இனி ரம்பத்துக்கு வரலாம். படத்தில் அவ்வப்போது நிறைய முடிச்சுகள் விழுகின்றன. (உதா: இரு நெருங்கிய குடும்பங்களுக்கிடையே நட்பு விரிசல், கல்யாணம் நிற்பது இப்படி.)

ஆனால், யாராவது ஏதாவது செய்து முடிச்சை அவிழ்ப்பார்கள் என்று பார்த்தால் அதற்கு சமயமே கிடைப்பதில்லை. விழுகிற முடிச்செல்லாம் தாமே டக்டக்கென்று அவிழ்ந்து வழிவிட்டு விடுகின்றன, தேவதைக் கதைகள் போல!

இது ஒரிரு முறை என்றால் பரவாயில்லை. படம் முழுக்கவா?

அப்புறம் நாகார்ஜுனாவின் நடிப்பு. காதல் செய்யும் போதும் கண்ணீர் விடும் போதும் அடி வாங்கும் போதும் - தரும் போதும் அழும் போதும் சிரிக்கும் போதும் - எப்போதும் ஒரே பாவம் - உலக மாயைகள் புரிந்த மகான் மாதிரி.

ரோஜாப்பூ மாதிரி தபு மட்டும் ஸ்கிரீன் முழுக்க மலராவிட்டால் படத்தை உட்கார்ந்து பார்க்க முடியுமா என்பது மி. டாலர் கேள்வி.

சகிக்க ஒண்ணாத இசை, நீள நீளக் காட்சிகள், எதிர்பார்க்கும் திருப்பங்கள், என்று பல ஓட்டைகள்.

'யாரை வேணா கல்யாணம் பண்ணிக்கோ; எங்களை சீக்கிரம் வீட்டுக்கு அனுப்பு' என்று தியேட்டரில் ரசிகர்கள் கதறிக் கண்ணீர் விடாத குறை.

— ஆர். பி. ஆர்.

தகுதிக்கு ஒரு சிம்மாசனம்!

• கே. ஆர். நாராயணன்


கேரளா கோட்டையம் மாவட்டத்தில் உழவூர் ஒரு சிறிய கிராமம். அங்கே ராமன் வைத்தியர் பிரசித்தம். மிக ஏழைமையான ஜீவனம். வைத்தியர் மகனுக்குப் படிப்பின் மீது பேரார்வம். ஆனால் வறுமையின் காரணமாக ஸ்கூல் ஃபீஸைக் கூட சரியான நேரத்துக்குக் கட்ட அவனால் முடியவில்லை. இருந்தாலும் சோதனைகளையும், சகமாணவர்களின் ஏளனத்தையும் எள்ளளவும் பொருட்படுத்தாமல் அம்மாணவன் படித்தான். அந்த அபூர்வ மூளை அனைத்தையும் கிரகித்துக் கொண்டது. பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம் எங்கேயும் டிஸ்டிங்ஷனுக்குக் குறைந்து அவன் தேறியதில்லை.



திருவாங்கூர் பல்கலைக் கழகத்தில் முதல் மாணவனாகத் தேறிய பெருமையுடன் கையில் பட்டம். கிடைத்தது ஒரு கிளார்க் உத்தியோகம். "கேரளா சரிப்படாது. வேறு எங்காவது நமது எதிர்காலத்தை நிர்ணயித்துக் கொள்ள வேண்டியதுதான்" என்று தீர்மானமாக, பிறந்த மண்ணை விட்டு வெளியேறி டெல்லியில் கால் பதித்த அந்த இளைஞரை இந்தியா மெல்ல மெல்ல அடையாளம் காண ஆரம்பித்தது.

'நான் வெளிநாடு சென்று படிக்க ஏன் எனக்கு நீங்கள் உதவி செய்யக் கூடாது?' என்று தன்னைப் பற்றிய கல்வித் தகுதிகளைப் பட்டியலிட்டு அந்த இளைஞர் நேரடியாக ஜே.ஆர்.டி. டாட்டா அவர்களுக்குக் கடிதம் ஒன்றை எழுதினார். 'ஓகே' என்றார் டாட்டா. நடுவில் உலகப் போர் வந்ததால் ஓர் ஆண்டு காத்திருக்க வேண்டி வந்தது. ஏன் சும்மா இருப்பானேன் என்று அந்த இடைவெளியில் டைம்ஸ் ஆஃப் இந்தியா, ஹிந்து பத்திரிகைகளில் பணியாற்றி அனுபவம் சேர்த்துக் கொண்டார்.

1948-ல் லண்டன் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸிலிருந்து முதல் வகுப்பு ஹானர்ஸ் பட்டத்துடனும், புகழ்பெற்ற பேராசிரியர் ஹெரால்ட் லஸ்கியிடமிருந்து 'இவர் சரியான ஆள். தகுதிமிக்கவர். விட்டு விடாதீர்கள்' என்று பண்டிட்



• மனைவி & மகளுடன்

நேருஜிக்கு ஒரு பொரிக கடிதத்துடனும் இந்தியா திரும்பிய பின்னர் திரும்பிப் பார்க்க வேண்டிய அவசியமே அந்த இளைஞருக்கு ஏற்படவில்லை.

உலகின் மிகப் பெரிய நாடுகளில் இந்தியத் தூதரகங்களில் எல்லாம் இவர் பணி கொடி கட்டிப் பறந்தது!

1980ம் ஆண்டு. அமெரிக்காவின் இந்தியத் தூதராக அவர் பொறுப்பேற்கப் போகும் சமயம். ரஷ்யாவில் இந்தியத் தூதராக இருந்த தாடிக்கார அரசியல்வாதி ஒருவர் அப்போது தான் டில்லி திரும்பியிருந்தார். இருவரும் சந்தித்துக் கொண்டார்கள்.

'அமெரிக்காவில் இந்தியத் தூதராக ரொம்பவும் நல்ல பெயர் எடுத்து விடாதீர்கள். அப்புறம் மாஸ்கோவில் எங்கள் பாடு திண்டாட்டமாகி விடும்' என்று நகைச்சுவையாகச் சொன்னார் தாடிக்காரர். அதை ரசித்துச் சிரித்தார் கேரளாக்காரர்.

தாடிக்காரர் ஐ.கே. குஜ்ரால். இப்போது பிரதமர். கேரளாக்காரர் கே. ஆர். நாராயணன். ஜனாதிபதியாகப் போகிறார்.

தேர்தல்கள் நாராயணனுக்குப் புதிது அல்ல. மூன்று முறை ஒட்டப் பாலம் தொகுதியிலிருந்து தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

நாராயணன் நல்ல நகைச்சுவை உணர்வு கொண்டவர். ஜோக் அடிக்கவும், ரசிக்கவும் தெரிந்தவர். உலகின் பல நாட்டு மன்னர்கள், ஜனாதிபதிகள், பிரதமர்கள் எல்லாம் நாராயணனின் நல்ல நண்பர்கள்.

இனிமையான இல்வாழ்க்கை. ரங்கூனில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது மா டின்ட் டின்ட் இவரைக் கவர்ந்தார். காதல் மலர்ந்தது. கூடவே சோதனை. இந்திய வெளியுறவு தூதரக அதிகாரிகள் இந்தியர் அல்லாதவரைத் திருமணம் செய்து கொள்ள அனுமதி இல்லை என்ற விதிமுறைகள். 'பரவாயில்லை... இவர்கள் காதல் நிறைவேற வேண்டும்' என்று பாரதமும், பர்மாவும் கை கோத்துக் கொள்ள, சிறப்பு அனுமதி தந்தார் பண்டித நேரு! டின்ட் டின்ட் தன் பெயரை உஷா என மாற்றிக் கொண்டார்.

ஜனாதிபதி மாளிகைக்கு உள்ளே நாராயணனின் குடியிருப்பு மிக வசதியாக இருக்கலாம். ஆனால் அடுத்த ஐந்தாண்டுகளில் வீசக்கூடிய அரசியல் சூறாவளிகளை நாராயணன் சந்தித்தாக வேண்டும்.

இவர் துணை ஜனாதிபதியாக இருந்த ஆண்டுகளில் எந்த ஆளுங்கட்சியும் மத்தியில் அறுதிப் பெரும்பான்மையை அனுபவித்ததில்லை. எதிர் காலத்திலும் அப்படித்தான் இருக்கும் என்கிறார்கள் அரசியல் நோக்கர்கள்.

- ராணிமைந்தன்

மார்ஜின் மொழி

○ அதிர்ஷ்டம் தராததைத் திருப்தியால் பெறலாம்.
- கோல்டுஸ்மித்

'பாரு'க்குள்ளே நாளைய பாரதம்!



• கணேசன், முருகேசன்



• முனியசாமி

"பையனைப் படிக்க வைக்க ஆசைதான். ஆனா வீட்டுல அடுப்பு புகைய வேணாமா?" என்று கேட்டார் முருகேசனின் தாய்.

"படிக்க வெச்சா, இந்தக் கழுதை எங்க படிக்குது? படிப்பு வந்தாத்தானே?" - இது பாண்டியின் பெற்றோர் தரும் ஸ்டேட்மென்ட்.

இந்த முருகேசன், பாண்டி, இவர்களது நண்பர்களான கணேசன், முனியசாமி எல்லோரும் வேலைக்குப் போகிற சிறுவர்கள். குழந்தைத் தொழிலாளர்களுக்கு நாட்டில் குறைவில்லைதான். ஆனால் இந்தக் குழந்தைகள் வேலை பார்ப்பது - ஒயின் ஷாப்புகளில்!

ஒயின் ஷாப்புகளில் எடுபிடியாக வேலை பார்க்கிற சிறுவர்களின் வாழ்க்கைதான், நரகம் என்ற சொல்லுக்குச் சரியான உதாரணம் என்று தோன்றியது, மதுரையில் சில ஒயின் ஷாப் பையன்களைச் சந்தித்துப் பேசியபோது.

படிக்கிற வயதில் வேலை பார்ப்பதே ஒரு சோகம் என்றிருக்க, சாராய புருஷர்களின் நடுவில் ஒரு நாளைக்குச்

சுமார் பதினைந்து மணி நேரம் புழங்குகிற இந்தச் சிறுவர்களின் மனமே மரத்துப் போய் விடுகிறதை அறிய பகீரென்று இருந்தது!

குடிப்பது ஒரு குற்றமல்ல என்கிற எண்ணமும் குடிகாரர்களிடமிருந்து அதிகபட்சம் எத்தனை டிப்ஸ் கரக்கலாம் என்கிற யோசனையும் 'போலீஸ் வந்தால் என்ன பெரிய பயம்?' என்கிற தெனாவட்டும் மனதில் பதிந்து போக, இவர்கள் பிஞ்சிலேயே பழுக்க ஆரம்பித்து விடுகிறார்கள்.

தினசரி பார்களில் நடக்கும் சண்டைகள், சகட்டுமேனிக்கு உதிரும் கெட்ட வார்த்தைகள் வெகு எளிதாக இந்தக் குழந்தைகளின் மனத்தில் பதிந்து விடுகின்றன. பல ர்வுடிக் கும்பல்களை அடிக்கடி சந்திப்பதால் மூர்க்கத்தைப் பழகி விடுகிறார்கள். அவர்கள் குடித்து மிச்சம் வைக்கிற சரக்கைத் தாமும் குடித்துப் பார்ப்பது, போதை மிதமிஞ்சிப் போய் விழுகிறவர்களின் பைகளில் 'சோதனை' போட்டுக் காசு திருடுவது என்று பாதாளங்களை நோக்கிப் பயணப்பட ஆரம்பிக்கிறார்கள்.

இப்படி சம்பாத்தியம் எளிதாகி விடுவதால், கடின உழைப்பு என்பதே இச்சிறுவர்களுக்குத் தெரியாத விஷயமாகி விடுகிறது.

தப்பித் தவறி, போலீஸ் ரெய்டில் சிக்கி, ஒருநாள் லாக்-அப்பில் இருந்துவிட்டு வந்தால் போதும். மனத்தளவில் தன்னையே ஒரு 'ரவுடி'யாக கருதிக் கொண்டு, பாருக்கு வரும் அத்தகையவர்களுடன் அதிக இணக்கம் கொண்டு, சீரழிபவர்கள் அநேகம்!

'இப்படிச் சிறுவர்களை வேலைக்கு வைத்துச் சீரழிப்பது சரியா?' என்று சில ஒயின் ஷாப் உரிமையாளர்களிடம் கேட்டோம்.

"என்ன செய்யறதுங்க? எங்களுக்கும் கஷ்டமாத்தான் இருக்குது. ஆனா பெரிய ஆளுங்களை வேலைக்குப் போட்டா சில பிரச்னைகள் வருது. வர்ற கஸ்டமர்களோட சண்டை போடறாங்க. நிறைய ஏமாத்துவாங்க. சின்னப் பசங்கன்னா அந்தப் பிரச்னை இல்லை. அதோட, எந்த வேலை சொன்னாலும் செய்யறாங்க" என்கிறார்கள்.

குடிக்க வருகிறவர்களே, ஆட்களை விட, பையன்கள் சப்ளை செய்வதைத்தான் அதிகம் விரும்புகிறார்களாம். "சுறுசுறுப்பாகப் பரிமாறி, அன்போடு உபசரித்து, திருப்தியாய் வழியனுப்பி வைப்பார்கள்" என்கிறார் ஒரு ரெகுலர் குடிமகன்.


• பாண்டி

இந்தப் பிரச்னைக்கு வழியே இல்லையா என்று மதுரையில் தெருவோரச் சிறுவர்களுக்கென்றே இயங்கி வரும் சேவை நிறுவனமான 'நண்பன்' அமைப்பின் இயக்குநர் சகோதரர் ஜேம்சை அணுகிக் கேட்டோம்.


"இப்படிப்பட்ட ஒயின்ஷாப் சிறுவர்கள் பலரை நாங்களே மீட்டு, லேத், வெல்டிங் தொழிற் பயிற்சிகள் தந்து வழிகாட்டியிருக்கிறோம். ஆனால் 'அந்த' வாழ்க்கைக்குப் பழகிப் போன சிறுவர்கள் உடல்ரீதியாகவும் (புகை, மதுப் பழக்கம்) மனரீதியாகவும் கெட்டிருப்பவர்கள், இங்கே தங்காமல் மறுபடி ஓடிப் போய்விடுகிறார்கள். ஒயினப் பழக்கம், பெண்கள் தொடர்பு என பதினைந்து வயதிலேயே சீரழிந்தவர்களை நான் அறிவேன். அரசு மட்டுமல்ல; பெற்றோரும் சமூகமும் இணைந்துதான் இத்தகையவர்களைக் கரைசேர்க்க முழு மூச்சுடன் பாடுபட வேண்டும். இந்த விஷயத்தில் யார் முயற்சி எடுத்தாலும் தோள் கொடுக்க எங்கள் 'நண்பன்' அமைப்பு தயாராக இருக்கிறது" என்றார் ஜேம்ஸ்.

— எஸ்.ஜே. இதயா

படங்கள் : 'நேஷனல்' சுந்தர்

சென்னை அண்ணாசாலை டெலிபோன் எக்ஸ்சேஞ்சில் கடந்த திங்களன்று ஏற்பட்ட திடீர் தீ விபத்து காரணமாய் சுமார் 60 ஆயிரம் டெலிபோன் லயன்கள் பாதிக்கப்பட்டிருக்கும் என்பது ஒரு மதிப்பீடு. (டெலிபோன்ஸ் தரப்பில் 30 ஆயிரம் என்றார்கள்) அதனால் சென்னைவாசிகள் ரொம்பவே அவதிக்குள்ளானார்கள். சிலர் இங்கே தமது அனுபவத்தைக் கூறுகிறார்கள் :

போனதே... :போன் போனதே!




• டாக்டர் வி. மைத்ரேயன் :



• சுப்ரமணியன் விஸ்வநாதன்



• ரவி



• வசுமதி



• கிஷோர்



சுப்ரமணியன் விஸ்வநாதன் : நான் ஒரு கம்ப்யூட்டர் புரொபஷனல். இன்னும் இரு வருடன் இணைந்து ஒரு அகவுண்டிங் சாஃப்ட்வேர் உருவாக்கி, மார்க்கெட் செய்து கொண்டிருக்கிறேன். பிசினஸ் இப்போது தான் மெள்ள வளர்ந்து கொண்டிருக்கிறது. எங்கள் ஏரியா கொட்டிவாக்கம். நல்ல நாளிலேயே, டெலிபோனில் சீக்கிரம் டயல் டோன் வராது. அண்ணாசாலை எக்ஸ்சேஞ்ச் தீ விபத்துக்குப் பின், கேட்கவே வேண்டாம். அன்றாடப் பணிகளைத் திட்ட மிட்டபடி நிறைவேற்ற முடிய வில்லை. டெலிபோனில் அப்பா யின்ட்மென்ட் பெறாமல், நேரில் போனால், சம்பந்தப்பட்டவரை சந்திக்க முடியவில்லை. போகாமல் இருந்தால், 'நேற்று வருவீர்கள் என்று காத்திருந்தாரே' என்கிறார்கள். ரொம்ப பாதிப்புதான்.

கிஷோர் : (வானொலி பண்பலையில் 'பிரியமான நேரம்' நிகழ்ச்சி தயாரிக்கும் பிரியாவிஷன் நிர்வாகி): எனக்கு இரண்டு டெலிபோன், பேஜர், செல்லுலர் டெலிபோன் எல்லாம் உண்டு. இருந்தும் என்ன பயன்? டெலிபோன் லயன்கள் பாதிக்கப்பட்ட திலிருந்து, தீவில் இருப்பதுபோல உணர்கிறேன். வங்கிக்கிளை, விளம்பரதாரர்கள் என்று யாரையும் காண்டாக்ட் பண்ண முடிய வில்லை. செக் கலெக்ஷன் பாதிக்கப்பட்டு, நிதி நிலைமை டைட் ஆகிவிட்டது. எதற் கெடுத்தாலும், பெட்ரோல், நேரம் செல வாகிறது. எப்போதுதான் டெலிபோன் லயன்கள் உயிர்பெறுமோ?

ரவி : (பப்ளிக் டெலி போன் பூத் வைத்திருப் பவர்) எங்கள் டெலி போன் ஓர்க் பண்ணு கிறது. ஆனாலும் பிசினஸ் படு டல். முன்பெல்லாம் தினம் நூறு டெலி போன் கால்கள் பண்ணுவார்கள்.

இங்கே உள்ள பொதுமக்கள். இப்போதும் மக்கள் வருகிறார்கள். ஆனால் லயன் கிடைக்காமல் வெறுமனே திரும்புகிறார்கள். பதினைந்து இருபது ரூபாய் அளவுக்கு வருமானம் படுத்து விட்டது. இன்னும் ஒரு வாரத்துல எல்லாம் சரியாயிடும்னு சொல்லறாங்களே! நிஜமா சார்?

பாஸ்கர் (ஷேர் புரோக்கிங் கம்பெனியில் பணிபுரிபவர்) : ஷேர் புரோக்கர்களிடம், இன்ன ஷேர் வாங்கு, இதை விற்று விடு' என்று ஷேர் முதலீட்டாளர்கள், காலையில் பேப்பரைப் பார்த்துவிட்டு, டெலிபோனில் தான் ஆர்டர் கொடுப்பார்கள். கடந்த சில ஆண்டுகளாகவே ஷேர் மார்க்கெட் அத்தனை சுறுசுறுப்பாய் இல்லை. இப்போது டெலிபோன் கணும் சொத்துவி... வேண்டாம்.

ரொம்ப பிராப்ளம்தான்.

டாக்டர் வி. மைத்ரேயன் : (மருத்துவரான இவர் தமிழக பா.ஜ.க. முக்கியஸ்தரும் கூட)
நான் தினமும் பல்வேறு மருத்துவமனைகளுக்கும் சென்று, நோயாளிகளைப் பார்க்கிறேன். காலையில் ஒரு ரவுண்டு போய் விட்டு வந்தால், மாலையில், அனைத்து ஆஸ்பிடல்களுக்கும் டெலிபோன் செய்து, நோயாளிகளின் கண்டிஷனைக் கேட்டு அறிவேன். தேவையானால் மட்டும் நேரில் செல்வேன். ஆனால் இப்போது, டெலிபோன் தொடர்புகள் பாதிக்கப்பட்டு விட்டதால், காலையில் ஒருமுறை, மாலையில் ஒருமுறை என்று இரண்டு தடவைகள் ஆஸ்பத்திரிகளுக்கு விஸிட் செய்ய வேண்டியுள்ளது. இதேபோல, என் அரசியல் சம்பந்தமான ... விஷயங்களுக்காக டெலிபோனை

நம்பிப் பயனில்லாத சூழ்நிலையில் ரொம்பவே சிரமப்படுகிறேன்.

நீரஜ் குமார் : (அப்போலோ டிராவல்ஸ்)
விமான, ரயில் டிக்கெட்டுகள் புக் பண்ணுகிற பிசினஸில் நான் இருக்கிறேன். எங்களுக்கு எல்லா ஆர்டர்களும் டெலிபோன் மூலம்தான் வரும். டிக்கெட் புக் பண்ண, எங்கள் ஆபீஸ் நபர் சென்றபின், ஏதாவது ஆர்டர் வந்தாலும், பேஜர் மூலம் அவருக்கு விவரம் சொல்லி விடுவது வழக்கம். ஆனால், இந்த டெலிபோன் பிராப்ளம் வந்ததால் பெரும் பாதிப்பு. பல்வேறு வாடிக்கையாள கம்பெனிகளுக்கும் தினம் காலை, மாலை, பப்ளிக் பூத்திலிருந்து டெலிபோன் செய்து, ஆர்டர் இருக்கிறதா என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

வசுமதி : (குடும்பத் தலைவி)
தினம் நாலு மணிக்கு வீட்டுக்குப் போன் பண்ணி, என் பசங்கள் ஸ்கூலிலிருந்து வீடு திரும்பியாகி விட்டதா என்று தெரிந்து கொள்ளுவேன். டெலிபோன் லயன்கள் அவுட் ஆகிவிட்டதால், என்னால் தொடர்பு கொள்ள முடியவில்லை. பசங்கள் வந்திருப்பார்கள் என நினைத்து, நான் சும்மா இருந்து விட்டேன். வீட்டுக்குப் போனால் ஷாக்! குழந்தைகள் இல்லை. அலறியடித்துக் கொண்டு ஸ்கூலுக்கு ஓடினால், அங்கே பத்திரமாய் இருந்தார்கள். (ஸ்கூல் டெலிபோனும் வேலை செய்யவில்லை) வழக்கமான ரிக்ஷாக்காரர் மட்டம் அடித்து விட்டதால் இந்தக் குழப்பம். ஏக டென்ஷன்.

தொகுப்பு : **மௌலி**



"சார் என்ன சாப்பிடறீங்க? இட்லி, தோசை, பூரி... அடடே உங்களை எங்கேயோ பார்த்திருக்கேனே. எங்கே?"

"இரண்டு மணி நேரத்துக்கு முன்னாடி இரண்டு இட்லிக்கு ஆர்டர் எடுத்துக்கிட்டுப் போனியே எங்கிட்டத்தான்!"

- வெ. ராஜாராமன்

மார்ஜின் மொழி

✪ அன்பு செய்யும் வரை மனிதன் ஒழுக்கக் கேடுடையவனாக முடியாது

— சார்லஸ் லாம் லாம்ப்



சுவலட்சுமியின் டைரிக் குறிப்புகள்!

திங்கள் :

ஷூட்டிங் இல்லை என்று தெரியும். ஆனாலும் அதிகாலை எழுந்து விட்டேன். சின்னதாக ஒரு வாக். பிறகு படிக்க உட்கார்ந்தேன். சட்டப் புத்தகத்தில் மூழ்கியே போனேன்.

ஜாடைகள் வாக்குமூலமாக கோர்ட்டில் ஏற்கப்படமாட்டாது என்பதற்கு ஒரு இன்டரஸ்டிங்கான கேஸ் படித்தேன். வட இந்தியாவில் ஒருவன் தன் மனைவியின் கழுத்தை அறுத்துப் போட்டு விட்டு ஓடி விட்டான். குரல்வளை அறுபட்டு, உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தவளிடம் போலீஸ், 'யார் கொன்றது?' என்று கேட்க, பேச முடியாத அந்தப் பெண், தன் நெற்றியில் குங்குமம் வைத்தவன் என்ற பொருள்பட (அங்கு தாலி கட்டும் வழக்கம் இல்லையாம்!) தன் பொட்டைத் தொட்டுக் காட்டியிருக்கிறாள்.

கடைசியில் என்ன ஆயிற்று தெரியுமா?

குங்குமம் வைத்தவனா, விற்றவனா என்று வழக்கைக் குறுக்குக் கேள்விகளால் திசைமாற்றி, அந்தக் கொலைகாரக் கணவன் தப்பி விட்டான்! 'ஜாடை' வாக்குமூலம் நிற்கவில்லை!

எது எப்படியோ, இன்று முழுக்க, இந்த கேஸ் என் மனத்தைப் படாதபாடுபடுத்தி விட்டது!

செவ்வாய் :

கல்கத்தா தமிழ்ச் சங்கத்தில் கூப்பிட்டிருந்தார்கள். அம்மாவுடன் கல்கத்தா பயணம். சொந்த மாநிலம் என்கிற சந்தோஷம் ஒருபுறம். தமிழ்ச் சங்கத்தில் பேசப் போகிற குஷி ஒருபுறம்.

சங்கத்துக்காரர்களுக்கு என்னை விடக் குஷி! நான் ஆங்கிலத்தில் பேசுவேன் என்று எதிர்பார்த்திருந்தவர்களுக்கு, தமிழிலேயே வெளுத்து வாங்கியது பார்க்க, ஒரே கொண்டாட்டம். (தயாரித்துக் கொண்டு போவதற்கு நான் பட்டபாடு எனக்கல்லவா தெரியும்?)

புதன் :

உள்ளூர் தோழிகளுடன் அவசர அவசரமாகத் தொலை பேசினேன். சென்னை புறப்பட்டாக வேண்டுமே? விமானத்தில் நிறையப் பேர் என்னை அடையாளம் கண்டுகொண்டு வந்து பேசியது மகிழ்ச்சியாக இருந்தது! புகழே ஒரு குஷி தானே! சென்னை வந்து சேர்ந்ததும் ரொம்பக் களைப்பாக இருந்தது. அதனால் இரவு பாடம் படிக்கவில்லை.

வியாழன் :

சென்னையில் இருக்கிற என் உறவினர்கள் சிலர் இன்று வீட்டுக்கு வந்திருந்தார்கள். நாள் முழுக்க ஜாலியாக அவர்களுடன் பொழுதுபோனது! அவர்களை சாக்கிட்டு, நான்-வெஜ் ஐட்டங்களை ஒரு வெட்டு வெட்டினேன்!

ஷூட்டிங் என்று தொடங்கும் என்பது பற்றி இன்று வரை தகவல் இல்லை. ஆகவே வெட்டியாகப் பொழுது போவது போல ஒரு பிரமை.

வெள்ளி :

காலை குளித்து விட்டு அரை மணி தியானம். பின் என் ஃபேவரட் கடவுளான துர்க்கை அம்மன் கோவிலுக்குப் போய் வந்தேன். வெள்ளிக் கிழமைகளில் இது தவறவே தவறாது! 'சந்தோஷம்' 'தினந்தோறும்' - இரு படங்களுக்குக் கொடுத்த நாட்கள் வீணாகிறதே என்கிற வருத்தத்தோடே, பிற்பகல் அம்மா மடியில் படுத்துக் கொண்டு இரண்டு சினிமா பார்த்தேன்.

சனி :

வேலை நிறுத்தம் தொடர்வதைப் பேப்பர் பார்த்துத் தெரிந்து கொண்டேன். இந்த ஸ்டிரைக்கினால் அதிக பாதிப்பு டெக்னீஷியன்களுக்குத்தான். பாவம்!

சித்ரமகால் கிருஷ்ணமூர்த்தியின் மகன் ராமன், அவரது மனைவி லாவண்யா இருவருடன் பீச்சுக்குப் போனேன். நிலா வெளிச்சத்தில் டிபன் சாப்பிட்டது சந்தோஷமான அனுபவம்.

திங்கள் to ஞாயிறு!

ஞாயிறு :

காலை இரண்டு மணி நேரம் படித்தேன். பின் தினகரன் பத்திரிகை ஆபீஸில் ரசிகர்களை நேரில் சந்திக்கக் கூப்பிட்டிருந்தார்கள்; போனேன். வெளியூர் ரசிகர்கள் குடும்பத்துடன் வந்திருந்தார்கள். அவர்களுடன் மனம் திறந்து கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தது சுகமாக இருந்தது.

மாலை கீழ்ப்பாக்கத்தில் உள்ள அன்னை தெரஸா ஓல்டு ஹோம் அசோசியேஷனுக்கு கூப்பிட்டிருந்தார்கள். பிள்ளைகளால் கைவிடப்பட்ட பெற்றோர்களைப் பார்த்தேன். கொஞ்சம் ஆறுதலாகப் பேசிக் கொண்டிருந்துவிட்டுத் திரும்பினேன்.

தொகுப்பு : **ஈஸ்வர்**

மேலட்டை, வண்ணப்படம்:

பிரவீண்குமார்



ரத்த அழுத்தமா! சிறுநீரக கோளாறா!
இனி கவலையே வேண்டாம்!
தெய்வீக மூலிகை மருத்துவத்தில்



முகம், கை, கால், கண்களின் அடிபாகம் ஆகிய பகுதிகளில் வீக்கம், இடுப்புப் பகுதியில் விட்டுவிட்டு வலி, சரியான ஜீரணமின்மை, சில நேரங்களில் வாந்தி, நீர்த்தாரையில் எரிச்சல், புண் ஏற்பட்டால் எளிதில் ஆறாத நிலை போன்றவைகள் சிறுநீரகங்களில் கோளாறு ஏற்பட்டிருப்பதின் ஆரம்ப அறிகுறிகள். இராசயனப் பொருட்கள் கலந்த உணவு வகைகள், மற்றும் B.P., சர்க்கரை வியாதி போன்ற நோய்களுக்காக நீண்ட நாட்கள் மாத்திரைகளை சாப்பிடுதல், கிருமிகள், உணவில் அதிகப்படியான உப்பின் உபயோகம், நரம்பு மண்டல கோளாறு, ஆக்ஸிஜன் பற்றாக்குறை போன்ற பல காரணங்களினால் சிறுநீரகப் பகுதியில் உள்ள திசுக்கள், செயலிழக்க நேரிடுகின்றது. சக்தி நிறைந்த, உப்பு உபயோகிக்காத, இரசாயனப் பொருட்களின் கலப்பற்ற இயற்கை உணவுகளான பழங்கள், காய்கறிகளையும், தெய்வீக மூலிகைகளான வேப்பிலை, வில்லம், அத்தி, துளசி, அருகம்புல், போன்றவைகளையும் தேவைக்கு தக்கபடி உண்பதன் மூலம் சிறுநீரகங்களில் ஏற்பட்டுள்ள தற்காலிக அடைப்பினை நீக்கி மீண்டும் சீராக செயல்பட செய்ய முடியும். இது பற்றிய விரிவான ஆலோசனையை கீழ்கண்ட முகவரி மற்றும் முகாம்களில் டாக்டரிடம் நேரில் பெறலாம்.



மூலிகை வைத்தியர்கள்

தலைமை முகவரி : Dr.C.K.M.குருபரன் & Dr.C.K.M.சபாபதி, S/o.Dr.C.K. மாணிக்கவாசகர்

P.B. No: 30, No: 3, திருநாத முதலி நகர், காலேஜ் எதிரில், திருப்பத்தூர் (N.A.A.) 635 601 ✆ : 04179-20469, 22769.

சென்னை கிளை : 115, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, பிரின்ஸ் மேனர் பக்கத்தில் செல்லீஸ், சென்னை-10.

இரு முகவரிகளின் ஆலோசனை நேரம் தினமும் காலை 10 to 1 மாலை 6 to 8 ✆ : 6424285, 6427638

வைத்தியரிடம் நேரில் ஆலோசனை/மருந்தினைப் பெற முகாம் விவரம்.
(முக்கிய பண்டிகை தினங்களிலும் முகாம் உண்டு)

2-ந் தேதி	- வேலூர் (N.A.)	: பிற்பகல்	1 to 2 மணி வரை ஹோட்டல் கண்ணா (லக்கா), 16, ஆப்பீஸர்ஸ் லைன், ✆ : 0416 / 23060.
3,8,13,18,20,27,28,29-ந்தேதி	- சென்னை	: காலை	9 to 2 மேலே உள்ள சென்னை முகவரியில், ✆ : 044 / 6424285, 6427638.
4-ந் தேதி	- கடலூர் (S.A.Dt.)	: காலை	9 to 11 ஆந்தரசு உட்லண்ட்ஸ் ஹோட்டல், ✆ : 04142 / 30707, 30717
4-ந் தேதி	- விழுப்புரம்	: பிற்பகல்	2 to 3 ஹோட்டல் ஆனந்தா, பஸ்நிலையம் எதிரில், ✆ : 04146 / 22962.
4-ந் தேதி	- திருவண்ணாமலை	: மாலை	5 to 6 ராதா லாட்ஜ் பஸ் நிலையம் எதிரில் ✆ : 04175 / 22536.
9-ந் தேதி	- பெங்களூர்	: காலை	11 to 12.30 ஹோட்டல் பிராட்வே, கல்பனா தியேட்டர் அருகில் கெம்பே கவுடா ரோட் ✆ : 2265374
9-ந் தேதி	- ஓசூர்	: மாலை	3 to 4 சீனிவாசா லாட்ஜ், பாகலூர் ரோட், ✆ : 04344 / 22699.
9-ந் தேதி	- கிருஷ்ணகிரி	: மாலை	5 to 6 அமராவதி லாட்ஜ், ✆ : 04343 / 22120.
12-ந் தேதி	- சேலம்	: காலை	11.30 to 12.30 ஹோட்டல் செல்வம், புதிய பஸ் நிலையம் எதிரில், ✆ : 0427 / 449333.
12-ந் தேதி	- ஈரோடு	: மாலை	4 to 5 ஹோட்டல் ஆக்ஸ்போர்டு, பஸ் நிலையம் எதிரில், ✆ : 0424 / 70761.
13-ந் தேதி	- கோயம்புத்தூர்	: காலை	9.30 to 12.30 சேரன் பேலஸ் லாட்ஜ் சாந்தி தியேட்டர் பின்புறம் ✆ : 0422 / 302211, 302220
14-ந் தேதி	- மதுரை	: காலை	9 to 11 ஹோட்டல் கிராண்ட் சென்ட்ரல், மேலப் பெருமாள் மேஸ்திரி தெரு, ✆ 0452 / 743941
14-ந் தேதி	- தஞ்சாவூர்	: மாலை	5 to 6 அசோகா லாட்ஜ், ✆ : 04362 / 30021 / 30022
15-ந் தேதி	- திருச்சி	: காலை	9 to 11 ஹோட்டல் ஆனந்த், சென்ட்ரல் பஸ் நிலையம் அருகில், ✆ : 0431 / 460545.
15-ந் தேதி	- நாமக்கல்	: பிற்பகல்	2.30 to 3.30 ஹோட்டல் தேவி அன்னபூர்ணா, ✆ : 04286 / 20433
18-ந் தேதி	- ஆம்பூர்	: காலை	10 to 11 சம்பங்கி லாட்ஜ், ✆ : 04176 / 43311.
18-ந் தேதி	- காஞ்சிபுரம்	: மாலை	4 to 5 ராஜம் லாட்ஜ், பஸ் நிலையம் அருகில் 9, காமராஜர் தெரு, ✆ : 04112 / 22519.
19-ந் தேதி	- சென்னை	: காலை	9 to 2 மேலே உள்ள சென்னை முகவரியில், ✆ : 044 / 6424285, 6427638.
22-ந் தேதி	- தர்மபுரி	: காலை	9 to 10 ஸ்ரீ மாதேஸ்வரா லாட்ஜ், ✆ : 04342 / 60226.
22-ந் தேதி	- திருப்பூர்	: பிற்பகல்	2 to 3 ராமகிருஷ்ணா லாட்ஜ், ✆ : 0421 / 740418.
22-ந் தேதி	- உடுமலைபேட்டை	: மாலை	6 to 7 குறிஞ்சி லாட்ஜ், பஸ் நிலையம் எதிரில் ✆ : 04252 / 24353.
23-ந் தேதி	- திண்டுக்கல்	: காலை	9 to 10.30 ஹோட்டல் குறிஞ்சி, பஸ் நிலையம் பின்புறம் ✆ : 27017.
23-ந் தேதி	- தூத்துக்குடி	: மாலை	5 to 6 ஹோட்டல் ஆஸ்வின், தேவர் புரம் ரோடு, ✆ : 0461 / 327780
24-ந் தேதி	- திருநெல்வேலி	: காலை	8.30 to 11 ஹோட்டல் ஸ்ரீ சித்தரபதி, மதுரை ரோடு, ✆ : 0462 / 23312.
24-ந் தேதி	- நாகர்கோவில்	: பிற்பகல்	2 to 3 ஹோட்டல் சரவண, மீனாட்சிபுரம், ✆ : 04652 / 25689.
25-ந் தேதி	- விருதுநகர்	: காலை	9 to 10 அண்டன் லாட்ஜ், மதுரை ரோடு, ✆ : 04562 / 45537.
25-ந் தேதி	- கரூர்	: பிற்பகல்	2.30 to 3.30 மணி வரை அரசி லாட்ஜ், ஜவகர் பஜார், ✆ : 63763.

Dr.CKM
DIVINE HERBAL CENTRE

தகவல்: டாக்டர் அவர்களின் மூலிகைகள் பற்றிய 22 வருட அனுபவ ஆராய்ச்சிகள் அடங்கிய 'எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்' என்ற புத்தகத்தினை பதிவுத்தபாலில் பெற ரூ.50/-ம் இயற்கை உணவுகளின் பெருமைகள், அதிசய உண்மைகள் அடங்கிய 'என்றும் இளமை காக்கும் இயற்கை உணவுகள்' என்ற புத்தகத்தினை பதிவுத் தபாலில் பெற ரூ.45/-ம் மூலிகை மகிமை பற்றிய ஆடியோ கேசட்டை பெற ரூ.37/-ம் தலைமை முகவரிக்கு M.O. அல்லது D.D. அனுப்பவும்.

மார்ஜின் மொழி

பணத்தை வீணாக அழிப்பதைவிட பணத்தில் பேராசை வைப்பதே மனிதனை அதிகமாக நாசம் செய்யும். — கோலியர்

இது ‘அந்த’ சக்தி சமாசாரம் அல்ல!

ரொம்ப பக்திப் பரவசத்தில் இருக்கிறார் ஸ்ரீவித்யா. ‘சக்தி’ பக்தி!

என்னடா விஷயம் என்று கேட்கப் போனால் சக்தி பீடம் என்றொரு மெகா டீவி சீரியலில் நடித்துக் கொண்டிருக்கிறாராம்.

“நான் தயாரிக்கிறேன் என்று தவறாகச் செய்தி வந்து விட்டது. தப்பு. தப்பு. நான் நடிக்கிறேன். அவ்வளவே” என்றார் முதல் முதல் முதலில்.

என்ன திடீரென்று டீவி சீரியல்? அதுவும் சக்தி பக்தி?

நா தழுதழுக்க ஸ்ரீவித்யா சொன்னதன் சாராம்சம் பின்வருமாறு:

கொஞ்ச நாள் முன்பு திருவக்கரை காளி கோவிலுக்குப் போயிருக்கிறார் ஸ்ரீ. (ஜெ. வந்து நூற்றுக்கணக்கில் பட்டுப்புடவைகளை ஹோமகுண்டத்திலிட்டுப் பிரமாதமான யாகம் நடத்தினாரே, ஞாபகமிருக்கிறதா? அதே ஊர், அதே கோவில்)

தன் சொந்த சோகங்களையெல்லாம் காளி முன் கடை விரிக்க, ‘எல்லாம் நல்லபடி நடக்கும்; கவலையை விடு’ என்றொரு குரல் காதில் ஒலித்ததாம்.

அதுதான் இன்ஸ்பிரேஷன். சக்தி பீடங்கள் பற்றி ஒரு டீவி சீரியலில் நடிக்க வேண்டும் என்று ஆவல் பிறக்க, தம் ஆவலை இயக்குநர் மா. லட்சுமணன் என்பவரிடம் வெளியிட்டிருக்கிறார்.

ஸோ, சீரியல் உருவாகிக் கொண்டிருக்கிறது!

என்ன விசேஷம் இதில்?

காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை உள்ள அத்தனை இடங்களிலும் இருக்கிற சக்தி பீடங்களை ஒன்றுவிடாமல் தொட்டுக் காட்டப் போகிறார்களாம். ரெஃபரன்ஸுக்காக சகட்டுமேனிக்கு இது குறித்துப் படித்துக் கொண்டிருக்கிறார்கள் இப்போது. (500 புத்தகங்கள்!)

ராமாயணம், மகாபாரதம் மாதிரி வாரக் கணக்கில் மட்டுமல்ல; தரத்திலும் மெகா சீரியலாக இது இருக்க வேண்டும் என்பது ஸ்ரீவித்யாவின் ஆசை + இலக்கு!

சாதனை செய்க பராசக்தி.

— ஈஸ்வர்தாஸ்



• ஸ்ரீவித்யா



1

ஜெயாரெம்

"தலைவா... கொஞ்சம் அழுத்திக்கோ" ஒரு சின்ன விசிலின் பின் சொன்னான் கண்டக்டர்.

பஸ் பிதுங்கி வழிந்தது. மறு நாள் நிறையக் கல்யாணங்கள். கொழுத்த முகூர்த்தமாம்.

ஒரு நிமிடம் முன்புதான் ஒரு ஜன மந்தையை சாவடித்திருப்பத்தில் செலாவணி செய்து விட்டு சந்து போல் குறுகிய சாலையில் ஓர் அரைவட்டம் தோள் வலிக்க ஸ்டியரிங் ஒடித்த வெறுப்பில் டிரைவர் எரிந்து விழுந்தான்.

"டேய் மச்சான்! இப்பதானேடா ஒருபுளி மூட்டை 'லோடை' எறக்கி ஏத்தினே. இதுக்குன்னே இன்னொரு வாட்டி அழுத்தவா.. இத்தவிட சந்தைக்கி கட்ட வண்டி ஓட்டலாம்."

"அதுக்கு இன்னா? வாங்கிட்டாப் போவுது."

"ஐயோ தலைவா... சூடாவுறியே... தோ பாரு சர்தார் ஐயங்கார் நிக்கிறாரு."

சன்னிதித் தெரு சாலைச் சந்திப்பில் அனந்தாச்சாரி நின்று கொண்டிருந்தார், நட்டு வைத்த அம்பு மாதிரி.

கையில் தோல்பை. நிற்பது பஸ்ஸுக்குத்தான். ஆனால் கை காட்டவில்லை.

காட்டமாட்டார். அது நிறுத்தமில்லை. நிறுத்தமில்லாத நிறுத்தம் கோரும் நபருமில்லை.

கண்டக்டர் சொன்ன பிறகு தான் டிரைவர் பிரேக்கை மிதித்தான்.

திடீர்க் குலுக்கல். பஸ்ஸின் உள்ளேயிருந்த சகல ஜீவன்களையும் உலுக்கி நிமிர்த்தியது.



மார்ஜின் மொழிகள்

○ மனிதனிடமுள்ள வற்றாத ஆசைகள்தாம் அவன் வாழ வேண்டுமென வற்புறுத்துகின்றன.
– கம்பர்லாண்டு

எல்லாப் பார்வைகளும் குத்தித்துளைக்க இலக்கு தேடின.

தானாக நிற்கிற பஸ்ஸுக்காகக் காத்திருக்கும் பாணியில் அனந்தாச்சாரி நின்றார்.

அவரைப் பார்த்து ஸ்டியரிங்கிலிருந்து இரு கைகளையும் எடுத்து டிரைவர் கும்பிட்டார்.

பதிலுக்குக் கும்பிட்டு விடுவிடுவென்று ஏறுகிற வழி தேடி பின்னால் நகரப் போனார்.

இறங்கும் வழியருகே டிக்கெட் போட்டுக் கொண்டிருந்த கண்டக்டர் இரண்டு தலைகளை விலக்கி முகம் காட்டினான்.

"சர்தார்ஜி... இப்படி வாங்க... யோவ் தலைப்பாக்கட்டு கொஞ்சம் நவுரேன்... அண்ணாத்த நீங்க கொஞ்சம் 'லெப்ட்டு'லே ஸைடு வாங்குங்க."

'சர்தார்ஜி' பஸ்ஸில் ஏறினார்.

பரந்த முகம். சதுர வடிவம். வடக்கத்தி வெளுப்பு. வெள்ளைப் பீங்கானில் சிம்னிப் புகை படர்ந்த மாதிரி வெயிலும் வயதும் ஒரு சிறு கருமை தீட்டியிருந்தன.

நெற்றியில் திரு சூர்ணம்.

"முனிசாமி... டிக்கெட் எறங்கலேன்னா நீ ஏன் நிறுத்தறே... தோ பாரு... எத்தனை பேருக்கு என்னால சிரமம்" என்று வலது முழங்காலில் கை ஊன்றி ஏறி நிமிர்ந்தார் அனந்தாச்சாரி.

பஸ் கூரையை அவர் நரைக் குடுமி தொட்டது.

அவர் ஏறியதும் உள்ளே இரண்டு வரவேற்புகள்.

"வணக்கம் சர்தாரண்ணா."

"சலாம் ஆலேகும் சர்தார்ஜி." முதல் குரல் இரட்டைக் கரை துண்டு போட்டிருந்தது.

இரண்டாவது குரல் தலையில் கறுப்பு வெல்வெட் தொப்பி. தாடி வெளுப்பு.

"வணக்கம்.. வணக்கம் கலையரசு.. நீ உட்காருப்பா.. வாலேகும் சலாம் கலைமான் சாஹேப்... நீங்க உட்காருங்க..."

கன்னியாகி நிலவினில் ஆடி...

எழுந்தவர்
கள் உபசார பாவலாவுக்கு
எழவில்லை. அவர் நாலைந்து முறை
சொல்லியும் அவர்கள் நிற்பதிலேயே அது தெரிந்தது.
பஸ்ஸின் முழுக் கூட்டமும் அந்த விசேஷ மரியாதை வழங்கப்
படுவதையும், ஏற்கப்படாததையும் கவனித்தது.

பத்ரி நாராயணனும் கவனித்தான்.

அவன் பஸ்ஸின் வலது வரிசையில் முன்னிரண்டு இருக்கைகள் தள்ளி ஜன்னல் ஓரம் அமர்ந்திருந்தான்.

வையவன்

பின்கோடை வெயில். நாளெல்லாம் தீ மிதித்தும் இன்னும் திருப்தி இல்லை அதற்கு. சூளை அடுப்பருகே நிற்பது போல் முகம்

கட்டது. அவன் கன்னத்தில் மூன்று மணி மஞ்சள் வெயில் அறைந்தது.

பத்ரி கூலிங்கிளாஸ் போட்டிருந்தான். ரிம்லெஸ். எதிர் இருக்கை முதுகு விளிம்பைத் தொட்ட இடது கையில் ரோலக்ஸ் வாட்ச் மின்னியது. பாம்பு விரலில் நவரத்தின மோதிரம்.

டீ ஷர்ட். இள மஞ்சள் நிறம். இன் பண்ணியிருந்தான். சாம்பல் நிற ஜீன்ஸ். ரைக் ஷூ.

'ஹோ நீர்தான் சர்தார் அனந்தாச்சாரியா.' பத்ரி மனசிற்குள் அவரைக் கூப்பிட்டான். பேசினான்.

எனக்கு நீங்கள் எதிரியா!

உங்களுக்கு நான் எதிரியா!

வருந்துகிறேன்.

மன்னியுங்கள்.

நீங்கள் எதிரிகளை மன்னிப்பவராமே. ஒரு படி மேலே, நேசிப்பவர் என்றும் கேள்விப் பட்டேன்.

எல்லாம் அந்தப் பெரிய கிழவர்- அது தான் உங்கள் மகாத்மா மிஸ்டர் காந்தியின் கோளாறு வழித்தடம்.

இதைச் சொல்வதில் எனக்கு வருத்த மில்லை. நான் எதிரிகளை மன்னிப்பதில்லை. அது என் கொள்கை.

சாத்தியமானால் சமரசம். இல்லையேல் ஒரு புல்டோசர் சுவரம்.

இது இந்த யுகத்தின் தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம்.'

பத்ரி மனசில் உரையாடல் நிறுத்தி அனந்தாச்சாரியைக் கவனித்தான்.






ஷபனா ஆஸ்மி, அந்தக் கால நட்சத்திர நடிகை அருணா இரானியுடன் நடிக்கும் ஹிந்தி படம் ஸாஸ். (saaz). உடன் நடிப்பவர் ஜாகிர் ஹுசைன் – 'வா தாஜ்!' என்று தேயிலை விளம்பரத்தில் வரும் தபலா வித்வான்! இசையும் அவர் பொறுப்பில் – இயக்கம் சாய் பரஞ்பய். லதா மங்கேஷ்கர்–ஆஷா போன்ஸ்லே சகோதரிகளின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு திரைக்கதை அமைத்துள்ளார்கள். பரபரப்பாக ஓடும் என எதிர் பார்ப்பு...

கலையரசும் கலைமானும் நின்று பார்த்து உட்கார்ந்து விட்டனர். அனந்தாச்சாரி எவருடைய இருக்கையையும் ஏற்கவில்லை.

ஒரு கை கைப்பிடிக் கம்பி யைப் பிடித்திருந்தது. மறு கை அவர்கள் இருவரையும் ஆசீர் வதிப்பதுபோல் அமர்த்திற்று.

பத்ரி அவர் புன்னகையைக் கவனித்தான்.

எழுந்து நின்ற கௌரவத் திற்கு நன்றி. ஏற்காததால் மனக் நோகக் கூடாது என்று மருந்து போடும் கனிவு தவிர அதில் ஓர் இங்கிதப் பெருமிதம்.

குழைவில்லை. நைச்சிய மில்லை.

மனசில் பலமில்லாதவ னால் இப்படிப் புன்னகை செய்ய முடியாது.

'என்னை உங்களுக்குத் தெரியாது. உங் களை நானும் இப்போதுதான் முதல்முறை யாகப் பார்க்கிறேன்'

'மிஸ்டர் அனந்தாச்சாரி... பர்மிட் மீ டு கால் யூ ஸோ'

அவனது மானசீக உரையாடல் ஆங்கிலத் துக்குத் தாவிற்று. பழக்க தோஷம்.

'உங்களுக்கு எழுபத்தைந்து வயதா? நம்ப முடியவில்லை. என் மதிப்பீடு அறுபது. எங்கள் எம்.டி. உங்களைப் பற்றிச் சொன்னபோது நரைத்துத் தளர்ந்து குறுகிக் கூன் விழுந்து நிகழ் காலத்தைச் சர்வ நேரமும் சபிக்கும் ஒரு நாற் வாசக் கிழத்தை நான் கற்பனை செய்து கொண்டேன்.

கலைமானுக்கு நேரே அவர் நின்றிருந்தார். போக வர வழிவிட்டுக் கம்பியில் சாய்ந்து.

"என்னாங்கோ சர்தார்ஜி, டவுனுக்கு வர்றீங்களா?" கலைமான் கேட்டார்.

"இல்லே ஸ்டேஷன் வரைக்கும்"

"பெங்களூர் போறீங்களா?"

"இல்லே... மெட்ராஸிலேர்ந்து பேத்தி வர்றா."

பத்ரி மனசிற்குள் அவரோடு உரையாடல் தொடர்ந்தான்.

'ஹவ் நைஸ்.. உங்க பேத்தி வர்றாளா? அவளை எங்க எம்.டி. வர்ணிச்சார். கட்டியா... துடுக்கா.. சுறுசுறுன்னு இருப்பாளாமே'

பத்ரி தன் எம்.டியின் வர்ணனையை நினைத்துக் கொண்டான்.

"எடுப்பா வாட்ட சாட்டமா பருமன் இல்லாமே இருப்பா. உதடு நல்ல சிவப்பு, கடைஞ்சு வச்ச மூக்கு. கண்ணு என்ன துள்ளல் துள்ளுது தெரியுமோ?"

இளைஞனிடம் பேசுகிறோம். ஒரு பெண்ணைப் பற்றிப் பேசுகிறோம் என்ற சொரணை இல்லாமல் நாக்கில் நீர் ஊறப் பிதற்றிக் கொண்டு போனார் அந்த எம்.டி.

நாற்பது கடந்தாலே கூச்சம் விட்டு நாக்கு தடித்து விடும் போலிருக்கிறது.

பத்ரி நாராயணன் மன நோயாளியல்ல. ஆனால் அனந்தாச்சாரியோடு மனசுக்குள் உரையாடுவது ஒரு விடுதலை தந்தது.

அவ்வாறே அவனது எம்.டியை பளார் பளாரென்று கன்னத்தில் அறைவது, சட்டை டையோடு தூக்கி தலையைச் சுவரில் மோதுவது அவனுக்குப் பிரியமான விடுதலை - மனசுக்குள்தான்.

நர்மதா என்ற பெண்ணைப் பற்றி அவர் தந்த வர்ணனைக்கு மட்டுமல்ல. எடுத்தெறிந்து பேசும் ஆணவம். தானே மகாக் கொம்பன் என்ற கர்வம். எல்லாவற்றிற்கும்!

கிழக்கும் மேற்கும் மணல் வெளி தெரிந்தது. பாலாறு பொங்கிப் பெருகிப் பல வருஷம் ஆயிற்று.

அனந்தாச்சாரி கிழக்கே பார்த்துவிட்டு கழுத்து வலிக்கத் திரும்பி மேற்கே பார்த்தார்.

அகன்ற ஆற்றுப்பரப்பு மனித ஆக்கிரமிப்பில் குறுகிக் குன்றியதை அவர் பார்வை ஆயாசமாக வட்டமிட்டது.

பத்ரி அதைக் கவனித்தான்.

ஏக்கம், சோகம், வேதனை தாங்கும் உறுதி. கருணை.

என்றோ பார்த்த ஒரு சர்தார் வல்லபாய் படேல் புகைப்படம் நினைவுக்கு வந்தது.

இந்த மனிதரிடம் ஏதோ ஒரு படேல் அம்சம்! அது தெரிந்து தான் இவரை சர்தார் என்கிறார்களோ?

அனந்தாச்சாரி இளைஞன் ஒருவன் தன்னையே பார்ப்பதைக் கவனிக்கவில்லை. அவர் சிந்தனை காலம் கடந்திருந்தது.

அவர் மனவெளியில் பல பாலாற்று வெள்ளங்கள் ஓடின. அடுத்தடுத்து வந்த வெள்ளங்கள்.

இரு கரையும் திணறி நிற்க, தாம்போகிப் பாலமே மூழ்க பரிசல் விட்ட வெள்ளங்கள். கரையில் கால் சறுக்கியவரைச் சுழலில் கொண்டு போய்ச் சொருகிய ஆட்கொல்லி வெள்ளங்கள்.

காட்சி மாறி வெள்ளம் வற்றி, மணல் சுட்ட ஆற்று வெளி. உப்புமா ரவை போல் கைக்கு இதமான நொய் மணல். கண் போன தூரம் வெளேரென்று வெள்ளைப்பாவு ஓடிய மணல்.

"அனந்து... நான் காவேரிக்காரிதாண்டா... உங்க தோப்பனார் என்னைக் கல்யாணம் பண்ணிண்டு வரச்சே ஒன்பது - வயசு நேக்கு. இஞ்ச வந்துதான் ஆளானேன்.

"காவேரி மணலை விட இந்த மணல்தாண்டா நேக்கு ஒசத்தி. நெலா வெளிச்சத்திலே நதியில ஜலம் சொட்டுக்கூட இல்லாதப்போ நானும் சன்னதித் தெரு குட்டிகளும் கோலாட்டம் என்ன, கும்மாளம் என்ன... அதுவும் அந்த நரசிம்மாச்சாரி பொண்ணு இருந்தாளே அம்புஜு... அவ வல்லாள கண்டி.. விளையாடலாம்னா போதும் டக்குனு வந்து நின்னுடுவோ"

அம்மா சொல்வாள் அடிக்கடி.

ஒரே கிராமபோன் பிளேட். கீறல் விழுந்த பிளேட் கேட்கிற

கம்ப்யூட்டர் தோற்றது!



இந்த நூற்றாண்டு முடிந்து 2000 ஆண்டு ஆரம்பமாகும்போது உலகெங்கும் உள்ள கணிப்பொறிகளுக்கு ஒரு பிரச்னை ஏற்படப் போகிறது! அப்போது எல்லா கம்ப்யூட்டர்களும் தேதியை '00' என்றே காட்டும். அதுமட்டுமல்ல, அந்த நள்ளிரவில் எல்லா கணிப்பொறிகளும் '00'என்பதை '2000' என்று அல்லாமல் '1900' என்று நினைத்துக் கொள்ளும்! இதனால் பல்வேறு துறைகளிலும் இயங்கும் கணிப்பொறிகள் அசட்டுத் தேதிக் குழப்பத்தை விளைவிக்கப் போகின்றன! இதற்கு என்ன தீர்வு?

இது குறித்துத்தான் இன்று கணிப்பொறி நிறுவனங்கள் மண்டையை உடைத்துக் கொண்டு, தேதி மாற்று புரோக்கிராம்களைத் தயாரித்த வண்ணம் உள்ளன. நிலைமையைச் சீர் செய்ய பிரிட்டனில் மட்டும் 31 பில்லியன் பவுண்டுகள் (சுமார் 18,000 கோடி ரூபாய்) செலவு ஆகப் போகிறது என்று ஒரு கணிப்பு சொல்கிறது!

ஆதாரம்: சண்டே டைம்ஸ்
தகவல்: ஆர்.கோபால கிருஷ்ணன்

மாதிரி இருக்கும். ஆனால் அவள், தான் தோய்ந்து பிறரைத் தோய வைத்து விடும் ஒரு வசீகரம் பிரயோகிப்பாள்.

அனந்தாச்சாரியின் மனசு மலர்ந்தது.

நடந்தவை நடந்தவரை நன்றாயிருந்தன. எதிலும் குறைவில்லை.

இன்று அவை இல்லை. மழை மௌனம் சாதிக்கிறது. திடீரென்று எக்களித்து வந்து சட்டென்று திரையை மூடி விடுகிறது. அடேடே நீங்கள் எல்லாம்தான் தொழில் மயமாகிவிட்டீர்களே என்ற கிண்டலோ!

ஆம்பூரின் தோல் ஷாப்புகள் மெல்ல மெல்லப் படரும் படை மாதிரி பின்னால் வாணியம்பாடி வரை படுத்துக் கை நீட்டி நகர்ந்து நகர்ந்து முன்னேறி வருகின்றன.

குடிக்கிற தண்ணீர் சவறு பட்டு வருகிறது. புலம்பலாமோ? ஏங்கலாமோ?

அவர் ரயிலில் வரவிருக்கிற பேத்தி நர்மதாவை நினைத்தார்.

அவளும் அவரும் தளபதி சிப்பாய் என்று ஒரு விளையாட்டு விளையாடுவார்கள். அவளுக்காக அவரே கண்டுபிடித்தது.

உலகில் நிலவும் ஒவ்வொரு விளையாட்டும் தாத்தாக்கள் தம் பேரர்களுக்கும் பேத்திகளுக்கும் கண்டுபிடித்தவைதானோ?

இருக்கலாம்.

"தாத்தா நீ சோல்ஜரா— கமாண்டரா?"

"நான் சோல்ஜர்"

"போ... நீயே எப்பப் பார்த்தாலும் சோல்ஜர்!"

"சோல்ஜர்னா சௌகர்யம். கட்டளை கிடைச்சதும் சுடலாம். ஓடலாம். ஒளியலாம். தூங்கி வழிய வேண்டாம்"

"நீ இன்னிக்குத் தூங்கி வழியேன். நான் சொல்ஜரா இருக்கேன்"

"சரி இரு"

அனந்தாச்சாரி கட்டளை இடுகிறார். நர்மதா நாலு காலில் தவழ்ந்து முன்னேறி இடதுகையை முன் நீட்டி சுண்டு விரலில் வலது கைச் சுட்டுவிரல் கோத்து எதிரிகளைச் சுட்டுத் தள்ளுகிறாள்.

பத்ரி பஸ்ஸிலிருந்து அவருக்குப் பின்னால் இறங்கினான். அவன் பெங்களூர் போக வேண்டும்.

'சைட் இன்ஸ்பெக்ஷனுக்கு' வந்த ஜீப் நடுவில் கெட்டுவிட, பெங்களூர்ப் பயணத்தை ஆம்பூரிலிருந்து தொடங்க வேண்டியவன் முன்னே ஆரம்பிக்கிறான்.

டிக்கெட் வாங்க வேண்டும்.

அவர் போகட்டும். அனந்தாச்சாரி காற்று மாதிரி விறுவிறுவென்று நடப்பதைப் பின்னாலிருந்து கவனித்தான்.

இவர் எப்படி இந்த வயதில் இப்படி முறுக்கையும் வேகத்தையும் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்?

பத்ரி டிக்கெட்டோடு உள்ளே நுழையவும் ரயில் வந்து நிற்கவும் சரியாக இருந்தது.

"தாத்தா!"

பத்ரியோடு அவன் பக்கத்தில் நாலைந்து பேர், டிக்கெட் கலெக்டர் உட்படத் திரும்பிப் பார்த்தார்கள்.

அப்படி ஒரு கூச்சல்.

நர்மதா தோளில் ஒரு தொங்கு பையும் கையில் சூட்கேஸுமாய் தூரத்தில் கூச்சலிட்டாள்.

அனந்தாச்சாரி அவளை நோக்கி ஓடாத குறையாக நடந்தார்.

அவன் துணுக்குற்றான்.

மின்சாரம் நின்ற பெரிய ஹால் விளக்குகள் குப்பென்று உயிர்ப்பெற்ற பிரகாசம்.

அந்தச் சிவப்பில், முகவட்டத்தில் கை வீச்சில், தலை நிமிர்வில் நான் நான் என்று முந்தி நின்றது அழகின் துள்ளல்.

யாரோ தன்னைப் பார்க்கிறான் என்ற உணர்வு உறைக்க, அவள் பளிச்சென்று பத்ரியைத் திரும்பிப் பார்த்தாள்.

பொடேரென்று அறைகிற பார்வை அது. எல்லாப் புற நினைவுகளையும் தூக்கி எறிந்து ஒரு சக்திக்கனல் தன்னைத் தாக்குவதாக அவன் உணர்ந்தான்.

"நீ ஏன் ஸ்டேஷனுக்கு வந்தே! நான் வந்துற மாட்டேனா?" தாத்தாவைப் பார்த்த களிப்பைக் கோபமாக மாற்றினாள் அவள்.


(தொடரும்)



"உங்க கட்சி அமைதிப்பாதைக்கு திரும்பிக்கிட்டிருக்குனு எப்படிச் சொல்றே?"

"நேற்று நடந்த பொதுக்குழுவில் ஏழே ஏழு பேருக்கு மட்டும்தான் உதை... சென்ற பொதுக்குழுவில் எழுபது பேருக்கு உதை கிடைத்ததே!"

— உ. ராஜாஜி





1997 ஜூலை 6
ஈசுவர ஆனி 22
மலர் : 55
இதழ் : 49

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



சொதப்பல் சாம்பியன் சி.பி.ஐ.!


'லல்லு பிரசாத் யாதவ் வரலாறு காணாத ஊழல் புரிந்திருக்கிறார் என்பது தெரிந்தும் அவரை அசைக்க முடியவில்லை. பீஹார் முதல்வர் மீது வழக்குத் தொடர ஆளுனர் அனுமதிக்காகக் காத்திருக்க வேண்டியிருந்தது. வாராது வந்த மாமணிபோல் அந்த அனுமதியும் வந்து சேர்ந்தது. வழக்கைத் தன் பொறுப்பில் ஏற்றுள்ள சி.பி.ஐ. இனி சுறுசுறுப்பாகச் செயல்படும் என்று நாடே எதிர்பார்ப்புடன் காத்திருந்தது.

'அப்பாடி, நாட்டில் நீதி-நேர்மை இன்னும் மடிந்து போய்விடவில்லை...' என்று நிம்மதிப் பெருமூச்சு விடுகிற நேரத்தில், சி.பி.ஐ. வழக்கமானதொரு குளறுபடியைச் செய்து வைத்திருக்கிறது.

மாட்டுத்தீவன ஊழல் தொடர்பான குற்றப் பத்திரிகையை பீஹார் உயர்நீதிமன்றத்தில் முறையாகத் தாக்கல் செய்யத் தவறியிருக்கிறது. நீதிபதி லால், சி.பி.ஐ. அதிகாரிகளை விளாசியிருக்கிறார். குற்றம்சாட்டப்பட்ட 56 பேரைக் கைது செய்ய 'வாரண்ட்' பிறப்பிக்க முடியாது என்று மறுத்திருக்கிறார். காரணம் - தேவையான ஆவணங்களையும் சாட்சியங்களையும் சமர்ப்பிக்க சி.பி.ஐ. தவறியிருக்கிறது! இப்படி அரை குறையாக, அவசரக் கோலமாக சி.பி.ஐ. செயல்பட்டதற்காகக் கண்டனம் கூடத் தெரிவித்திருக்கிறார் நீதிபதி.

சி.பி.ஐ. தரப்பு வழக்குரைஞரோ, 'ஆவணங்கள் எல்லாம் தரப்பட்டுள்ளன' என்று முதலில் வாதாடி விட்டு, பின்னர் 'இல்லை சிலது விட்டுப் போயிருக்கின்றன... அவற்றை மீண்டும் சமர்ப்பிக்கிறோம்...' என்று அசடு வழிந்துள்ளார்!

குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவுள்ள 56 பேர் பட்டியலில் டாக்டர் மிஸ்ராவின் பெயரைக்



காணோம். இந்த ஊழல் வழக்கில் பரபரப்பாக அடிபட்ட அவர் பெயர் எப்படி விட்டுப்போயிற்று என்ற கேள்விக்கும் சி.பி.ஐ. தரப்பில் சரியான பதில் இல்லை!

சிறப்பு நீதிமன்ற (designated court) நீதிபதி லால், சி.பி.ஐ.க்குக் கண்டனம் கூறியபிறகு, பாட்னா உயர்நீதிமன்றத்தின் கண்காணிப்பு பெஞ்சும் அதிருப்தி தெரிவித்துள்ளது. குற்றம்சாட்டப்பட்டவர்களுள் ஒருசிலரை மட்டும் சி.பி.ஐ. கைது செய்திருப்பது நியாயமல்ல என்று சுட்டிக்காட்டியுள்ளது.

'எல்லோரையும் கைது செய்தால் சட்ட - ஒழுங்கு பிரச்னை ஏற்படுமே!' என்று ஏற்க முடியாதவொரு விவாதத்தை, இதற்குப் பதிலாக்கியிருக்கிறது சி.பி.ஐ. 'இது ஒப்புக் கொள்ள முடியாத பதில் என்று கூறி சி.பி.ஐ.யின் பாரபட்சத்தைச் சாடியுள்ளது உயர்நீதி மன்றம். சி.பி.ஐ. இணை டைரக்டர் பிஸ்வாஸ், 'இல்லையில்லை, சட்டம் ஒழுங்குப் பிரச்னையெல்லாம் நிஜ காரணமல்ல...' என விளக்கம் தர முயன்றுள்ளார். வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அடுத்த விசாரணையின்போது சி.பி.ஐ. முறையாக ஆவணங்களைச் சமர்ப்பித்துவிடக்கூடும். ஆனால், வெண்ணெய் திரளும் நேரத்தில் தாழியை உடைக்கும் விதமாக சி.பி.ஐ. செயல்படுவது இது முதல் முறையல்ல.


சென்னையில் வழக்குரைஞர் விஜயன் தாக்கப்பட்ட வழக்கிலும் சி.பி.ஐ. ஒழுங்காகச் சாட்சியங்களைச் சமர்ப்பிக்க முடியாமல் திணறி, தோற்றிருக்கிறது. எஸ்.டி.எஸ்ஸும் ஆதிராஜாராமும் விடுதலையாகிவிட்டார்கள்.

ஜெயின் ஹவாலா டைரி வழக்கிலும் சரி, செயின்ட் கிட்ஸ் வழக்கிலும் சரி, ஆதாரங்கள் சமர்ப்பிப்பதிலும் வழக்கைத் திறம்பட நடத்துவதிலும் சி.பி.ஐ. படுதோல்வி கண்டிருக்கிறது.

இந்தத் தொடர் தோல்விகளைப் பார்க்க, 'இந்நாட்டில் நீதியும் நேர்மையும் இனி எங்கே ஜெயிக்கும்' என்ற விரக்தியும் மனச் சோர்வுமே மக்களுக்கு ஏற்படும்.

சட்டத்தையும் புலனாய்வுத் துறையையும் பகுத்தறிந்து எந்தப் பிரிவு தவறியிருக்கிறது என்கிற முடிவுக்கு வரும் ஆற்றலெல்லாம் எளிய மக்களுக்கு இருக்காது. நீதித்துறையும் தங்களைக் கைவிட்டு விட்டது என்கிற தவறான முடிவுக்கே கூட அவர்கள் வருவார்கள்.

இன்னொரு ஆபத்தும் விளையக்கூடும். லல்லு முதலான ஊழல் பேர்வழிகள் இந்தத் தற்காலிக வெற்றியைப் பெரிதாக்கி, தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வார்கள். 'பாருங்கள்,



ஆதாரங்கள் சமர்ப்பிப்பதே கஷ்டமாக இருக்கிறது... நானா குற்றவாளி?' என்று எளிய மக்களை மூளைச் சலவை செய்யவும் தயங்க மாட்டார்கள்.

நாட்டின் முக்கியமான புலனாய்வுத் துறை இத்தகைய அவலத்துக்குப் பொறுப்பாகியிருப்பது மிகவும் கேவலமான நிலைமை.

குறிப்பாக, லஞ்ச ஊழல் குறித்த நாடு தழுவிய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில், அரசியல்வாதிகள் ஊழல் செய்தால் நீதித் துறையிடம் முறையிடலாம் என்ற நம்பிக்கை பரவிவரும் சமயத்தில், அந்த நீதித் துறையும் சி.பி.ஐ.யைச் சொடுக்கிவிட்டும் முடுக்கிவிட்டும் செயல்பட வைக்கின்ற காலகட்டத்தில், நாட்டின் பிரதம புலனாய்வுப் பிரிவிடம் மக்களுக்கு இருக்கிற எதிர்பார்ப்பு ஏராளம்.

அந்த எதிர்பார்ப்பில் திரும்பத் திரும்ப மண்விழுமேயானால், சி.பி.ஐ. அடியோடு மதிப்பிழந்து விடும் என்பதை மத்திய அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

தனது கட்டுப்பாட்டிலிருக்கும் சி.பி.ஐயை அரசு தூசி தட்டி, புதுப்பித்து சுறுசுறுப்பாக இயங்கச் செய்ய வேண்டும்.

புலனாய்வு அமைப்புகளுக்கு முக்கியமாக இருவிதமான பணிகள் உண்டு : துப்பு துலக்குதல், ஆதரங்கள் சேகரித்தல், ஒற்றாடல் என தடயவியல் சார்ந்த நடவடிக்கைகள் ஒருபுறம். அப்படிச் சேகரித்த தடயங்களை முறைப்படுத்தி வழக்கு தயாரித்து வெற்றியடைவது இன்னொருபுறம். இரண்டாவது வகைப் பணிகளுக்கு ஆழமான சட்ட அறிவும், சட்டரீதியான தர்க்க வல்லமை படைத்த நபர்களின் உழைப்பும் தேவை. இந்தப் பிரிவில் சி.பி.ஐ. மிகவும் பலவீனமாக இருக்கிறது என்பதே மீண்டும் மீண்டும் நிரூபணமாகி வருகிறது.

இப்பிரிவினை பலப்படுத்துவது உடனடியாக அவசியமாகிறது. பிரதமர் இதை உணர்ந்து செயல்பட வேண்டும். தலைசிறந்த சட்ட வல்லுனர்களை சி.பி.ஐக்குள் பிடித்துப் போட்டு, அதைச் செம்மைப்படுத்த வேண்டும். அரசியல் தலையீட்டை அடியோடு நீக்கி, சி.பி.ஐ. சுதந்தரமாகவும் சிறப்பாகவும் இயங்கச் செய்தால், ஊழலைப் பூண்டோடு ஒழிக்க முடியாது போனாலும் ஊழல் பேர்வழிகளிடத்தில் பயத்தையாவது உருவாக்கலாம். இல்லையானால் ஊழல் அரசியல்வாதிகள் இன்னும் துணிச்சல் பெற்று தங்கள் கொட்டத்தைத் தொடர்வார்கள்!

● ஆளுங்கட்சியின் மாநாடு என்றால் கட் அவுட்களால் நிரம்பி வழியும் என்பதுதானே நமது சமீபத்திய கலாசாரம்! நல்ல வேளையாக சேலம், தி.மு.க. சிறப்பு மாநாட்டில் அனேகமாக அந்தக் கலாசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது. நகரிலுள்ள மேம்பாலத்தின் ஓரத்தில் மட்டும் கலைஞர், ஸ்டாலின், வீரபாண்டி ஆறுமுகம் ஆகியோரின் கட் அவுட்கள் வைக்கப்பட்டிருந்தன. வேறு எங்குமே இல்லை. நகரமே மின் விளக்குகளால் ஜொலித்தது.

● மாநாட்டை நடத்தியவர் வீரபாண்டி ஆறுமுகம் என்பதால் அவர் தம்மைக் கொஞ்சம் அடக்கத்தோடு முன்னிலைப்படுத்திக் கொண்டார். மாநாட்டு ஊர்வலத்தைக் கலைஞர் பார்வையிடுகிற மேடைக்கு எதிரில் ஒரு பேனர். பாரதப் போரில் கண்ணன் அர்ச்சுனனுக்குத் தேரோட்டிய மாதிரி, 'பார் வேந்தே பார்! நமது படைக்களத்து வீரர்களின் அணிவகுப்பைப் பார்!' என்று எட்டுக் குதிரைகள் பூட்டிய ரதத்தில் கலைஞரை உட்கார வைத்து வீரபாண்டி ஆறுமுகம்



• மாநாட்டைப் பார்வையிடுகிறார் கலைஞர்.

சேலம் மாநாடு :

ஒரு நேர்முக வர்ணனை!

ஓட்டுகிறார். (அப்படியானால் கலைஞர் சோர்ந்து போகக் கூடிய நேரங்களில் அவருக்குக் கீதை மாதிரியான உபதேசங்களை வீரபாண்டி ஆறுமுகம்தான் செய்கிறாரா என்று யாரும் கேட்டு விடக்கூடாது!)

● மாநாட்டு வேலைகளுக்காக வீரபாண்டி ஆறுமுகம் இரண்டு மாதங்களுக்கு மேலாக சேலத்திலேயே தங்கியிருந்து வேலைகளைப் பார்த்தார். கூடவே தமிழ்க்குடி மகனையும் அழைத்து வந்திருக்கலாம். அப்படி அழைத்து வந்திருந்தால் பல்வேறு இடங்களிலும் எழுதப்பட்டிருந்த

• மேடையில் ஸ்டாலின்





அருகில் மாறன்.

வாசகங்களிலுள்ள வேறு சில பிழைகளோடு சந்திப் பிழைகளைத் தவிர்த்திருக்கலாம். உதாரணத்துக்கு ஒன்று : மாநாட்டு அழைப்பிதழில் 'ஜூன்' என்று அச்சிடுவதற்குப் பதிலாக 'ஜுன்' என்றுதான் அச்சிட்டிருந்தார்கள். பத்திரிகையாளர்களுக்கு அளிக்கப்பட்டிருந்த அடையாள அட்டைகளில் கூட ஜூன் என்கிற நெடில் குறிலாகியிருந்தது!

• ஸ்டாலின் பேச எழுந்ததும் கப்சிப்!



● ஊர்வலத்தின் வசதிக்காகச் சில இடங்களிலுள்ள சாலைத் தடுப்புகளைத் தாற்காலிகமாக அகற்றியிருந்தார்கள். மற்றபடி அரசுப் பணத்துக்குச் சேதமில்லை. மாநாட்டையொட்டி பல சாலைகள் போடப்பட்டிருந்தது சேலம் மக்களுக்கு லாபகரமான விஷயம்தான்.

● 'தமிழக அமைச்சரவை' என்கிற தலைப்பில் ஒரு பேனர். அதில் கலைஞரை மையமாக வைத்து எல்லா அமைச்சர்களின் படங்களும் வரையப்பட்டிருந்தன. சபாநாயகர் பழனிவேல் ராஜனின் படமும் வரையப்பட்டிருந்தது. பாவம், துணை சபாநாயகர்! போனால் போகிறதென்றாவது அவருடைய படத்தையும் வரைந்திருக்கலாம்!

● மாநாடு - ஊர்வலம் என்று மக்கள் நெரிசலால்தான் போக்குவரத்து பாதிக்கப்பட்டதே தவிர, மற்றபடி முதல்வர் வருகிறார் 'பராக் பராக்' என்கிற ஜபர்தஸ்துகளால் எந்த இடத்திலும் போக்குவரத்து பாதிக்கப்படாதது ஆறுதலான விஷயம்.

● முதல் நாள் (27-ம் தேதி) மாநாட்டுத் திடலிலுள்ள திராவிட இயக்க வரலாற்றுக் கண்காட்சியை முதல்வர் திறந்து வைத்தார். கண்காட்சியில் ஒரு வரலாற்றுக் கண்டு பிடிப்பு(!) 'இவை இரண்டும் இந்திய நாகரிகங்கள் என்று கருதப்படுகின்றன' என்று ஒரு விளக்கம்.

1. திராவிட நாகரிகம்; மண்ணின் மைந்தர்கள்; இனம் : திராவிடர்; மொழி : தமிழ். 2. ஆரிய நாகரிகம்; வந்தேறிகள்; இனம் : ஆரியர்; மொழி : சமஸ்கிருதம்.

இங்கு யாராவது சமஸ்கிருதம் பேசுபவர்கள் இருக்கிறார்களா?

● 'கலைஞர் 74' என்கிற தலைப்பில் புகைப்படக்காரர் யோகாவின் கண்காட்சியையும் கலைஞர் திறந்து வைத்தார். கலைஞரின் பல்வேறு விதமான படங்கள். கலைஞரின் குடும்பப் படங்கள் நிறைய இடம் பெற்றிருக்கலாமே என்பது ஸ்டாலினுடைய கருத்து. கலைஞரின் குடும்பப் படங்களெல்லாம் எதற்கு என்பது மாறனின் கருத்து. விளைவு? இருந்த இரண்டு மூன்று குடும்பப் படங்களும் மிஸ்ஸிங்!

● ஊர்வலத்துக்கு முன்பு நிர்வாகக் குழு கூட்டம். கூட்டம் முடிந்ததும் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார் கலைஞர். 'மாநாட்டுக்காகக் கட்டாய வசூல் நடந்துள்ளதே?' என்று கலைஞரிடம் கேட்கப்பட்டபோது, 'அப்படி யாராவது புகார் செய்தால் நடவடிக்கை எடுக்கிறேன்' என்றார் கலைஞர். 'ஹிந்து' பத்திரிகையில் வெளிவந்த சில செய்திகளைப் பற்றிக் கேட்டபோது 'ஹிந்துவில் வந்தால் அது வேதமா?' என்று கலைஞர் ரொம்பவும் உணர்ச்சிவசப்பட்டுப் பேசினார். 'சு. சுவாமி டெல்லிக்கும் சென்னைக்குமாக விமானத்தில் பறந்து கொண்டிருப்பதெல்லாம் யாருடைய செலவில் என்று தெரியுமா?' என்கிற ரீதியில் கலைஞர் கோபப்பட்டுப் பேசியது அதிர்ச்சியான விஷயங்கள்!

● சேலம் தி.மு.க. அலுவலகத்தில் நிர்வாகக் குழு கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது பத்திரிகையாளர்களெல்லாம் வெளியில் காத்திருந்தோம். அப்போது சென்னை சேப்பாக்கத்தின் தி.மு.க. பிரதிநிதியான அசோக் ஜெயின் வந்தார். ஒரு கையில் கலைஞரின் படம் போட்ட பெரிய மோதிரம். இன்னொரு கையில் ஸ்டாலின் படம் போட்ட பெரிய மோதிரம். கழுத்தில் கலைஞர் படம் வைத்த டாலர் செயின். இருபது சவரனில் கலைஞர் படம் போட்ட பிரேஸ்லெட் என்று வித்தியாசமாக வந்தார். கேட்டபோது, 'யாராவது இதையெல்லாம் அடிச்சுப் பிடுங்கிடப் போறாங்கப்பா...' என்று கலைஞரே சொன்னாராம். அதற்கு இவர் 'நடப்பது நம்ம ஆட்சிங்க! யார் பிடுங்கு வாங்க?' என்றாராம்.



• ஊர்வலத்தைப் பார்வையிடும் கலைஞர் குடும்பத்துப் பெண்கள்

● அங்கிருப்பவர்களெல்லாம் மினரல் வாட்டர் வாங்கிக் குடிப்பவர்கள் என்பதை யறியாத ஒரு பெண்மணி கையில் முறுக்குக் கூடையோடு வந்து விற்பதற்காக எவ்வளவோ முயன்றும் முடியாமல் போகவே, சோர்ந்து போய்க் கடைசியில் கூடையைக் கீழே வைத்து விட்டுத் தூங்கிப் போனார். இதே போல் சனிக்கிழமை நடந்த இளைஞர் அணி சிறப்பு மாநாட்டின் போதும் ஒரு சிறுமி முறுக்குக் கூடையோடு நுழைந்து விட்டாள். எங்கே தெரியுமா? கலைஞரின் குடும்பத்தினர் உட்கார்ந்திருந்த இடத்துக்கு! 'எங்களுக்கு வேண்டாம்மா!' என்று கலைஞர் வீட்டுப் பெண்கள் அன்போடு மறுத்து விட்டதில் அந்தப் பெண்ணுக்கு பலத்த ஏமாற்றம்!

● வெள்ளிக்கிழமை மாலை சரியாக 5.40 மணிக்குக் கலைஞர் வீட்டுப் பெண்கள் வந்தார்கள். 5.45 க்குக் கலைஞர் வந்து மேடையில் ஏறி அமர்ந்தார், ஊர்வலத்தைப் பார்வையிட. ஊர்வலத்தின் துவக்கத்தில் ஒரு தொண்டர் காந்தி வேடமணிந்து வந்தபோது, கலைஞர் அவரை மேடைக்கு அழைத்து எழுந்து நின்று மரியாதை செய்தார். சாதாரண ஜனங்களைப் போலவே மேடைக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த கலைஞர் வீட்டுப் பெண்களுக்குக் 'காந்தி' ஆசி வழங்க, அவர்களும் எழுந்து நின்று ஆசி வாங்கினார்கள்!

● ஊர்வலம் ஆரம்பித்து சிறிது நேரத்தில் மேடையிலிருந்த அன்பழகன், தமது வெற்றிலைப் பெட்டியிலிருந்து வெற்றிலையை எடுத்துப் போட்டுக் கொண்டு, பெட்டியை நாற்காலிக்கு அடியில் வைத்தார். பின்னால் உட்கார்ந்திருந்த தமிழ்க்குடிமகன் அன்பழகனின் வெற்றிலைப் பெட்டியை எடுத்துத் தாமும் போட்டுக் கொண்டு, 'நாக்குச் சிவந்திருக்கிறதா?' என்று முன்னால் உட்கார்ந்திருந்த ஆர்க்காடு வீராசாமியின் தோளைத் தட்டிக் கேட்டார்!

● ஊர்வலத்தைக் கலைஞர் பார்வையிட்டுக் கொண்டிருந்த போதே சுமார் ஆறேழு நிமிடங்களுக்கு ஒரு பகுதி விளக்குகள் எரியாமல் பவர்-கட் ஆனது ஆச்சரியம்!

● திறந்த ஊர்தியில் ஸ்டாலின் வந்த போதுதான் ஊர்வலத்தில் ஒரு நட்சத்திரக்

களை! வெள்ளுடையோடு கறுப்பு-சிவப்பு டை கட்டி, கைகளில் வெள்ளுறை அணிந்த படி, ஃபோகஸ் விளக்கு வெளிச்சத்தில் அட்டகாசமாக வந்தார் ஸ்டாலின். மேடையைக் கடந்ததும் வாகனத்தை விட்டு இறங்கி மேடைக்கு வந்து விட்டார்.

● முதல் நாள் மாலை 5.45க்குத் துவங்கிய ஊர்வலம் மறுநாள் அதிகாலை 3 மணிக்குத்தான் முடிந்தது. அதன் பிறகும் வாகன ஊர்வலம் வந்து கொண்டே இருந்தது. அவ்வளவு நேரமும் விடாமல் பார்த்த கலைஞரைப் பாராட்டியே ஆக வேண்டும்.

● கலைஞர் பார்வையிடும் மேடையைக் கடந்ததுமே ஊர்வலத்தினர் சோர்ந்து போக ஆரம்பித்து விட்டார்கள். வெளியூர்களிலிருந்து வந்தவர்களுக்குக் களைப்பாக இருக்காதா? பாவம், அங்கங்கே உட்கார்ந்து களைப்பாறவும் தூங்கவும் ஆரம்பித்து விட்டார்கள்!

● ஊர்வலம் தொடங்குவதற்கு முன்பே படம் எடுக்கப் போன புகைப்படக்காரர் அருண் குமாருக்கு விழுந்தது அடி! ஒரு டெம்போவில் வந்த இளைஞர் அணியினர் சைக் கிளில் வந்த ஒரு வயதா னவர் மீது மோத, அவர் கீழே விழுந்து விட்டார். அவர் விழுந்ததில் குஷியான இளைஞர் அணியினர் சிரிக்க, அந்தச் சூழ்நிலையை அப்படியே படமெடுத்த அருண்குமாரின் மேல் அவர்களின் கோபம் திரும்பியது. அப்புறமென்ன? அவருடைய உடம்பை கண்ணியத்தோடு மசாஜ் செய்து, அதுவரை எடுத்த புகைப்படச் சுருளையும் கேமராவிலிருந்து உருவியெடுத்து விட்டார்கள்!

● சனிக்கிழமை காலை நடந்த இளைஞர் அணி சிறப்பு மாநாட்டை மேடைக்கு வராமலேயே கவனித்துக். கொண்டிருந்தார் கலைஞர்! எப்படி என்கிறீர்களா? மேடைக்குப் பின்புறம் கலைஞருக்காக ஓர் ஓய்வறை. ('எளிமை யாகத்தான் சார்! அம்மா அளவுக்குக் கிடையாது!' என்று நம்மிடம் விளக்கியது, உண்மைதான்) அதில் உட்கார்ந்தபடியே உள்ளிணைப்புத் தொலைக்காட்சியின் மூலம் பார்த்துக் கொண்டிருந்தார்.

● இளைஞர் அணி மாநாடு ஆரம்பிப்பதற்கு முன்னால் மெல்லிசை. அதாவது கட்சியின் கொள்கை விளக்கப் பாடல்கள்! உதாரணத்துக்கு ஒன்று : 'அண்ணா நகர் கோபாலு, அறிவு கெட்ட முட்டாளு, நீ போயஸ் தோட்டத்தில் எடுக்கறடா தண்டாலு..' யாரைப் பற்றிய பாடல் என்று தெரிந்திருக்குமே! கலைஞர் ரசித்தாரோ என்னவோ, தொண்டர்கள் ரசிக்கத்தான் செய்தார்கள்!

● மேடையில் நிறைய இளைஞர்கள். நாயகனாக ஸ்டாலின். ஒருபுறம் அன்புவின் மகன் அன்பில் பொய்யாமொழி. மறுபுறம் வீரபாண்டி ஆறுமுகத்தின் மகன் செழியன். "வீரபாண்டியார் அளவுக்குப் பையனிடம் ஒரு சுறுசுறுப்பும் துடிப்பும் காணலியே!" என்பது பலரின் கமெண்ட்.

● இளைஞர்களான பல தி.மு.கவினர்



• மாநாட்டுப் பந்தலின் முகப்பில்

சாரிசாரியாகக் கலைஞருக்கு சால்வை போர்த்த வந்து, கலைஞரே கொஞ்சம் முகம் சுளிக்கும் அளவுக்கு நடந்து கொண்டார்கள். முகம் சுளித்தது சால்வைக்காக அல்ல! அத்தனை பேரும் எத்தனை 'சொல்லியும் கேட்காமல் காலில் விழுந்ததற்குத்தான்!

● ஸ்டாலின் பேச எழுந்ததும் கூட்டத்தில் அப்படியொரு நிசப்தம்! அதுவரை சலசலத்துக் கொண்டிருந்தவர்க ளெல்லாம் கப்சிப்! "இது கலைஞருக்கு அடுத்த வாரிசாகத் தொண்டர்கள் அவரை ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்பதற் கான சாட்சி" என்பது பலரின் விளக்கம்.

சேலத்திலிருந்து : **பிரின்ஸ்**

படங்கள் : **அருண்**

வட்டமேஜை

✉ குடியரசுத் தலைவர் தேர்தலிலுமா குடிகெடுக்கும் ஜாதி குறுக்கிடுவது? எனக் கேட்டிருப்பது நறுக்குத் தெறித்தாற்போன்ற நல்ல கேள்வி.

பொறையாறு, கானா.

✉ கேசரியின் வெற்றி இனிப்போ, கசப்போ, தங்களின் தலையங்க ஆலோசனைப்படி, கேசரி தனது போட்டியாளர்களையும், எதிர்ப்பாளர்களையும் அரவணைத்துச் செல்ல மறந்தாரேயானால் காங்கிரஸை மக்களுக்குக் கசக்க ஆரம்பித்துவிடும் என்பது மறுக்க முடியாத உண்மை!




• கேசரி

சேலம் – 9,
மு. இரவிச்சந்திரன்

✉ "'நான் மக்களின் தோழன். அவர்களின் பிரதிநிதியாகச் செயல்படுவதில்தான் எனக்குப் பெருமை" என்ற அச்சுதானந்தனின் வார்த்தைகளில் போலித்தனம் தெரியவில்லை. ஒரு நேர்மையான அரசியல்வாதியின் பேட்டியை வெளியிட்ட 'கல்கி'க்கு நன்றி!

தேவராயனேரி,
மு. கருணாநிதி.



• ஜெயந்தி நடராஜன்

✉ "ஜெ. பாணியில் ஆர்ப்பாட்டமான வரவேற்பு தேவைதானா?" என்ற கேள்விக்கு ஜெயந்தி நடராஜன் அளித்திருந்த சமாளிப்பு-சால்ஜாப்பு பதிலைப் படித்த பொழுது "அடிப்படையில் அவர் வக்கீல் அல்லவா?" என்ற எண்ணமே தலை தூக்கியது.

மதுரை – 14, எஸ். வைத்தியநாதன்.

✉ 'கிரிக்கெட் போட்டியின்போது பாதுகாப்புக்குப் போலீசாரை அனுப்பக் கட்டணம் செலுத்த வேண்டும்' என்ற மேற்கு வங்க அரசின் நிபந்தனை ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றி, மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கத்தான் காவல்துறை உள்ளது. விளையாட்டுப் போட்டி நடக்குமிடத்தில் பாதுகாப்புத்தர கட்டணம் கேட்பதைப் பார்க்கும்போது அது மாநிலத்தின் காவல் துறையா அல்லது ஏதேனும் தனியார் செக்யூரிட்டி ஏஜன்சியா? என்று கேட்கத் தோன்றுகிறது. அரசியல் கட்சிகள் நடத்தும் மாநாடுகளுக்கும், ஊர்வலங்களுக்கும், பொதுக் கூட்டங்களுக்கும் ஆயிரக்கணக்கான போலீசார் பாதுகாப்புக்குச் செல்லுகிறார்களே, அவர்களுக்கெல்லாம் அக்கட்சிகள் கட்டணமா செலுத்துகின்றன?!

கபிஸ்தலம்,
எஸ். இராஜேந்திரன்.

✉ 'சாலை ஓரச் சதிகள்' கவிதை சங்கடங்களைக்கூட சங்கீதமாய் ஒலிக்க வைத்தது!

பூதப்பாண்டி,
ஆ. அழகேஷ்.

✉ 'பாசமுள்ள பாண்டியரே' படத்திற்கு 'பாசமுள்ள போண்டியரே' என்று பெயர் வைத்திருந்தால் நன்றாக இருக்கும் என்பதை உமது விமர்சனம் மூலம் உணர்ந்து கொண்டேன்!

நாகூர், நிலா காதலன்.

✉ கோயம்புத்தூரைச் சேர்ந்த ஒரு வாசகி சேலத்தில் ஒரு கடையில் ரூ.10/- மதிப்புள்ள தமிழரசு இலக்கிய மலரை ரூ.15/- என்று ஸ்டிக்கர் ஒட்டி விற்பனை செய்வதாக எழுதியிருந்தார். வாசகர்கள் எளிதில் வாங்கிப் பயனடைவதற்காகச் சென்னை அரசினர் தோட்டத்திலுள்ள தமிழரசு அலுவலகத்திலும், நுங்கம்பாக்கத்திலுள்ள வள்ளுவர் கோட்டத்திலும், திருவல்லிக்கேணியில் உள்ள பாரதியார் நினைவு இல்லத்திலும் மற்றும் அண்ணா சதுக்கத்திலும் விற்பனையாகிறது. இது தவிர, தமிழகத்தின் மற்ற பகுதிகளிலுள்ள வாசகர்கள் பயனடைவதற்காக அனைத்து மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகங்களிலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. தமிழரசு இலக்கிய மலர் விற்பதற்காக எந்தத் தனியார் நிறுவனமும் அல்லது வியாபாரியும் இதில் ஈடுபடுத்தப்படவில்லை.

சென்னை - 2,
வி. இறையன்பு,
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு.


சங்கீதமான சங்கடங்கள்!

✉ 'ஐயாயிரம்' ரூபாய் கொடுத்து கொடி இடை பெறுவதை விட, ஐந்நூறு முறை குனிந்து வீட்டைப் பெருக்கித் துடைத்து சுத்தம் செய்தால் வேலைக்காரிக்குக் கொடுக்கும் நூற்றி ஐம்பது ரூபாய் மிச்சமாவதுடன் கொடி இடையையும், உற்சாகத்தையும், சுறுசுறுப்பையும் பெறலாம் என்பது நான் அனுபவத்தில் கண்ட உண்மை.


திருச்சி – 17, உஷா முத்துராமன்.

✉ வையவனின் "குளிப்பாட்டுதல்" நெஞ்சை நெகிழ வைத்த அருமையான சிறுகதை சார்.

மேலகிருஷ்ணன்புதூர், ஆர்.கே.லிங்கேசன்.



காந்தி
காலம் முதல்
குஜ்ரால்
அரசு வரை!



- சிரிப்பு, வியப்பு, சிலிர்ப்பு, துடிப்பு என்று உணர்வுகளைத் தூண்டும் கதைகள்
- சரித்திர நிகழ்வுகளைக் கண்முன் நிறுத்தும் ஓவியங்கள்.
- சாதனைகளைச் சித்திரிக்கும் வண்ணப் படங்கள்

வாசகர்களே,
வாங்கத் தவறினால் வருத்தப்படுவீர்கள்!

கல்கி சுதந்தரப் பொன்விழா மலர்

இன்றே உங்கள் கல்கி விற்பனையாளரிடம் சொல்லி வையுங்கள். 320 பக்கங்கள். விலை ரூ. 30. பதிவுத் தபாலில் பெற ரூ.13. சேர்த்து அனுப்ப வேண்டும். கடைசி தேதி ஆகஸ்ட் 11.

நிர்வாகி, கல்கி, சென்னை - 97


மூழ்கிய ஷிப்

அண்மையில், மும்பை கொலாபாவுக் கருகில், 33 நபர்க்ளையும், ஸ்ல்ஃபுரையும் சுமந்து கொண்டு வந்த 'ஆர்கேடியா ப்ரைட்' கப்பல், ஒரு பெரிய அலை தாக்கியதில், 4 பேரை பலி கொண்டு, 20 பேரைத் தொலைத்து, மற்றவர்களைக் குற்றுயிரும் குலைஉயிருமாய் ஆஸ்பத்திரியில் தவிக்கவிட்டு, ஒரேயடியாகத் தண்ணீரில் மூழ்கி விட்டது! இந்தத் துயரச் சம்பவம், சில முக்கியக் கேள்விகளை எழுப்பியுள்ளது. அக்கம் பக்கத்திலிருந்த சின்ன, பெரிய, கப்பல்களெல்லாம் இயற்கையின் சீற்றத்தை சாந்தமாக ஏற்றுக் கொண்டிருக்க, 14,000 டன் எடையுள்ள இந்தக் கப்பல் எப்படி இமைக்கும் பொழுதில், பாறாங்கல்லைத் தண்ணீரில் தள்ளியதைப் போல், மூழ்கி மறைந்தது? இக்கட்டான தருணங்களைச் சமாளிக்க, "ஸப்போர்ட் மெக்கானிஸம்" போதுமான அளவில், கப்பலில் இருந்ததா? கப்பலையே அரிக்கக்கூடிய ஸல்ஃபர் போன்ற கெமிகல்களை ஏற்றலாமா? முக்கியமாக, கடலில் பயணிக்கும் தகுதி இந்தக் கப்பலுக்கு இருந்ததா? - இந்தக் கேள்விகளுக்கு விடை கிடைக்கிறதோ இல்லையோ, பாடாவதியான பஸ்களிலும், காலாவதியான ஏர்கிராஃப்டுகளிலும், பாட்டன் காலத்து ரயில்களிலும், உயிரைப் பணயம் வைத்து பயணித்துக் கொண்டிருந்த மக்கள், இந்த லிஸ்டில் இனி புராதன காலத்துக் கப்பல்களையும் சேர்க்கலாம் என்ற உண்மை புலப்பட்டிருக்கிறது!

'நகர்ந்த' தாய்

மும்பை குர்லாவிலுள்ள ஒரு காலனியில், சாக்கடை அடைத்துக் கொண்டு, அசுத்த நீர் ஆறாக ஓடி, காலனிவாசிகளை மூச்சு விட முடியாமல் (மூக்கைத் திறக்க முடிந்தால்தானே) திணற வைத்தது. BMCயிடம் புகார் செய்ததில், அடைப்பை நீக்க ஒரு மெஷின் அனுப்பப்பட்டது. நாலு நாட்கள் போராடியும், நிலைமை மாறவில்லை; வெறுத்துப் போன மக்கள், நேராக மேயர் விசாகா ராவுத் வீட்டிற்கே சென்று முறையிட்டனர். "இதோ வருகிறேன்" என்றவர், கையோடு நான்கு தொழிலாளர்களை அழைத்துக் கொண்டு, நேராக காலனிக்கே சென்று விட்டார். புடைவையை வரிந்து கட்டிக் கொண்டு, (மூக்கையும் பிடித்துக் கொண்டுதான்), கையால் அடைப்புகளைத் தோண்டித் துருவி அந்த தொழிலாளர்கள் வேலை செய்ததை மேற்பார்வையிட்டு, ஒரே மணி நேரத்தில் வேலையை முடித்து விட்டார். சாதாரணமாக, இதுபோன்ற விஷயங்களுக்கெல்லாம், 'நகரத் தந்தை'கள் நகராத் தந்தையராய், இருந்த இடத்தில் இருந்து கொண்டே ஆணை பிறப்பித்து விட்டு, கைகழுவி விடுவர். ஆனால் முதல் முதலாக இந்த 'நகரத் தாய்', மக்கள் பிரச்னைகளில் நேரடியாகப் பங்கு கொண்டு அதைத் தீர்த்தும் வைத்து, எல்லோரையும் ஒரேயடியாக அசத்திவிட்டார்!

• கப்பல்



சாக்கடை அடைப்பா? கூப்பிடு மேயரை!

மாறிய பார்வை


சட்டவிரோதமான குடியிருப்புகளாயிருந்தா

மார்ஜின் மொழி

○ நீ எந்நிலையில் இருப்பினும் சரியே. சொன்ன சொல்லைக் காப்பாற்றுவதை உன் கடமையாகக் கொள். நீ உயர்வடைவாய்.

- கார்லைல்

ளும் கூட, மழைக் காலத்தில் அவை இடிக்கப்படக் கூடாது என்ற சட்டத்தையும் மீறி, மும்பை காந்தி விலிப் பகுதியில் 5000 குடிசைக் குடியிருப்புகளை காவல் துறையினர் இடித்துத் தள்ளியிருக்கிறார்கள். சிவசேனைக் குரலான 'சாம்னா' பத்திரிகையில் வெளிவந்த ஒரு செய்தியின் அடிப்படையில்! சாம்னா, இந்தக் குடிசைவாசிகளை சட்டவிரோத மாக இங்கே குடியேறிய பங்களாதேஷ் அகதிகள் என்று சாடியிருக் கிறது. உண்மை





* பால் தாக்கரே

யில் இவர்களில் பெரும்பாலானோர் உ.பி., பீஹார் பகுதியைச் சார்ந்த இந்தியர்கள்தானாம்! சில நாட்கள் முன்புதான் போரிவிலி பகுதியில், லைசென்ஸ் இல்லாமல் காய்கறி, பழ வியாபாரம் செய்து கொண்டிருக்கும் 'இந்தி'க்காரர்களால், மண்ணின் மைந்தர்களான மராத்தியர், வேலை வாய்ப்பையும், அரசு வருவாயையும் இழந்து தவிப் பதை பிரமாதமாக விவரித்திருக்கிறது 'சாம்னா'. கொஞ்ச காலம் முன்பு வரை, BMC தேர்தல்களின் போது எந்த 'வோட்டர்களை' தாக்கரே விழுந்து விழுந்து வணங்கினாரோ, அவர்களையே இப் போது விரட்டப் பார்ப்பது, அரசியலில் ஒன்றும் அதிசயமில்லைதான்; ஆனால் தாக்கரேயின் விரோதப் பார்வை இப்போது தெற்கிலிருந்து வடக் கிற்கு மாறியிருப்பதுதான் புதுமையான ஆச்சர்யம்!

பேசாத பேச்சு

'00போன் பில்கள்' என்ற பெயரில் MTNLக்காரர்கள் வெடிகுண்டைத் தூக்கிப் போடு வது ஒன்றும் மும்பைக்காரர்களுக்குப் புதிதல்ல! ஆனால் 'போர்பந்தர் நவிக் மண்டல்'காரர்களுக்கு ஆட்டம் பாமையே அனுப்பியிருப்பதுதான் விசே ஷம்! மே 13 லிருந்து மே 15 வரையிலான மூன்று நாட்களுக்கு அவர்கள் கொடுத்திருக்கும் 'பில்' தொகை ரூ 1,15,987! 72 மணி நேரங்களில் 76,994 கால்களுக்கான கட்டணம் வசூலிக்கப்பட்டிருக் கிறது! இதில், STD/ISD கால்களுக்கு மட்டும், 1,07,754 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது! டாடாவுக்கும், பிர்லாவுக்கும் பிராப்திக்காத பெருமை இந்தச் சாதாரணர்களுக்கு கிடைத்திருப்பதை நினைத்துப் பூரிப்படையாமல், தலையில் கைவைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள் மண்டல்காரர்கள்!

மாட்டிய பிரின்ஸி!

தன் குழந்தையை நர்சரியில் சேர்க்கச் சென்ற ஒரு தந்தையிடம், ரூ 14000 டொனேஷனுடன் தன்னை ஒரு குறிப்பிட்ட தினத்தன்று சந்திக்கும் படி அந்தப் பள்ளியின் பிரின்ஸிபல் கேட்டிருக் கிறார். மறுநாள் பணத்துடன் பையனை அழைத்து வருவதாகச் சென்றவர், கரன்சி நோட்டுகளுடன் கூடவே லஞ்ச ஒழிப்புத் துறை அதிகாரியையும் ரகசியமாக அழைத்து வந்து, பிரின்ஸிபல் ராவ் டொனேஷனுக்காகக் கையை நீட்டிய போது, அதில் விலங்கை மாட்ட வைத்து விட்டார்! பிறிதொரு விவகாரத்தில் ICLகாலேஜ்காரர்களை மாணவர்களிடமிருந்து வாங்கிய டொனேஷன் தொகை அனைத்தையும் திரும்பத் தருமாறு மும்பை ஹைகோர்ட் உத்தரவிட்டிருக்கிறது. கல்வித் துறையில் புதிய மாற்றங்களை ஒட்டி, லஞ்சத்தை ஒழிப்பதில் முனைப்பாக இயங்கி வருகிறது மராத்திய அரசு! ஆரம்ப கட்ட ஆர்வம் நீடிக்க வேண்டும்...!

— ஜெயஸ்ரீராஜ்

'Accident' என்ற ஆங்கில நாவலின் தமிழ் வடிவம். © டேனியல் ஸ்டீல்



யாராலும் அகற்ற முடியாத அளவுக்குப் பேஜின் முகத்தில் வேதனை குடிகொண்டிருந்தது. தாரென்ஸனைப் பரிதாபமாகப் பார்த்தாள்.

"தலைமை சர்ஜன் டாக்டர் ஹேமர்மேன் சொன்னதை நினைக்க நினைக்க மனசில் பயங்கரமான எண்ணங்கள் ஓடுகின்றன," என்றாள். "அவர் சொன்ன மாதிரி மூளையில் சேதம் ஏற்பட்டிருந்தால் உடம்போ மனமோ பலமாய்ப் பாதிக்கப்பட்டிருக்குமே? அந்த நிலைமையை எப்படிச் சமாளிக்கப் போகிறேன்? அந்த மாதிரி குழந்தையை வைத்துக் கொண்டு எப்படி வாழ்க்கையை..." என்றவள் நாக்கைக் கடித்துக் கொண்டாள். தாரென்ஸனுக்கு அப்படியொரு குழந்தை இருக்கிறான் - மனவளர்ச்சி இல்லாமல். அவனை வைத்துக் கொண்டு அவன் சமாளித்துக் கொண்டு வருகிறான்...

"ஸாரி.. வாயில் வந்து விட்டது. யோசனை இல்லாமல் பேசி

விட்டேன்," என்றாள்.

"பரவாயில்லை. உன் வேதனை எனக்குப் புரிகிறது. க்ளோவின் கால்களைப் பற்றி நானும் அப்படித்தான் இன்று நினைத்து வேதனைப்படுகிறேன். அன்று என் குழந்தை பிஜானுக்கு மனவளர்ச்சி இருக்காது என்று டாக்டர்கள் சொன்னபோதும் அப்படித்தான் இருந்தது. என்ன செய்ய?" என்றான் தாரென்ஸன். இருவரும் ஒருவரிடம் ஒருவர் மனம் திறந்து பேசிக் கொண்டார்கள். எதிர்காலத்தில் எப்படி எப்படிச் சமாளித்துக் கொள்ள வேண்டும் என்ற நினைப்பு இருவர் மனத்திலும் மேலோங்கியிருந்தது.

சற்றே மனச்சுமை குறைந்தவளாக பேஜ் அவனை ஏறிட்டு நோக்கினாள். தன்னைப் போலவே அவனும் அவசர அவசரமாக வந்ததில் கசங்கிய தலையுடன் கன்னாபின்னாவென்ற உடையுடன் வந்திருப்பதைக் கண்டு அவளையும் அறியாமல் மெல்லிய புன்சிரிப்பு வந்தது. தன்னையே ஒருமுறை பார்த்துக் கொண்டவள், "ஓட்டமாய்ப் புறப்பட்டு வந்ததில் நான் டிரெஸ் என்று ஒன்றை மாட்டிக் கொண்டேனே என்பதே ஆச்சரியமாக இருக்கிறது," என்றாள்.

அந்த நீண்ட ராத்திரியில் முதல் முறையாகத் தாரென்ஸனும் புன்னகை செய்தான். "நான் மாட்டிக் கொண்டிருப்பது என் பெரிய பிள்ளை நிக்கினுடைய ஜீன்ஸ். ஷர்ட் சின்னவன் பிஜானினுடையது. காரை எடுக்கும்போது அங்கே கிடந்த ஷூக்களை மாட்டிக் கொண்டேன். யாருடையது என்றே தெரியாது," என்றவன், "பிஜானைப் பற்றி உன்னிடம் நான் அதிகம் சொன்னது கிடையாது. அவன் பிறந்தது முதலே என் மனைவி டானாவுக்குப் பிடிக்கவில்லை. அவனை வெறுத்தாள். அப்படியொரு குழந்தை பிறந்ததற்கு நான்தான் காரணம் என்பது போல என்னையும் வெறுத்து லண்டனுக்குப் போய் விட்டாள். மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான விடுதியில் அவனைச் சேர்த்து விட வேண்டும் என்பது அவள் அபிப்பிராயம்."

"ஆமாம். சேர்த்திருக்கலாமே?"

"எனக்கு அதில் நம்பிக்கை இல்லை. எங்கள் குடும்பம் நார்வே நாட்டிலிருந்து வந்தது. அந்த ரத்தம் என் உடம்பில் ஓடுவதால் ஒரு பிடிவாதம். கஷ்டம் ஏற்பட்டால் எதிர்த்து நிற்க வேண்டுமே தவிர, ஓட்டம் பிடிக்கக் கூடாது என்பது என் அபிப்பிராயம். பிஜானை வளர்ப்பது அப்படியொன்றும் கஷ்டமாகவும் இல்லை. புத்திசாலிப் பையன். வீட்டில் தச்சு வேலைகள் செய்கிறான். நன்றாகச் சாப்பிடுகிறான். ஹாஸ்ய உணர்ச்சி இருக்கிறது. கார் ஓட்டக் கூடக் கற்றுக் கொண்டு வருகிறான். டாக்டர், பாங்க் டைரக்டர் என்று பெரிய பெரிய வேலைகளுக்கு அவன் போக முடியாது. ஆனால் வாழ்க்கையைச் சமாளித்துக் கொள்வான்..."

தாரென்ஸன் சொல்லிக் கொண்டிருக்கையில், பேஜ் தன் கணவனைப் பற்றி நினைத்துக் கொண்டாள். பிஜான் மாதிரி ஒரு குழந்தை பிறந்திருந்தால் பிராடு தாக்குப்பிடித்திருக்க மாட்டார்... ஓட்டம் பிடித்திருப்பார்...

அவர்கள் பேசிக் கொண்டிருந்த போது பொழுது விடிந்து, மணி எட்டாகி விட்டது.

"லண்டனுக்குப் போன் போட்டு டானாவுக்கு விஷயத்தைச் சொல்லிவிட்டு வருகிறேன்," என்று எழுந்து கொண்டான் தாரென்ஸன்.

[illegible]

வாழ்க்கையில் நீ வெற்றிபெற வேண்டுமானால் முயற்சியை நண்பனாகக் கொள்; அனுபவத்தை ஆலோசகனாக அமை; முன்னெச்சரிக்கையை உன் மூத்த சகோதரனாக நினை; நம்பிக்கையை உன்னைப் போஷித்து வளர்க்கும் தந்தையாக நம்பு.

— அடிசன்

மூலம் : டேனியல் ஸ்டீல்

தமிழில் : ரா. கி. ரங்கராஜன்

"நானும்தான் பிராடுக்குப் போன் செய்ய வேண்டும். அவரோடு வேலை செய்கிற ஒருத்தர் இருக்கிறார். அவரிடம் கேட்கலாம். இன்னும் கொஞ்ச நேரம் ஆகட்டும் என்று பார்க்கிறேன். நீங்கள் முதலில் போய்விட்டு வாருங்கள்," என்றான் பேஜ்.

டானாவைப் பிரிந்து வாழ்க்கை நடத்தும்போதிலும் அவளுக்குத் தகவல் சொல்ல வேண்டும் என்ற கடமையுணர்வு தாரென்ஸனிடம் இருப்பதை எண்ணி அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது.

சற்றைக்கெல்லாம் தாரென்ஸன் திரும்பி வந்தான்.

"டானா கிடைத்தாளா?" என்று கேட்டான்.

"கிடைத்தாள். விடுமுறைக்காக வெளியூர் போய்விட்டு இப்போதுதான் லண்டன் திரும்பினாளாம். க்ளோ விஷயத்தைக் கேட்டு ரொம்ப அதிர்ச்சி அவளுக்கு. எல்லாம் என் தப்பு என்கிறாள். ராத்திரியில் க்ளோவை ஏன் தனியாக அனுப்பினீர்கள் என்று திட்டுகிறாள்."

"டானா உங்களைக் குற்றம்சொல்வது நியாயமில்லை," என்று பேஜ் குறுக்கிட்டான். "உங்கள் மீது தப்பில்லை. விதியின் மீதுதான் தப்பு. அல்லது அந்த மற்றக் காரை ஓட்டி வந்தானே, செனெட்டர் பென்டார்ட்டி லாரா ஹட்சின்ஸ், அவன் தப்பாகவும் இருக்கலாம்..."

அப்போது அவர்களை நோக்கி எலும்பு முறிவு சர்ஜன் வந்தார். க்ளோவுக்கு ஆபரேஷன் செய்தவர்.

"க்ளோ எப்படி இருக்கிறாள்?" என்று இருவரும் ஒரே குரலில் கேட்டார்கள்.

"ஆபரேஷன் நல்லபடி முடிந்து விட்டது." என்று அந்த டாக்டர் சொல்லும்போதே தாரென்ஸனின் கண்ணிலிருந்து கரகரவென்று கண்ணீர் வழிந்தது.

"ரத்தம் ரொம்பக் கொட்டி விட்டது, பாவம். இடுப்பு எலும்பு, தொடை எலும்பு எல்லாம் சரிபண்ணி விட்டோம். எலும்பு முறிவுக்காக எல்லா இடத்திலும் கம்பிகளும் ஊசிகளும் செருகியிருக்கிறோம். இரண்டொரு வருஷம் கழித்துத்தான் அதையெல்லாம் எடுக்க வேண்டும். அதன் பிறகு அனேகமாய் அவள் கால்கள் சரியாகி, தானாக நடக்க முடியும். நிச்சயமாய்ச் சொல்ல இன்னும் சில வாரங்கள் போக வேண்டும்..." என்றார் டாக்டர். அவர் குரலில் சந்தோஷமும் திருப்தியும் வெளிப்பட்டன.

"நான் போய்ப் பார்க்கலாமா?" என்றான் தாரென்ஸன் ஆர்வத்துடன்.

"இல்லை. பகல் வரையில் அவள் ஆபரேஷன் அறையில் இருப்பாள். பிறகு இன்டென்ஸிவ் கேர் யூனிட்டுக்கு அழைத்து வருவோம். அங்கே ஒரு வாரம் இருக்க வேண்டியிருக்கும். அதன்பின் அவளை வார்டுக்குக் கொண்டு வருவோம். இன்று சாயந்தரம் ரத்தம் செலுத்த வேண்டும். க்ளோவின் ரத்த குரூப்தானே நீங்களும் உங்கள் மகன்களும்?"

"ஆமாம்" என்று தாரென்ஸன் சொன்னதும், சர்ஜன் சொன்னார் : "நீங்கள் வீட்டுக்குப் போய்க் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொண்டு சாயந்தரமாய் வாருங்களேன்? அதற்குள் உங்கள் பெண் ஐஸியுவுக்கு வந்து விடுவாள். எப்படியும் ஒரு மாத காலம் அவள் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டியிருக்கும். இப்போது இருந்தே ஏன் கஷ்டப்படுகிறீர்கள்? கவலைப்படாமல் வீட்டுக்குப் போய் விட்டு வாருங்கள்."

சர்ஜன் திரும்பிச் சென்று விட்டார். கொஞ்ச நேரம் வீட்டுக்குப் போய் இருந்து விட்டு வரலாம் என்றுதான் தாரென்ஸனுக்கும் தோன்றியது. ஆனால் ஆலிஸனைப் பற்றி இன்னும் தகவல் வராதபோது, பேஜைத் தனியே விட்டு விட்டுப் போக மனம் வரவில்லை.

"வெயிட்டிங் ரூமில் கொஞ்ச நேரம் படுத்திருக்கிறேன். நீ போய் பிராடைப் பற்றி விசாரித்து விட்டு வா." என்றான்.

பிராடுடன் வேலை பார்க்கும் பாலன்ட்டின் என்பவரைப் பேஜுக்குத் தெரியும். அவருடைய போன் நம்பரும் கைவசம் இருந்தது.

பாலன்ட்டினிடமும் அவர் மனைவியிடமும் விபத்தைச் சுருக்கமாகச் சொல்லிவிட்டு, "உங்கள் கம்பெனி பிரசிடெண்ட்டைப் பார்ப்பதற்காகப் பிராடு கிளீவ்லந்துக்குப் போயிருக்கிறார். அவருடன் இன்று காலிஃப் விளை



"டாக்டர்! இது வரைக்கும் எத்தனை ஆபரேஷன் பண்ணியிருப்பீங்க?"
"இதானே வேண்டாங்கிறது. அப்படியே எத்தனை பேஷண்ட் செத்தாங்கன்னும் கணக்கு எடுப்பீங்க!"
— நெல்லைராஜ்

யாடப் போகப் போவதாய்ச் சொன்னார். ஆனால் எங்கே தங்கியிருக்கிறார் என்று தெரியவில்லை. நீங்கள் தயவு பண்ணி பிரஸிடெண்ட்டுக்குப் போன் பண்ணி விசாரியுங்கள். பிராடு எங்கே தங்கியிருக்கிறார் என்று அவருக்குத் தெரிந்திருக்கும். இல்லாவிட்டாலும் கால்ஃப் விளையாட வரும்போது தகவல் சொல்வார்...'' என்றாள் பேஜ்.

''விபத்தைப் பற்றி கேட்க வருத்தமாக இருக்கிறது. எல்லாம் நல்லபடி ஆகும். கவலைப்படாமல் இருங்கள். நான் பிரசிடெண்ட்டுடன் பேசிவிட்டு உங்களைக் கூப்பிடுகிறேன்,'' என்றார் பாலன்ட்டின்.

'தாங்க்யூ' என்று சொல்லவிட்டுப் பேஜ் காத்திருந்தான்.

ஒரு மணி நேரம் கழித்துத்தான் பாலன்ட்டின் அவளைக் கூப்பிட்டார்.

''பிரசிடெண்ட்டுடன் பேசி விட்டேன். பிராடு நேற்று அங்கே வரவில்லையாம். 'ஞாயிற்றுக்கிழமை என்னுடன் கால்ஃப் விளையாட வருவதாகவும் பேச்சு இல்லையே?' என்கிறார் பிரசிடெண்ட். மறுபடி ஏதாவது தகவல் கிடைத்தால் உங்களைக் கூப்பிடுகிறேன்'' என்றார்.

போனை மெதுவே திரும்ப வைத்தாள் பேஜ்.

பிராடு கிளீவ்லந்துக்குப் போகவில்லையா? பின்னே எங்கே போனார்? பிரசிடெண்ட்டுடன் கால்ஃப் விளையாடப் போவதாக ஏன் சொல்ல வேண்டும்?

பகல் இரண்டு மணி.

க்ளோவை இன்டென்ஸிவ் கேர் யூனிட்டுக்கு அழைத்து வந்திருப்பதாகத் தகவல் வந்தது. தாரென்ஸன் போய்ப் பார்த்தான்.

அப்பப்பா! எத்தனை கம்பிகள், சிம்புகள்; ட்யூப்கள்! இன்னும் கட்டுப் போடவில்லை. க்ளோ அரை மயக்கத்தில் இருந்தாள். ஆனால் அப்பாவை அடையாளம் கண்டுகொண்டாள் என்பது அவள் கண்களில் தெரிந்தது. டாக்டர்கள் நம்பிக்கையாகவும் திருப்தியாகவும் சொல்வதைக் கேட்டு ஆறுதலடைந்தவனாகத் திரும்பி வந்தான் தாரென்ஸன்.

''எப்படி இருக்கிறாள்?'' என்று பேஜ் கேட்டாள்.

''அந்தக் கம்பிகளையும் ட்யூப்களையும் பார்க்கவே பயமாயிருக்கிறது. ஆனால் கண்டத்திலிருந்து தப்பி விட்டாள். கட்டுப் போடவில்லை இன்னும். இந்த மட்டோடு விட்டாரே என்று கடவுளுக்கு நன்றி சொல்ல வேண்டும்,'' என்றான் அவன்.

பேஜிடமிருந்து ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது. ''கடவுள் இந்த மட்டோடு விட்டாரே என்று எல்லாரும் சொல்கிறார்கள். அந்த மட்டில் கூட ஏன் நடக்க வேண்டும்? நேற்று இதே நேரத்துக்கு ஆலிஸன் எப்படி இருந்தாள்? சிரித்துக் கொண்டு, குதித்துக் கொண்டு, என்னோட ஸ்வெட்டர் வேண்டுமென்று தொணதொணத்துக் கொண்டு எப்படிப்பட்ட சந்தோஷத்தில் இருந்தாள்? இருபத்து நாலு மணி நேரத்துக்குள் ஏன் இப்படி ஆக வேண்டும்?''

''சரி, சரி. வருத்தப்படாதே,'' என்று அவள் கைகளை ஆறுதலாகத் தட்டிக் கொடுத்து விட்டுக் கொஞ்ச நேரம் அவளருகிலேயே உட்கார்ந்திருந்தான் தாரென்ஸன்.

மூன்று மணியாயிற்று.

''நான் வீட்டுக்குப் போய் என் பிள்ளைகள் நிக்கையும் பிஜானையும் அழைத்து வரலாமென்றிருக்கிறேன். பிஜான் ரொம்ப வருத்தத்தில் இருக்கிறான் என்று நிக் சொன்னான். க்ளோவைப் பார்த்தால் கொஞ்சம் ஆறுதலடைவான். ஏதாவது அவசரமானால் எனக்கு வீட்டுக்குப் போன் செய்,'' என்று கூறிவிட்டுத் தாரென்ஸன் புறப்பட்டான்.

தன் அம்மாவுக்குப் போன் செய்து சொல்லலாமா என்று பேஜ் நினைத்தாள். ஆனால் கணவனுக்குச் சொல்லுமுன் அம்மாவுக்குச் சொல்வது சரியென்று படவில்லை.

மறுபடியும் பிராடைப் பற்றியே அவள் எண்ணம் திரும்பியது.

அவர் எங்கேதான் போயிருப்பார்? பிரசிடெண்ட்டுடன் கால்ஃப் ஆடப் போவதாகச் சொல்லிவிட்டு வேறு எங்கேதான் போனார்?

அவள் மனத்தில் விபரீதமான சந்தேகங்கள் முளை விட்டன.

(தொடரும்)



''உங்க 'மக்கள் நல கழகத்'தின் மூலமா மக்களுக்கு, என்ன செய்யறீங்க..?''

''தர்ணா, உண்ணாவிரதம், சாலை மறியல், பஸ் மறியல், ரெயில் மறியல்—இப்படி, எல்லாமே செஞ்சிகிட்டிருக்கோம்...''

—தேவந்திதுரைராஜ்

கடிதத்தைப் பார்த்ததும் தெரிந்துவிட்டது நளினிக்கு.

அதேதான்!

புத்தி அலட்சியம் காட்டச் சொன்னாலும் மனசு விடவில்லை.

எடு! பிரி!

பிள்ளையார் படம் முன் அட்டையில்.

உள்ளே போகச் சொல்லி மனசு கட்டளையிட, கைகள் அந்த வாழ்த்து அட்டையைப் பிரித்தது.

சற்றும் மாற்றமில்லை. அதே வார்த்தைகள்.

"இனியவனே

என்னுள் உறைபவளே, வந்தனம்!"

கம்ப்யூட்டரின் கைவண்ணத்தில், வெகு அழகாய் டைப் செய்யப்பட்ட வார்த்தைகள்.

ஆடிக்காற்றின் மரங்களின் அசைவாய், பீறிட்ட உணர்ச்சிகளை, கடிவாளம் போட்டு அடக்க முயன்றாள்.

நோ! ஏமாறக்கூடாது! இதுவரை கனவு கண்டு, கனவுப் பூக்கள் கருகியது போதாதா?

'என்னுள் உறைபவளே'

சேச்சே, பொய் சொல்கிறான்.

முகம் தெரியாத அந்த 'அவன்' மேல் கோபம் வந்தது.

ஆறு நாட்களுக்கு முன்புதான் இது ஆரம்பித்தது.

'யாராயிருக்கும்?' என்ற யோசனையில் கடிதத்தைப் பிரித்தாள் முதல் நாள்.

பிள்ளையார் படம்! வலஞ்சுழி! உள்ளே 'இனியவனே...'


மனசுக்குள் ஒரு நொடி ஜலதரங்கச் சத்தம். கண்கள் செருகி, விழித்தன.

விழித்த பார்வை காலண்டரில் பதிய, அதிர்ந்தாள்.

ஏப்ரல் ஒன்று!

எவனோ குரூரமாய் விளையாடுகிறான். மூச்சுக் காற்றில் அக்னி நட்சத்திர வெயில்!

உணர்வுகளின் ஏமாற்றம், விரல்கள் வழியே பாய்ந்து வாழ்த்து அட்டையைக்



மார்ஜின் மொழிகள்


○ ரோஜாச் செடியில் முள் இருக்கிறதே என்று குறைபடாதே. முட் செடியிலும் அழகிய மலர் இருக்கிறது என்று அறிந்து மகிழ்ச்சி கொள்.

– ஆவ்பரி

கசக்கி, உருட்டி, சுவரில் எறிந்தாள்.

ச்சீ, போ சனியனே! இரவு முழுவதும் தூக்கம் வரவில்லை.

நடுநிசி வேளையில் அறை விளக்கைப் போட்டாள். கண்ணாடி முன் நின்று, தன்னைப் பார்த்துக் கொண்டாள்.



நிஜம் சொன்ன கண்ணாடி மேல் ஆத்திரம் வந்தது.

கருத்து, நீண்ட முகம். அங்கங்கு அம்மை வடுக்களின் புள்ளிக் கோலம். உயிர்ப்பில்லாத கண்கள். கூராய் இறங்கி, சட்டென வாய்க்காலாய் விரிந்த மூக்கு.

தனக்கே தன்னைப் பார்க்கப் பிடிக்கவில்லையே! ஏன் இப்படிப் படைத்தான் என்னை?

ஆணியில் தொங்கிய முருகன் காலண்டரை வெறித்தாள். சட்டெனப் பிடுங்கி, தூக்கி எறிந்தாள் மூலையில்.

ஆனால், அடுத்த நாளும் அதே போல வாழ்த்து அட்டை, அடுத்தடுத்த நாட்களில் தொடர்ந்து இது வர, அவளுக்குள் சலனம்.

மரத்துப் போன மனசின் இறுக்க முடிச்சில் சின்ன நெகிழ்வு.

கூடவே பயம்!

"காதுலே விழுந்தா என்ன? உண்மையைத்தானே சொல்றேன். எரிஞ்ச மரக்கட்டை மாதிரி மூஞ்சி. அவளைப் போய் நான்... ஹா, ஹா! நெவர்"

தன்னிடமிருந்து மாதா மாதம் பண உதவி பெற்ற பன்னீரின் 'கமெண்ட்டில்' முதன் முதலாய் நொறுங்கிப் போனாள்.

நல்ல நண்பன், கூடவே சிறு

கிருஷ்ணா

எதிர்பார்ப்பு. எல்லாம் இடி விழுந்த பனைமரமானது!

அப்புறம் ரமேஷ், ராதாகிருஷ்ணன்... லிஸ்ட் நீள, நீள - புரிந்துவிட்டது.

தன்னுடன் அவர்கள் பழகுவது, ஏதோ தனக்கு பெரிய உதவி செய்வது போல நினைப்பதையும், சக மனுஷி என்ற பரிவு கூட இல்லாத அவர்களின் ஏளன குணமும் புரிய, தன்னைச் சுற்றித் திரை போட்டாள்.

ஆண்கள்தான் இப்படி என்றால், கூட வேலை பார்க்கும் பெண்கள் அதற்கு மேல் எட்டடி பாய, திரை, இரும்புக் கோட்டையாகிப் போனது.

முகத்தில் சிடுசிடுப்பு நிரந்தர விருந்தாளியானது.

இதோ, இந்த இரும்புக் கோட்டையைத் தகர்க்க முயல்கிறான் இவன்! யார் இவன்?

கண்ணாடியில் முகம் பார்த்தாள்.


ம்ஹூம்! பெரிதாய் ஏதும் மாற்றமில்லை. அதே 'எறிந்த கட்டை' முகம்தான்.

தூக்கம் வராமல் புரண்டு படுத்தாள் இரவில். இருபத்தேழு வயது முடிந்துவிட்டது, போன மாதத்தோடு.

தனக்கும் வேளை வந்து விட்டதோ? ஓடாதே! ஜாக்கிரதை.

மார்ஜின் மொழிகள்

● ஒரு வார வேலையைவிட, ஒரு நாள் கவலையே அதிக தளர்ச்சியைத் தரும். கவலை நமது உடம்பு முழுவதையும் தலைகீழாக்கிவிடும். வேலை அதை ஆரோக்கியமாகவும், ஒழுங்காகவும் வைத்திருக்கும். - ஆப்பரி



"என் கணவர் டீ.வி. ரேடியோல கேட்கிற எல்லா போட்டி கேள்விகளுக்கும் ஒண்ணு விடாம பதில் எழுதுவார்..."

"அப்படியா!"

"ஆமா, போன வாரம் 'சிவாஜி நடித்த முதல் படம் எது தெரியுமா'ன்னு கேட்டதுக்கு, 'தெரியாது'ன்னு பதில் எழுதியனுப்பி இருக்கார்னா பாரேன்..."

— ராதாவாசுதேவன்

விழுந்துவிட்டால், தாங்க முடியாது வலியை.

அடுத்த நாள் அலுவலகத்தில் கூட வேலையில் பதிய மறுத்தது மனசு.

கடவுளே, என்னைக் காப்பாற்று! குளத்தில் கல்லெறிந்தவனைக் காட்டு. இல்லையேல், வட்ட வட்டமாய் பரவும் அலைகளை நிறுத்து.

"டேய் சங்கர், எதுக்குடா பிள்ளையார் படம் போட்ட 'கிரீட்டிங்ஸாக' வைச்சிருக்கே?"

சட்டென்று நிமிர்ந்தாள். சங்கரைப் பார்த்தாள், அகல விரிந்த கண்களுடன்.

இவன்தானா!

அவன் எழுந்து அவசரமாய் கேன்டீன் பக்கம் நகர, அவளும் தொடர்ந்தாள்.

தனி டேபிளின் எதிரே உள்ள சேரில் அமர்ந்திருந்தான் சங்கர்.

அருகே போய் அமர்ந்தாள்.

கைகளை விரித்து, மடக்கி, கோர்த்தவனை ஊடுருவிப் பார்த்தாள்.

"என்ன வேணும் உங்களுக்கு?"

அழுத்தமாய் வெளிப்பட்ட அவள் கேள்வியில் திகைத்துப் போய்ப் பார்த்தான்.

"எதுக்கு என்னை சீண்டறீங்க? எதுக்கு இந்த வாழ்த்து அட்டை கண்ணாமூச்சி?"

அவள் குரலில் அனிச்சையாய் கடுமை வெளிப்பட்டது.

தன் மனச்சலனம் வெளிப்பட்டு விடக் கூடாதே என்ற ஜாக்கிரதை உணர்வு போர்த்திக் கொண்ட போர்வை, அந்தக் கடுமை.

"என் மனசுல உள்ளதை எழுதினேன். நிஜமாகவே நான் உங்களைக் காதலிக்கிறேன்."

பளீர் என்று உள்ளே மின்னலடித்து, இடி இடித்து, பூவாய்ச் சொரியத் தொடங்கியது மழை. பொங்கி வந்த கண்ணீரை அடக்கிக் கொண்டாள்.

தன்னைக் கூட ஒருவன் நேசிக்கிறானா? இல்லை பொய்! எதற்கோ அடிபோடுகிறான். பசப்பு வார்த்தை இது!

"பொய்!" என்றாள். குரலில் கடுமை கூடிவிட்டது.

"இன்னும் கொஞ்சம் பணம் வேணுமா?"

போன வாரம் அவன் தந்தைக்கு உடல் சீரியசாகி, மாசக் கடைசியில் இவன் பணத்துக்குத் திண்டாட, ஆபீஸ் நண்பர்கள் கைவிரிக்க, முடிவில் இவளிடம் தஞ்சம் புகுந்தான்.

இவளிடமும் அப்போது பணமில்லை. திடீரென பத்தாயிரம் ரூபாய்க்கு எங்கே போவது?

கழுத்திலிருந்த ஆறு பவுன் சங்கிலி உதவியது. சங்கிலி இருந்த இடத்தில் பாசி மாலை அலங்கரித்தது. உயிர் பெரிதாயிற்றே, நகையை விட!

"நானோ இந்த ஆபீசுக்கு மாற்றலாகி வந்து மூணு மாசம் கூட ஆகலே. என்னை நம்பி, உங்க சங்கிலியை, அடகு வைச்ச... யு ஆர் க்ரேட்!" என்றவனை மௌனமாய்ப் பார்த்தாள்.

"சின்ன வயசுலே அம்மா போனப்புறம், எனக்கு அப்பாதான் உலகமே. அவர் உயிரைக் காப்பாத்தின உங்களுக்கு எப்படி நன்றி செலுத்தறதுன்னே புரியலே."

"அப்ப, இது நன்றியா? என் உதவிக்கு கைம்மாறா?"

அவன் கேள்வியால் துடித்துப் போனான்.

"ஐயோ, அப்படி இல்லை. ஒவ்வொரு பெண்ணிடமும் ஒவ்வொரு அழகு பளீரிடும். சிலருக்குக் கண் அழகு, சிலருக்கு முகம் அழகு. உங்களுக்கு மனசு மிக அழகு. முருகனும், கிருஷ்ணனும் அழகுன்னாலும், யானை மூஞ்சி கொண்ட பிள்ளையாரை அருவருப்பாவா பார்க்கறோம். முழுமுதற் கடவுளாய்த்தானே கொண்டாடறோம்?"

சங்கரை வியப்புடன் பார்த்தாள்.

"புதுசா வந்தவன்றதுனாலே, பணம் வைச்சிருந்தவங்க கூட ஆபீஸ்லே உதவ முன் வராதபோது, நீங்க கைகொடுத்தீங்க பாருங்க, அந்தக் கையை வாழ்க்கை முழுக்க விடாம பிடிச்சுக்கிட்டே இருக்கறதாய் முடிவு பண்ணிட்டேன். உங்க விருப்பத்துக்காகக் காத்திருக்கேன்."

அவளின் இரும்புக் கோட்டை தடதடவென சரியும் ஒலி அவளுக்கே கேட்டது.

ஆல் வேல்டு அக்கவுண்டிங் அட்மினிஸ்ட்ரேடிவ் அண்ட் டெக்னலாஜிகல் அகாடமி(AAAAA)
All-World Accounting Administrative and Technological Academy.

படித்த அனுபவம் மிக்க நிபுணர்களின் சீரிய நிர்வாகம்

கௌரவமான வருமானம்

மரியாதையான சேவை

AAAAA Trust (Regd No. 1488)

In Education from 1979

நமது மாணவர்களின் எண்ணிக்கை மதிப்பீடு: வருடத்திற்கு 1 லட்சம் பேர்.
150 பேராசிரியர்கள் சேவை செய்கிறார்கள். துபாய் போன்ற வெளிநாடுகளிலிருந்தும் படிக்கின்றனர்.

நடத்தப்படும் படிப்பு பயிற்சிகள் IAS, IPS, IIT, BE, MBBS, BL, MBA, MCA, AIPMD, SSC, AMIE, Chartered Manager Courses, TNPSC, Spoken English/Hindi, BSRB, RBI, SBI, LIC, GIC, Computer courses, GMAT, GRE, TOEFL, Business Technology, etc

வாடிக்கையாளர் வசதி திட்டம்: (TM)

30 தினம் 18% PA, 45 தினம் 19% P.A.
60 தினம் 20% PA, 90 தினம் 21% P.A.

எப்போது வேண்டுமானாலும் பணம் எடுத்துக் கொள்ளலாம். புதுப்பிப்பதற்காக வர வேண்டிய அவசியமில்லை.

மாதப் பென்ஷன் திட்டம் (TM)

டெபாசிட்	காலம்	மாதவட்டி ரூ.
5000	1 வருடம்	125
10000	1 வருடம்	250
10000	3 வருடம்	300
10000	5 வருடம்	320

சேமிப்பு கணக்கு: 15%P.A. தினசரி புராடக்ட், மாதாமாதம் வரவு.

மத்திய நிதி மந்திரி என்ன சொல்கிறார்?

ஜனங்கள் தங்கள் சேமிப்பை தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலோ, சர்க்காரின் திட்டங்களிலோ போடலாம், மேலும் பணம் இருந்தால் கல்வி நிறுவனங்களில் முதலீடு செய்யலாம்.
ஆதாரம் : 'இந்து' பத்திரிக்கை 28.12.96. பக்கம் - 6.

ரிசர்வ் வங்கி என்ன சொல்கிறது?

ரிசர்வ் வங்கி திருத்தச் சட்டம் 1997 பிரிவு 45 S வர்த்தக காரியங்களுக்காக டெபாசிட் பெறுவதை தடை செய்யவில்லை. பதிவு செய்யப் படாத நிறுவனங்கள் கடன் கொடுப்பதற்காக டெபாசிட் வாங்குவதையே தடை செய்கிறது.
ஆதாரம் : 'இந்து' பத்திரிக்கை. 26.2.97. பக்கம் - 18.

மனநிம்மதியான முதலீடு - பரிபூரண பாதுகாப்பு (TM)

உங்கள் டெபாசிட்டுகள் T. நகரில் உள்ள பிரதான அசையா சொத்தால் (டோர் நம்பர் 27சி, பிளாக் 5488/1, ராமேஸ்வரம் ரோடு) பாதுகாக்கப்படுகின்றன.

தலைமை கார்யாலயம்: *"வித்யாலயா", 27சி, ராமேஸ்வரம் ரோடு, மாம்பலம் ரயிலடி சமீபம்,* **Next to DAV School, T.** *நகர், சென்னை - 17.*

கிளை: 7, முதல் மாடி, ஸ்டேஷன் ரோடு, தாம்பரம் சானடோரியம், சென்னை - 47.
கிளை: 5, 2வது மெயின் ரோடு, நியு காலனி, குரோம்பேட்டை, சென்னை - 44.
கிளை: 13, காலேஜ் ரோடு, நங்கநல்லூர், சென்னை - 114.

மும்பை: 1, தீபால் அபார்ட்மென்ட்ஸ், ஜெய் ஹிந்த் காலனி, குப்தேரோடு, டோம்பிவ்லி மேற்கு - 421 202

உங்கள் வீட்டிற்கும் வந்து சேவை செய்கிறோம். போன் : 4348560, 4347025.
AAAAA — பாதுகாப்பின் சின்னம்.

Prof. V. **விவேகானந்த்**
B.Com, (Distn), DOA, MBA (Distn), CAIIB (All India First), EKSAMD (Germany) (Distn), B.L.
Managing Trustee.

Dr. **பரமேஸ்வரி,** MBBS,
Managing Trustee.

Sunday Working Day

சொத்து பாதுகாப்பு, மாத வட்டிக்கும், அசலுக்கும் முன்கூட்டியே செக்.

(TM) :Trade Mark

மார்ஜின் மொழி

○ தனிமையை நாடுபவன் சிந்திக்கும் கலையைப் பயிலுதல் வேண்டும்.

- ஆபிரகாம் லிங்கன்

தேரோட்டம் - 26



• ராதா ரவி

சிவாஜிகணேசன் அப்போது காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து இருந்தார். ஆட்சியில் இருந்த எம்.ஜி.ஆர் தலைமையிலான அ.தி.மு.க. அரசை மிகக் கடுமையாக காங்கிரஸார் விமர்சனம் செய்து கொண்டிருந்த சமயம் அது.

மதுவிலக்கு ரத்தாகி இருந்த காலகட்டமான அந் நேரத்தில்தான் எம்.ஜி.ஆர் அவர்கள் பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டு வந்திருந்தார்.

இந்த இரு விஷயங்களையும் இணைத்து, "அப்பனுக்குச் சாராயம்; பிள்ளைக்குச் சத்துணவா?" என்று காங்கிரஸ் மேடைகளில் காட்டமாகத் தாக்கினார்கள், எம்.ஜி.ஆரை.

தனிப்பட்ட ரீதியில் சிவாஜிக்கு எம்.ஜி.ஆரிடம் எவ்வித மனத்தாங்கலும் கிடையாது எனினும் கட்சி அரசியல் என்று வரும்போது, அவர், அரசு மது விலக்கை ரத்து செய்ததை விமர்சனம் செய்தே ஆக வேண்டிய நிலை. அதைத்தான் அவர் செய்தார்.




• வி.கே. ராமசாமி

என்று

இதைத்தான் எம்.ஜி.ஆர். மிகவும் பர்ஸனலாக எடுத்துக் கொண்டு விட்டார்.

இந்த விஷயத்தை அவரே என்னிடம் குறிப்பிட்டு, "தம்பி சிவாஜி இப்படிப் பேசலாமா? அவரே இப்படியெல்லாம் என்னைக் குறை சொன்னால் என்ன அர்த்தம்?" என்று கேட்டார். எனக்குச் சங்கடமாகி விட்டது.

சிவாஜி அவர்களின் அரசியல் மேடை விமர்சனங்களை மனத்தில்



• விஜயகுமார்

கொண்டு, நடிகர் சங்க நலனை அந்தரத்தில் தொங்க விடுவது என்ன நியாயம்?

"ஐயா, உங்களுக்குத் தெரியாத தில்லை. அரசியலையும் நடிகர் சங்க விஷயத்தையும் இணைக்காதீங்க. சங்கத்துக் கடன் அடைய வேண்டியது முக்கியமில்லையா?" என்று கேட்டேன்.

விடியும்?

"அது முக்கியம்தான். அதுக்குத்தான் சொல்றேன். பேசாம தேர்தல் வெச்சிடுங்க. அடுத்த நிர்வாகம் வந்து பார்த்துக்கட்டும்" என்றார் பழைய படியே. நான் இடைவிடாமல் கொஞ்ச நேரம் வாதாடிக் கொண்டே இருந்தேன். எம்.ஜி.ஆரும் சளைக்கவில்லை. "தம்பி இப்படியெல்லாம் பேசலாமா? அதான், தேர்தல் வைங்க"

இதே வார்த்தைகளைத்தான் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தார்.

ஒரு கட்டத்தில் எனக்குப் புரிந்து விட்டது: 'இனிமேல் இவரிடம் பேசி

வி.கே. ராமசாமி

காரியம் வெற்றியாதல் சாத்தியமில்லை' என்று உணர்ந்தேன்.

மிகுந்த சோகம் நெஞ்சை அழுத்த, "அப்ப நான் இதையே போய் சிவாஜியிடம் சொல்லிடறேன்" என்றேன்.

எம்.ஜி.ஆர். பதிலேதும் சொல்லவில்லை.

வேறு வழியில்லாமல் நான் கிளம்பி வர வேண்டியதாகி விட்டது.

அந்தச் சோகமும் துக்கமும் இவ்வளவு அல்லவு அல்ல. ஆசை ஆசையாகப் பார்த்துக் கட்டிய கட்டடம், எதிர்காலத் திட்டங்கள், சாதிக்க நினைத்திருந்த காரியங்கள் எல்லாம் ஒருதரம் மனக்கண்ணில் வந்து போனது.

விஷயம் மேலும் ரசாபாசமாகிவிடாமல் இருக்கும் பொருட்டு, உடனடியாக சிவாஜி, மேஜர், நான் உள்ளிட்ட நிர்வாகக் குழு ராஜினாமா செய்து விடுவதாக முடிவு செய்து அப்படியே செய்து விட்டோம்.

ஆனால், அடுத்தடுத்து வந்த நிர்வாகங்கள் இந்தக் கடனை அடைக்க எவ்வித முயற்சியும் எடுக்காமல் போனதுதான் பிரச்னைக்கு முக்கியக் காரணமாகி விட்டது. வட்டிக்கு மேல் வட்டி ஏறிக் கொண்டே போக, சுமார் இருபத்தைந்து லட்சமாக இருந்த கடன் இன்று கிட்டத்தட்ட இரண்டு கோடியே முப்பது லட்சத்துக்கும் மேலாக வளர்ந்து, பூதாகாரமாக நிற்கிறது!

இன்றைக்கு நடிகர்கள் இரண்டு அணியாகப் பிரிந்து நின்று மோதிக் கொள்வதற்கான காரணங்களுள் முக்கியமானது இதுதான்.


'நடிகர் சங்க நிர்வாகிகள், சங்கத்தின் கடனை அடைக்கவோ, சங்கத்தின் வளர்ச்சிக்கு ஏதாவது செய்யவோ முயற்சி ஏதும் எடுக்கவில்லை' என்பதுதான் பிரதான குற்றச்சாட்டு.

இந்தப் போராட்டத்துக்கு இன்னொரு முக்கியக் காரணமும் இருக்கிறது.

சில நாட்களுக்கு முன் விநியோகஸ்தர்கள் சில குறிப்பிட்ட நடிகர்களுக்கு எதிராக - பாதகமாகச் சில தீர்மானங்கள் போட்டார்கள் அல்லவா? அதனைக் கண்டித்து நடிகர் சங்கத்தின் சார்பில், அதன் தலைவரால் ஒரு கண்டன அறிக்கைகூட வெளியிடப் படவில்லை என்று ஒரு சில நடிகர்கள் மனம் புண்பட்டுக் குமுறினார்கள்.

இவற்றின் விளைவுதான் நடிகர்கள் இரண்டாகப் பிரிய நேர்ந்தது.

புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள சினிமா ஆர்ட்டிஸ்ட் யூனியனின் தெளிவான குற்றச்சாட்டு இதுதான்: 'நடிகர் சங்கத்தின் தலைமை சரியில்லை. நிர்வாகம் பொறுப்பாக நடத்தப்படவில்லை. ஆகவே தலைமை பதவி விலக வேண்டும்!'



"உங்க ஆபீஸ் கிளார்க் நிரஞ்சனாவோட நேத்து நீங்க சினிமாவுக்குப் போனீங்களாமே?"

"யாரோ உனக்குத் தவறான தகவல் கொடுத்திருக்காங்க! நிரஞ்சனா கிளார்க் இல்லை, ஸ்டெனோ!"

— மேல்மங்கலம் பத்ரா

யூனியன் ஆக்ட் பிரகாரம் இயங்கும் இந்தப் புதிய சங்கமும் 'பெப்ஸி'யுடன் (24 சினிமாத் துறை சங்கங்களின் கூட்டமைப்பு) இணைந்திருக்கிறது.

இதில் என்ன சிக்கல் என்றால், நடிகர்களுக்கு என்ன குறை நேரிட்டாலும், போராடித்தான் ஆக வேண்டும் என்கிற நிலை தோன்றுமானால், யூனியன் ஆக்ட்படி 'பெப்ஸி'யில் உள்ள அத்தனை சங்கங்களும் சேர்ந்து போராட்டம் நடத்தும்.

ஆனால், சொஸைட்டி ஆக்ட் பிரகாரம் இயங்கும் சங்கங்கள் (நடிகர் சங்கம் அப்படிப் பட்டதுதான்) அதைச் செய்ய முடியாது என்று சொல்கிறார்கள்.

"தேர்தல் வைக்கக் கூடாது. நடிகர் சங்கத்தில் இப்போதுள்ள நிர்வாகம் தானாக முன்வந்து விலகி, புதிய நிர்வாகத்துக்கு வழி கொடுக்க வேண்டும்" என்று சினிமா ஆர்ட்டிஸ்ட் யூனியன் தீவிரமாகக் கேட்கிறது.

"அது சாத்தியமில்லை. தேர்தல் வைத்துத்தான் நிர்வாகத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்" என்று சொஸைடி ஆக்டில் உள்ளவர்கள் சொல்கிறார்கள்.

"தேர்தல் நடத்தக்கூடிய அளவுக்கு உங்கள் நடவடிக்கைகள் சரியில்லை. ஆகவே நடத்தக் கூடாது; முடியாது!" என்கிறார்கள் யூனியன் காரர்கள்!

விஷயம் முதல்வர்வரை போயிருக்கிறது இப்போது. இதனால் எனக்கொரு ஆறுதல்! கலைஞர் எப்படியும் இந்தப் பிரச்னைக்கு சுமுகமான ஒரு தீர்வைக் கண்டு பிடித்துச் சொல்லி விடுவார்!

யோசித்துப் பாருங்கள். சங்கம் தொடங்கிய நாள் முதலாக அதன் வளர்ச்சியில் ஆர்வம் கொண்டு உழைத்தவன் நான். அந்தக் காலத்திலேயே ரூபாய் நூற்றைம்பது கட்டி சங்கத்தின் ஆறாவது ஆயுள் சந்தாதாரராகச் சேர்ந்தவன். சிவாஜி தலைமையில் மேஜருடன் இணைந்து சங்கத்துக்குக்காக நான் பட்ட பாட்டை திரையுலகம் மட்டுமல்ல; தமிழ்நாடே அறியும்.

இது இப்படிச் சின்னாபின்னமாகிவிட்டதே என்பதைப் பார்க்க, எனக்கு ரத்தக் கண்ணீர் வருகிறது!

வயசான காரணத்தால் உடல் சோர்ந்திருந்தவன் - சமீப காலமாக இங்கு நடந்த - நடக்கிற அவலங்களைப் பார்த்து மனம் நொறுங்கிப் போய்விட்டேன்!

கொஞ்சநாள் முன்பு ராதாரவி என்னிடம் "அடுத்தத் தேர்தல் வரப் போகுது. நீங்க தலைவரா இருங்க. நான் செயலாளரா நிக்கறேன்" என்று சொல்லியிருந்தார். இரண்டு முக்கியஸ்தர்கள் மூலமாகவும் இதையே சொல்லியனுப்பி, உறுதி செய்திருந்தார். ஆனால் உடல் நலம் சரியில்லாத நிலைமையில் தற்சமயம் நான் வகித்து வரும் உப தலைவர் பொறுப்பைக்கூட என்னால் சரிவர கவனிக்க இயலாமல் இருந்தது.


அதனால்தான் அந்த வேண்டுகோளையும் ஏற்காமல் இதுவரை நான் பொறுப்பிலிருந்த உபதலைவர் பதவியையும் சமீபத்தில் ராஜினாமா செய்து விட்டேன்!

எனக்கு எல்லா நடிகர்களும் சமம்தான். பாகுபாடே இல்லை! சங்கத்தை சிறப்பாக வைத்துக் கட்டிக் காக்க முடியும் என்று உத்தரவாதம் தரும் யார் வேண்டுமானாலும் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளட்டும்; நான் மனசார வாழ்த்தி வரவேற்கவே செய்வேன்.

ஏழை நடிகர்கள் ரூ. ஐந்தும் பத்துமாகப் போட்டு உறுப்பினராகச் சேர்ந்து உருவான - உருவாக்கிய சங்கம் இது. அது கடலில் மூழ்கிக் காணாமல் போகிறது என்றால் கலங்காமல் என்ன செய்ய?

யார் மூலமாவது, எப்படியாவது இந்தச் சங்கத்துக்கு ஒரு விடிவு காலம் ஏற்பட்டு விடுமானால் போதும்! இப்போதைக்கு நான் இறைவனிடம் வேண்டுவதெல்லாம் இது ஒன்றைத்தான்!

(தொடரும்)



மீண்டும் தவமிருந்து திரும்பிய ப்ருகு முனிவர் வருணனிடம் வந்து சொன்னார்.

''இப்போது தெரிந்து போயிற்று எனக்கு. ஆனந்தம்தான் பரப்ரும்மம்.''

ப்ரும்ம வித்யை என்பது அன்னத்திலே ஆரம்பித்து இப்படி படிப்படியாக ஆனந்தம் தான் இறுதி நிலை என்பதை நமக்கு உணர்த்துகிறது.

பகவான் ஆனந்த மயமானவனாக இருக்கிறான்.

மயம் என்றால் 'நிறைய' என்று பொருள்.

அன்னமயோ யக்ஞ: என்பது வாக்கு. ஒரு பெரிய யக்ஞம் நடக்கிறது. அங்கு வந்தவர்களுக்கெல்லாம் ததியாராதனை - வாரி வாரி அன்ன தானம் செய்கிறார்கள்.

குறைவொன்றுமில்லை 13

பகவான் இருக்கிறானே... அவனைச் சேர்ந்தவர்கள் பக்தர்கள் - ததீ என்பது இவர்களைக் குறிக்கும். இவர்களை ஆதரிப்பதே ததீ ஆராதனை.

யக்ஞத்திலே வாரி வாரி ததியாராதனம் நடக்கிறது. அந்த யக்ஞத்தை எல்லோரும் கொண்டாடுகிறார்கள். அன்னமயோ யக்ஞ: என்றால் அந்த யக்ஞத்தில் அன்னத்துக்குக் குறைவில்லை என்று பொருள். அன்னம் மிகுந்த யக்ஞம்; அன்னம் மலிந்த யக்ஞம். அதுபோன்றுதான் ஆனந்தமயோ ப்ரும்மம்...

ஆனந்தமயம் என்றால்...? அளவிட முடியாதது என்று அர்த்தம். இன்னதென்று சொல்ல முடியாதது. சொல்லிமாளா இன்ப வெள்ளம். எடுக்க எடுக்கக் குறைவில்லாத இன்ப ஊற்று. அனுபவிக்க அனுபவிக்க அப்பொழுதைக்கு அப்பொழுது ஆராவமுதம். இன்றைக்கு அனுபவித்தால் நாளைக்கு அது வேண்டாம் என்று சொல்ல முடியுமா...?!

இந்த முழுமையான ஆனந்தத்தை ப்ரும்மானந்தத்தை நாம் அவனிடத்திலேதான் பெற முடியும். 'வாசாம கோசரம்' வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதது அந்தப் பரமானந்தம்; ப்ரும்மானந்தம்.

ஒருத்தர் ஒரு பூலோக விஷயத்தை 'ஆஹா ஆனந்தம்' என்று குறிப்பிடுகிறார். இன்னொருத்தர் ஓடி வந்து, "அதையா ஆனந்தம் என்கிறீர்...? அதைக் காட்டிலும் பெரிய ஆனந்தம் எனக்குத் தெரியுமே...?" என்கிறார்.

அதை அனுபவித்துப் பார்த்துவிட்டு, 'ஆமாமாம் இதுவல்லவோ ஆனந்தம்!' என்று மாற்றிச் சொல்கிறார் முதலாமவர்.

இப்படியாக நாம் சொல்லக் கூடிய ஆனந்தமெல்லாம் மாறிக் கொண்டே வருகிறது. ஆனால் அவனிடத்திலே கிடைக்கக் கூடிய ஆனந்தம் ஒரு நாளும் அழிவில்லாத, சாச்வதமான ஆனந்தம். நித்தியமான, உயர்ந்ததான ஆனந்தம்.

நமது உடம்பிலே அன்னமய கோசம், பிராண மய கோசம், மனோமய கோசம், விஞ்ஞான மய கோசம், ஆனந்த மய கோசம் என ஐந்து கோசங்கள் இருக்கின்றன.

இந்த கோசங்களில் சுத்தி ஏற்பட்டால்தான் பரப்ரும்மத்தைக் குறித்து தெரிந்து கொள்ள முடியும். இல்லாவிட்டால் அவனை உணர நம்மால் முடியாது. சாமான்ய விஷயங்கள்தான் நமக்குத் தெரியும்.

அன்ன மய கோசத்தில் சுத்தி ஏற்பட வேண்டுமென்றால் நாம் உபவாசாதிகளெல்லாம் இருக்க வேண்டும். விரதங்களெல்லாம் அனுஷ்டிக்க வேண்டும்.

உபவாஸம் என்றால் என்ன...? அருகில் இருத்தல் என்று பொருள்.

உபநிஷத் என்றாலும் அருகில் இருத்தல் என்றுதான் பொருள் - எதன் அருகில் என்று கேட்டால், பரப்ரும்மத்தின் அருகில்...



கர்ம காண்டமெல்லாம் தூரத்தில்தான் இருக்கிறது. உபநிஷத்தான் உடனே நமக்கு பரப்ரும்மத்தை எடுத்துக் காட்டுகிறது.

உபவாஸம் - அருகில் இருத்தல் - என்றால் எதன் அருகில்? மடப்பள்ளிக்கு அருகில் இருத்தல் என்றா அர்த்தம்! இல்லை; பரப்ரும்மத்துக்கு அருகில் என்று பொருள். உபவாஸம் என்றால் பட்டினியாய் இருத்தல் என்பது அல்ல முக்கியப் பொருள். அன்னத்தை விட்டு விலகி இருத்தல் என்று பொருள். இந்த அன்னத்தைக் குறைத்துவிட்டு அன்னமாகிற பரப்ரும்மத்தை உட்கொள்ள வேண்டும். அப்போதுதான் உபவாஸம் பூர்த்தியாகும்.

நாம் நித்யமே இரண்டு வித அன்னங்களும் புகட்டித்தான் இந்த சரீரத்தை வளர்க்க வேண்டும்.

முதல் வகை : இந்த சரீரம் நிற்பதற்கான அன்னம். இரண்டாவது - ஆத்மா நிலைப்பதற்கான அன்னம். முதல் அன்னத்தை மட்டும் சாப்பிட்டுவிட்டு உட்கார்ந்திருந்தோமானால் ஆத்ம ஞானமே ஏற்படாது. இந்த சரீரத்தைக் கொடுத்தவனே இதைவிட்டுப் போய் விடுவான். அது மொத்தமும் வீணாகப் போய்விடும்.

ஆகையினால் அன்னமாகிற பரப்ரும்மத்தை இட்டு இந்த சரீரத்தை வளர்க்க வேண்டும்.

வேடிக்கையாகச் சொல்வதுண்டு - கீரை உடம்புக்கு நல்லது; கீதை உள்ளத்துக்கு நல்லது என்று.

வேதத்திலே கூட கீரை என்கிற சப்தம் வருகிறது. கீரை என்றால் ஞானி என்று அர்த்தம்!

ஆகவே, அன்னத்தைக் குறைக்க வேண்டும். அன்னமாகிற பரப்ரும்மத்தை உட்கொண்டால் அன்னமய கோசத்திலே சுத்தி ஏற்படும்.

அடுத்து பிராணமய கோசத்திலே சுத்தி ஏற்பட வேண்டுமானால் ரேசக, பூரக, கும்பகம் ஆகிய நிலைகளைச் சுத்தி செய்ய வேண்டும். அதற்கான உபாயம் பிராணாயாமம் தான். சந்தியாவந்தன காலத்திலே பத்து பிராணாயாமங்களாவது செய்வதென்று விதிக்கப்பட்டிருக்கிறது. சக்தி இருந்தால் அதற்கு மேலும் பண்ணலாம். இந்த ப்ராணாயாமத்தினாலே பிராணமய கோசத்திலே வாயுக்களெல்லாம் சீராக இருக்கும். ஐந்து வகை வாயுக்கள் உடலில் உண்டு.

இந்த வாயுக்கள் எல்லாம் முறையாக இருந்தால்தான் கை, கால்களெல்லாம் சீராக இயங்கும். நடை அழகும் பார்வை தீட்சண்யமும் இருக்கும். வாக்கு பலமாக இருக்கும்.

வாக்கு பலம் என்றதும் ஒரு விஷயம் நினைவுக்கு வருகிறது. வேத வித்துக்களான மகான் கள்தாம் ஆசி வாக்குகளைக் கூற வேண்டுமா? நம்மை நாமே ஆசி பண்ணிக் கொள்ளக் கூடாதா...? என்று ஒரு முறை சர்ச்சை எழுந்தது! சாமானியன் ஒருவன் ஆசி பண்ணக் கூடாதா? என்று ஒரு கேள்வி எழுந்தது.

எல்லோரும் சேர்ந்து அந்த சபையில் நிர்ணயம் செய்தார்கள், வேத வித்துக்கள் தான் ஆசி வழங்கலாம் என்று.

ஏன் என்று கேட்டால், அதற்கு மாணிக்க சாஸ்திரி என்பவர் சொல்லக்கூடிய ஒரு விஷயத்தைச் சொல்லலாம். தர்க்க சாஸ்திரத்திலே பெரிய நிபுணர் அவர். அவர் சொல்கிறார்: "பசுவினிடத்திலே நாம் பாலைப் பெறுகிறோம். வைக்கோலையும் புண்ணாக்கையும் போடுகிறோம். அதைச் சாப்பிட்டுவிட்டு அது பாலைப் பொழிகிறது. அதற்குப் போடும் புல் மொத்தத்தையும் நாமே சாப்பிடுவோம்... பசுவினிடத்தி விருந்து

அருள்வாக்கு

நாம் இப்போது நான்கு விதங்களில் பாபம் செய்கிறோம். உடம்பால் பல கெட்ட காரியம்; வாயால் புரளிப் பேச்சும் அசத்தியமும்; மனத்தினால் கெட்ட நினைவுகள்: பணத்தினால் செய்கிற பாவத்தைச் சொல்லவே வேண்டாம்.

எந்த நான்கால் பாவம் செய்தோமோ, அந்த நான்காலுமே புண்ணியம் செய்யப் பழக வேண்டும்.

உடம்பைப் பரோபகாரம், பகவானைப் பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரிப்பது இவற்றில் ஈடுபடுத்திப் புண்ணியம் செய்ய வேண்டும்.

வாயால் பகவந் நாமாவைச் சொல்லிப் புண்ணியம் செய்ய வேண்டும். 'சம்பாதிப்பதிலேயே பொழுதெல்லாம் போய் விடுகிறது; இதற்கு அவகாசம் இல்லையே' என்பீர்கள். சம்பாதிப்பது கிருகஸ்தர்களுக்கு அவசியம்தான். ஆனால் யோசித்துப் பார்த்தால் அதற்கே பொழுது முழுதும் போய் விடவில்லை என்று தெரியும். வீண் பேச்சு, பரிகாசம் வேடிக்கை பார்ப்பது, நியூஸ் பேப்பர் விமரிசனம் இவற்றில் எவ்வளவு பொழுது வீணாகிறது? அதையெல்லாம் பகவந்நாம ஸ்மரணையில் செலவிடலாமே! இதற்கென்று தனியே பொழுது ஏற்படுத்திக் கொள்ள முடியாவிட்டாலும் பரவாயில்லை. காரியாலயத்துக்கு பஸ்ஸிலோ, ரயிலிலோ போகும்போது பகவந்நாமாவை ஜபித்துக் கொண்டே போகலாமே. ஓடி ஓடிச் சம்பாதிப்பதில் ஒரு பைசா கூடப் பிற்பாடு உடனோடு வராதே! மறு உலகத்தில்

கிடைக்கக் கூடிய பால் நம்மிடம் கிடைக்குமா! பசுதானே அதற்கு அதிகாரி! அது போன்றுதான் வாக்கு பலமும். வேத வித்துக்களாகி, விஷயத்தை நன்கு உணர்ந்த பிரும்ம ஞானிகளால்தான் ஆசிர்வாதம் பண்ண முடியும். மற்றவர்கள் வாயால் வேண்டுமானால் சொல்லலாம். ஆனால் அது ஆசி ஆகுமா? பலிக்குமா? வேத வித்துக்கள் ஆசி வழங்கினால்தான் கட்டாயம் பலிக்கும்..." என்று விளக்குகிறார் மாணிக்க சாஸ்திரி.

வாக்கு பலத்தை விவரிக்க இந்த உபமானத்தைச் சொன்னேன்.

அடுத்தது மனோ மய கோசம். அதுவும் சுத்தி அடைய வேண்டும்.

வீணான விஷயங்களில் மனத்தைச் செலுத்தாமல் இருக்க வேண்டும். என்னென்ன உயர்ந்த விஷயங்கள் எல்லாம் உலகத்தில் உண்டோ, அவற்றுக்கெல்லாம் மேலாக ஒருபடி உயர்ந்தே இருக்கிறவன் பரமாத்மா.

அந்த வீணான விஷயங்களிலேயே மனம் போகுமானால் அவற்றினும் மேலானதை எப்படி நாடும். அதனால்தான் மனஸைக் கட்ட வேண்டும் என்கிறார்கள்.

பரமார்த்த ஸ்துதி என ஒன்று இயற்றியுள்ளார் ஸ்வாமி தேசிகன். காஞ்சிபுரத்துக்கு சமீபத்தில் உள்ள திருப்புட்குழி என்னும் திவ்ய தேசம் - அங்கே இருக்கிற விஜயராகவப் பெருமாள் பேரிலான ஸ்துதி.

அதிலே சொல்கிறார் 'உலகிலே பாருங்கள்... எதுவுமே பரமார்த்தம் ஆகாது' என்று. பொருளை ஒருத்தர் நிறைய சம்பாதிக்கிறார். அது பரமார்த்தமா?

பொருள் என்பது எப்போதும் துக்கமே தரக் கூடியது. அதை சம்பாதிப்பதும் கஷ்டம்; காப்பாற்றுவதும் கஷ்டம்: செலவு செய்து விட்டாலும் கஷ்டம் அடடா! முடிந்து போய் விட்டதே என்று கவலை!

பணத்தைக் கொண்டு வேறு திரவியத்தை வாங்கித்தான் சாப்பிட வேண்டும். அதுவே நமக்குப் பசியைப் போக்காது என்பதால் அது பரமார்த்தம் ஆகாது.

வெயில் காலத்தில் சௌக்கியமாக மின் விசிறியைப் போட்டுக் கொண்டு தூங்குகிறார் ஒருத்தர்... அதையே குளிர் காலத்தில், மார்கழி மாசத்தில் செய்ய முடியுமா...?

அந்த நேரத்திலே ஃபேனைப் போடுகிறேன் என்றால் ஒப்புக் கொள்வாரா தூங்குகிறவர்...?

என்ன தெரிகிறது? மின் விசிறி என்பது ஒரு காலத்திலே வேண்டியதாக இருக்கிறது. அதுவே இன்னொரு காலத்தில் வேண்டாததாக இருக்கிறது.

இதெல்லாம் பரமார்த்தம் தருமா...? இப்படியே ஒவ்வொரு வஸ்துவையும் மனஸாலும் அறிவாலும் (விஞ்ஞான மய கோசம்) ஆராய்ந்து கொண்டே போனோமானால் ஒரு சமயம் வேண்டியிருக்கிறது. இன்னொரு சமயம் அதுவே வேண்டாததாகிறது. எதைப் பார்த்தாலும் அதிலே சாரமேயில்லை.

பின் எதுதான் பரமார்த்தம்...?

அந்த பரப்ருஹ்மம் ஒன்று தான் பரமார்த்தம். ஆங்கயினால்தான் பரமார்த்த ரூபியை ஆச்ரயிக்க வேண்டும் என்றது. அப்படி எவனை நாம் ஆச்ரயிக்கிறோமோ, எவனை நாம் அடைந்தால் க்ஷேமத்தைப் பெறுவோமோ... அவன்தான் விஷ்ணு.

(தொடரும்)




[illegible] ஒன்றுதானே? மனசு பகவானின் இடம். அதைக் குப்பைத் தொட்டியாக்கியிருக்கிறோம். அதைச் சுத்தப்படுத்தி மெழுகி பகவானை அமர வைத்து நாமும் அமைதியாக அமர்ந்து விட வேண்டும். தினமும் சில நிமிஷங்களாவது இப்படி தியானம் செய்ய வேண்டும். லோகமே முழுகிப் போனாலும் நிற்காமல் நடக்க வேண்டிய காரியம் இது. ஏனெனில், லோகம் முழுகும் போதும் நமக்குக் கைகொடுப்பது இதுதான்!

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

டக்லு

இரா. முருகன்



ராஜ்கபூர் நடனம் ஆடியபடியே முன்னால் நகர்ந்து வந்தார். கையில் குஞ்சம் தொங்கும் கழி. நான் இப்போது தலையை நீட்ட வேண்டும். நீட்டி ஒரு வினாடி ப்ரேமுக்குள் வர, மொட்டைத் தலையில் லொட் என்று ஒரு தட்டு. பென்சில் மீசை வரைந்த கோஷ்டி ஆட்டக்காரர்கள் தாவிக் குதித்தார்கள்.

"கட்" - அவ்வளவுதான். செட்டுக்கு வெளியே வந்து, ஆஸ்பெஸ்டாஸ் கூரை நிழலில் நின்றபோது வியர்வையில் தொப்பலாக நனைந்திருந்தேன்.

"க்யா டக்லு... முடிச்சாச்சா?"

ரோஷ்ணிபாய் ஓரமாகக் கால் நீட்டி உட்கார்ந்து கொண்டிருந்தாள். பக்கத்தில் துணி விரிப்பில் குழந்தை. கால் பக்கம் உதைத்து உருட்டி விட்ட பால் புட்டி.

"உனக்கு என்ன சீன் ரோஷ்ணி?"

தலையைக் கைக் குட்டையால் துடைத்தபடி கேட்க, ரோஷ்ணி காவியேறிய பல்லைக் காட்டிச் சிரித்தாள்.

"நானா... ராஜ்கபூரோட டூயட் பாட வந்திருக்கேன்..."

முசாபர்பூரிலிருந்து பத்து வருடம் முன்னால் கிளம்பி வந்தபோது கூடக் கொண்டு வந்த கனவு அது.

உள்ளேயிருந்து யாரோ கையசைக்க, ராஜஸ்தான் பாவாடை அணிந்த நடனக்காரிகள் திமுதிமுவென்று உள்ளே ஓடினார்கள். ரோஷ்ணிபாய் வாரிச் சுருட்டி எழுந்து குழந்தையைத் தூக்கிக் கொண்டாள்.

"நானும் போகணும்... மடியிலே பிள்ளையோட திண்ணை

யிலே உட்கார்ந்து இருக்கற போது பத்மினி ஆடிக்கிட்டு வருமாம்..."

அழ ஆரம்பித்த குழந்தை வாயில் பால் புட்டியைத் திணித்தபடி உள்ளே ஓடினாள் ரோஷ்ணிபாய்.

அதென்ன மேமர்...

ரோஷ்ணிபாயின் முகத்தில் ஒரு கைக்குழந்தைக்காரி களையிருக்கிறது போல. தட்டுப்பட்ட படம் எதுவானாலும் கையில் குழந்தை நிச்சயம்.

புரடக்ஷன் ஆட்கள் யாராவது கண்ணில் படுகிறார்களா என்று ஸ்டூடியோ முழுக்கச் சுற்றி வரும்போது அமீர்பாய் வழிமறித்தான். பக்கத்து ப்ளோரில் ஷூட்டிங்

போல... வானர வேஷத்தில் இருந்தான் அவன். எத்தனை தடவைதான் ராமாயணத்தைப் படம் பண்ணுவார்களோ!

"டக்லு... சந்தா எங்கே? போன மாசத்துக்கும் தரலை."

துணை நடிகர் சங்க டிரஷரர். மாதம் பத்து ரூபாய் எப்பாடுபட்டாவது கொடுத்தால் தான் சங்கம் கொடுத்த அடையாள அட்டைக்கு உயிர் இருக்கும்.

"பாய்ஜான்... புரடக்ஷன் மானேஜர் கண்ணுலே பட மாட்டேங்கறான்... பணத்தை வாங்கிக்கிட்டுப் பள்ளிக்கூடத்துக்குப் போகணும்... வழியை விடு..."

வானரம் வாயைப் பிளந்து சிரித்தது.

"என்ன டக்ளு... இனிமே புதுசா படிச்சு கவர்மெண்ட் வேலைக்குப் போற உத்தேசமா?"

"நீ வேறே வயத்தெரிச்சலைக் கிளப்பாதே... பணத்தை வாங்கிட்டுப் போய் பையனுக்கு பீஸ், கட்டக் கடைசி நாள். இன்னிக்கு விட்டுடு... நாளைக்கு பிரபாத் ஸ்டூடியோவில திலீப்குமாரோட ஷூட்டிங் முடிச்சுட்டு நேரா மாஹிமுக்கு வந்து உன் பேகம்கிட்டே கொடுத்துட்டுப் போறேன்..."

அமீர்பாய் தலையில் தட்டினான். ராஜ்கபூர் ஏழெட்டு டேக் வாங்கிய எரிச்சலோ, குஷியோ கழியால் கொஞ்சம் பலமாகவே தட்டியது இன்னும் வலித்துக் கொண்டிருந்தது. இவன் வேறே...

"நீ பாவப்பட்ட ஆத்மி டக்லு.. தலையிலே தங்கச் சுரங்கத்தையே வச்சுக்கிட்டு அஞ்சு பத்துக்கு அலையறியே... உன்ன மாதிரி வழுக்கை மண்டையும் நீள மூக்கும் இருந்தா நான் இன்னேரம் நம்பர் ஒன் காமெடியனாயிருப்பேன்."


ஆகியிருப்பான்தான். இந்தியும் உருதுவும் எழுதப் படிக்கத் தெரிந்தவன். என்னைப் போல ஆபத்து அவசரத்துக்கு இந்தி பேச மட்டும் தெரிந்த திருநெல்வேலிக்காரன் இல்லை.


"எத்தனை நாள்தான் வெறும் தாமரபரணி தண்ணியை மட்டும் குடிச்சுக்கிட்டு இங்கேயே உட்கார்ந்திருக்கப் போறே... என்னோட பம்பாய்க்கு வா... சமையல்லே கொடிகட்டிப் பறக்கறேன்.. காது குத்து, கல்யாணம், கருமாதி எல்லாத்துக்கும் காண்ட்ராக்ட் குக்கு. கூட வந்து கரண்டி பிடிச்சா மளமளன்னு முன்னாலே வந்துடலாம்..."

சபேசன் மாமா கொடுத்த உற்சாக வரவேற்பில், எஸ்.எஸ்.எல்.சி. புத்தகத்தை எரவாணத்தில் செருகிவிட்டு, பம்பாய் கிளம்பி வந்து பதினைந்து வருடமாகி விட்டது.

பாத்திரம் துலக்க, இலையில் ஊறுகாயும் உப்பும் வைக்க, டெம்போவில் காஸ் அடுப்பையும், இரும்புச் சட்டி, ஜாரிணிக் கரண்டிகளையும் ஏற்றி இறக்கி எடுத்துப் போக என்று இரண்டு வருடம்.

கல்யாண ரிசப்ஷனில் ரசகுல்லா பரிமாறும்போது எகிறிப் போய் யார் மடியிலேயோ விழுந்ததால் சபேசன் பத்துப் பேருக்கு முன்னால்





நாக்கைப் பிடுங்குவது போலத் திட்டி வெளியே அனுப்ப, பத்து நாள் பினாட்பார வாசம். அதில் ஒருநாள் பிரபாத் ஸ்டுடியோ வாசலில் ஏதோ கூட்டம் நிற்க, கூடவே போய் நின்றேன்.

"நீ வேணாம் போ... இந்த கிராப் சரித்திரப் படத்துக்கு சரிப்படாது... விக்கும் கம்பியாத்தான் இருக்கு... நீ வாட்சை அவுத்துட்டு உள்ளே போய் நில்லு. அந்த ரெண்டு கிழவியும் இருக்கட்டும். இந் தாப்பா டக்லு- புதுசா?"



"பாவம், அந்தப் பல் டாக்டர்..."
"ஏன்?"
"சொத்தைப் பல்லைக் கொஞ்சம் வேகமா பிடுங்கப் போய், பின்பக்கமா விழுந்து தலைல அடிபட்டுக்கிட்டார்!"
— மஞ்சுளா கிருஷ்ணன்.

நான் அலங்கமலங்க விழித்தேன். டக்லு என்றால் மொட்டை என்று அப்போது தெரியாது.

இருபது வயசிலேயே முடி கொட்டிப் போன தலைக்கு இப்படியும் ஒரு உபயோகம் என்று புரிந்து கொண்ட போது நான் துணை நடிகனாக பரத்பூஷன் பின்னால் தலையை ஆட்டிக் கொண்டு நடந்து போனேன். 'பெய்ஜு"பாவ்ரா'வுக்கு அடுத்த அந்த சரித்திரப் படத்தில். என் பக்கத்தில் கட்டையை ஊன்றி நடக்கிற சக பக்தனாக அமீர்பாய் வந்தான்...

வேண்டாம் வேண்டாம் என்று சொல்ல, விடாமல் இழுத்துப் போய் ஸ்டுடியோ கேன்டீனில் சாயா வாங்கிக் கொடுத்தான் அமீர். நல்லவேளையாக அங்கேயே புரடக்ஷன் மேனேஜர் ஆம்லெட்டும் கையுமாக நின்றிருந்தான்.

அமீர்பாயோடு போயிருந்ததாலோ என்னவோ, கேட்டதும் பணம் கைக்கு வந்து விட்டது.

பஸ்ஸைப் பிடித்து, ரயிலைப் பிடித்துப் பள்ளிக்கூடம் போய்ச் சேர பிற்பகல் ஆகி விட்டது. அமீர்பாய் வாங்கிக் கொடுத்த டீயோடு கிடந்த வயிறு இரைந்தது.

நான் உள்ளே போனபோது வாசலில் வாட்ச்மேன் பக்கத்தில் இருந்த காக்கி நிக்கர்காரனிடம், "சினிமாவிலே வர மொட்டையண்டா" என்றது காதில் விழுந்தது.

பணத்தைக் கட்டிவிட்டு வரும்போது விளையாட்டு மைதானத்தில் கால்பந்து விளையாடிக் கொண்டிருந்த பையன்களில் என் பிள்ளையையும் பார்த்து ஒரு வினாடி நின்றேன்.

நின்றிருக்கக் கூடாது. பறந்து வந்த பந்து தலையில் மோத, நாலு ராஜ்கபூர் அடித்த வலி. பொறுக்கி எடுத்துப் போக வந்த பையன்கள், 'சினிமா டக்லு' என்று கத்தியபடி ஓட, ஒதுங்கி நின்ற பிள்ளை கண்ணில் நிறையும் ஈரம் கண்டு மனசில் வலி. வந்திருக்கக் கூடாதோ?

சாயந்திரம் வீட்டில் நுழைந்தால் இவள் பிடித்துக் கொண்டாள்.

"வழுக்கையோ மொட்டையோ, பம்பாயிலே மாப்பிள்ளை கைநிறையச் சம்பாதிக்கறார்னு உங்களுக்குக் கல்யாணம் செஞ்சு வச்சாங்க... எனக்கு சகிச்சுக்கலாம். சின்னப் பையன் தானே... கூடப் படிக்கிற பசங்க கிண்டல் பண்ணாங்களாம். எதுக்குப் பள்ளிக்கூடம் போனீங்க?"

கையை நம்பி சம்பாதிக்கிறவன் பதில் சொல்லலாம். தலையை வைத்து சம்பாதிக்கிறவன். கம்மாத்தான் நின்றேன்.

"போன மாசம் ஸ்கூல் லீவுக்கு ஊருக்குப் போனபோது, உங்கப்பா என்னவாடா இருக்கார்னு பசங்க கேட்கறாங்க. இவன் ரயில்வே ஆபீஸ்லே டைப்பிஸ்ட்ங்கிறான். பக்கத்து வீட்டு ஜோஷி பார்க்கற உத்தியோகம் அது... மானம் போறது..."

ஒரு வரி வசனம் பேசுகிற மாதிரி அவ்வப்போது நடித்தால் கூடக் கொஞ்சம் மதிப்பார்களோ என்னவோ... ஒரே ஒரு தடவை கல்யாண சீனில் 'ஐயோ அம்மா' என்று மதராஸி வசனம் பேசினதோடு சரி.

"ஏங்க... நான் வேணா இட்லி அவிச்சு, பொட்டலம் போட்டுத் தரேன்... சர்ச்கேட்டிலும், விடியிலும் எத்தனை ஆபீஸ் இருக்கு... மதிய நேரத்துலே பையோட போய் நின்னா விக்காதா?"

இட்லி மூட்டையோடு படி ஏறி இறங்கும் மொட்டையனை விட, தேவ் ஆனந்துக்கு சிகரெட் பற்றவைக்கிற, மதன்பூரியின் வில்லன் கிடங்கில் கட்டைத் துப்பாக்கி பிடித்து விறைப்பாக நிற்கிற, ஜானிவாக்கருக்கு விஸ்கி ஊற்றிக் கொடுக்கிற சினிமாக்கார டக்லு சுளுவான பிழைப்பு.

"அம்மா... நான் பெரியவனானதும் பெரிய டாக்டராவேன்.

உனக்கு ஒரு வீடு... அப்பாவுக்கு ஒரு வீடு... எனக்கு ஒரு வீடு... அப்பா வெளியே போகவே வேண்டாம்..."

❖

வரவர அபூர்வமாகத்தான் வெளியே போகிறேன். நடக்கவே முடியவில்லை. செம்பூரில் கோவிலுக்குப் பக்கம் பிளாட் என்று பெயர். கோவிலுக்குக் கூட வாரம் ஒரு தடவைதான் போகிறேன். படி ஏற முடியாமல் லிப்டில் தான் சந்நிதிக்குப் போக வேண்டி இருக்கிறது. லிப்ட்டிசன் டிக்கெட் வாங்கியிருக்கிறேன்.

பிள்ளையும் மருமகளும் எப்போதும் பரபரப்புக்கு நடுவில் தான். நிம்மதியாக இருக்க என்று எனக்கும் இவளுக்குமாக இங்கே செம்பூரில் பிளாட் வாங்கி இருத்தியிருக்கிறார்கள். சமையலுக்கு மாமி, சுற்றுக் காரியத்துக்கு வேலைக்காரி... ஒரு குறையும் இல்லை.

போன் இருக்கிறது. பிள்ளை அவ்வப்போது பேசுகிறான். பேரக் குழந்தைகள் போனில் நர்சரி ரைம் அழகாகச் சொல்கிறார்கள். கார் அனுப்பி இரண்டு பேரையும் கூட்டிப் போய் நான் கிழமை பண்டிகை என்றால் சீராட்டுகிறாள் மருமகள்.

"இட்லிக் கடை போட்டா இந்நேரம் கார்லே போக முடியுமா?" – நான் கேட்கிறேன். இவள் காது மந்தமாகி வெறுமனே சிரிக்கிறாள். வயசான காலத்தில் வைரத்தோடு எதற்கு என்று சொன்னால் காதில் விழாது.

"டி.வியைப் போடுங்களேன்..."

சத்தமாக வைக்க முடியாது. பக்கத்து பிளாட்டில் அதிரும். இவள் மௌனப் படம் பார்க்கட்டும்.

ரிஷிகபூர் நடனம் ஆடியபடியே முன்னால் நகர்ந்து வருகிறார். கையில் குஞ்சம் தொங்கும் கழி. என் பிள்ளை தலையை நீட்டுகிறான். ப்ரேம் முழுக்க அவன்தான்.

'காமெடி வில்லன் டக்லு ஜூனியரின் பற்பசை...' டி.வி. விளம்பரம் குறுக்கிடுகிறது. பிரம்மாண்டமான டூத் பிரஷ்ஷில் பசை அப்பி முன்னும் பின்னும் நகர்ந்து பல் விளக்கும் டக்லு ஜூனியர். பக்கத்து ப்ளாட்டில் பலமான சிரிப்பு.

இவனுக்குத்தான் எத்தனை சந்தோஷம்!

கொசு ஒழிப்பதில் சூரர்!



கொசுக்களை ஒழிக்க இந்தியாவிலேயே முதல்முறையாக புதிய சாதனம் ஒன்றை பெங்களூரைச் சேர்ந்த தேவதாஸ் கண்டுபிடித்திருக்கிறார். அவர் சொல்கிறார் :

"இந்தச் சாதனம் மருந்து கலவாதது. நீர் தேக்கங்கள் அருகே கரையோரம் என் சாதனத்தை வைக்க வேண்டும். மறுநாள் காலை கொசுக்கள் இறந்து கிடப்பதைக் காணலாம். பங்களூர் மாநகராட்சி எனக்கு மூன்று வருஷ ஒப்பந்தம் தந்தால் நகரில் கொசுக்களை ஒழித்துக் காட்டுவேன்!"

"உங்கள் சாதனம் பற்றி சென்னை மாநகராட்சிக்குத் தெரியுமா?"

"சென்னை மாநகராட்சி ஒரு 'மாஸ்டர் பிளான்' கொசு ஒழிப்புக்கு தயாரிக்கும்படி என்னைக் கேட்டிருக்கிறது. இதற்காக நான் கூவம் நதி, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி ஏரி முதலியவற்றைப் பார்வையிட்டேன். திட்டம் தயாரித்து வருகிறேன். ஏற்கப்படுமானால் சென்னையிலும் கொசுக்களிலிருந்து மக்களுக்கு விடுதலை பெற்றுத் தருவேன்!"

தேவதாஸ், ஆராய்ச்சி நிறுவனம் வைத்திருக்கிறார். கொசு ஒழிப்புதான் பிரதான ஆராய்ச்சியாம்.

பார்ப்போம், சாதனை புரிகிறாரா? அல்லது மற்றொரு ராமர் பிள்ளையாகிறாரா என்று!

— வி. எஸ். ராஜகோபால்.

ஆதாரம் : டெக்கான் ஹெரால்டு



"நிஜமாவே பாட்டி செத்துப்போயிட்டாளான்னு ரெண்டு தடவை உன்னை நான் கேட்டது உண்மைதான்; அதுக்காக லீவு லெட்டர்ல 'உங்கள் அவநம்பிக்கைக்குரிய'ன்னு எழுதி கையெழுத்து போடக் கூடாது!"

— அம்பை தேவா

"இந்த மாற்றம் ஒரு ஆரம்பம்தான்... போகப் போக காலம் கண்ணாமூச்சி விளையாட ஆரம்பிக்கும். பரீட்சை வைக்கத் தொடங்கும். அப்பொழுது, இப்பொழுதுள்ள உறுதியும் பிடிப்பும் மாறலாம். களைப்படைய நேரலாம்.

காலையில் குளித்தால் மாலையில் அழுக்காவதில்லையா என்ன...? அது மாதிரிதான் சமூகச் செயல்பாடுகளும்..."



ஆசை நெசவு 26

சப்தம் கேட்டு வெளியே வந்து பார்க்கிறாள் மகாலட்சுமி. தோள் பின்னால் பானுவும்...

நரசிம்மன் கூட்டம் நோக்கி நடக்கத் தொடங்கி விட்டார்.

நெருங்க நெருங்க மனித தேகங்களின் வளைப்பிலும் சலசலப்பிலும் தாமு தொண்டை கிழியக் கத்துவது துல்லியமாகக் கேட்கிறது.

அது மட்டுமா...?

"டேய் காப்பாத்தறேன்னு தொட்டு வெச்சி மாட்டிக்காதீங்கடா. போலீஸ்காரங்க நாற அடிச்சுடுவாங்க..." என்னும் குரலும்!

"எனக்குத் தெரியும் இவன் குடிச்சுப்புட்டு ஆட்டம் போடும்போதே நினைச்சேன். எங்கையாவது உழுந்து சாகப் போறான்னு..." என்னும் கருத்தும் மாறி மாறிக் காதில் விழுகிறது.

ஜனக்கூட்டம் குடைந்து எட்டிப் பார்க்கிறார். இடதுகாலை பின் சக்கரங்கள் துவையலாய் ஆக்கி விட்டிருக்கின்றன. லாரிக்காரனும் ஓடிவிட்டிருக்கிறான். சாதாரணமாய் இந்நிலையில் பிரக்ஞை தப்பிவிட்டிருக்கும். ஆனால் தாமு வரையில் மயக்கம் வருவேனா என்கிறது. கழுத்து நரம்பு புடைக்க அலறிக் கொண்டு எல்லோரையும் பார்க்கிறான். அவனது கந்தல் உடம்பிலிருந்து பிரிந்து நீளும் ரத்தப் பாம்பு நரசிம்மனின் கட்டை விரலைத் தீண்டுகிறது.

அவரும் இப்படி வேடிக்கை பார்ப்பது துளி கூட மனிதாபிமானமுள்ள செயல் அல்ல என்கிற உறைப்போடு காப்பாற்றும்

மார்ஜின் மொழிகள்:

○ பயமும் இல்லாத மனிதன் திறமையும் அற்றவன் இல்லாத கடமை பொறுப்பான்.
— ஆல்பர்ட்



ஆயத்தம் கொள்கிறார்.

"என்ன இது... இப்படி எல்லாரும் வேடிக்கைப் பாத்துக்கிட்டு நிக்கறீங்களே? ஆட்டோவை யாவது, டாக்சியையாவது கூப்பிடுங்க..."

"சார் வேண்டாம் சார்... இவன் போறதுதான் நல்லது. குடிகாரப் பாவி சார் இவன். போலீசும் கோர்ட்டு குளம்னு நம்மளைப் பிரிச்சு மேஞ்சுடுவாங்க... ஆட்டோகாரனும் வரமாட்டான் சார்..."

"ஆமாம் சார்... ஆண்டவனா பாத்து தண்டனை கொடுத்துருக்கான் இவனுக்கு. விட்றுங்க... விட்றுங்க..."

தாமு கதறுகிறான். தனக்கான சமூக அங்கீகாரம் இப்படியா பட்டிமன்றம் நடத்தும்?

"ஐயோ வலிதாங்கலையே... அந்த லாரிக்காரனை முழுசா என் மேல ஏத்தியாவது கொல்லச் சொல்லுங்களேன்..."

அவன் கதறலுக்கு நடுவில் கூட்டத்தில் தெரியும் பானுவின் முகம் அவனைக் கூடுதலாய் அலற விடுகிறது.

"பானூரா..." - நடுங்கும் கைகள் கெஞ்சுவதற்காக உயர எழும்பப் பார்க்கின்றன. முடியாது போகிறது.

இந்திரா செளந்தர்ராஜன்

"பானு... சாமி இல்லாம போயிடலை பார்த்தேல்ல... இவனா குடிச்சுப்பிட்டு வந்து உழுந்து எப்படி ஆயிட்டான்

பாத்தியா?" – ஒரு மகாஜனம் மகத்தான தனது கண்டுபிடிப்பைக் கொட்டி முழக்குகிறது.

நரசிம்மனுக்கு எரிச்சல் பீறிடுகிறது.

"யோவ் இது கனம் பாக்கற நேரமில்ல.. சாமி இருக்காம் சாமி. இப்ப அதா முக்கியம்..." – தன் டாடா சுமோ நோக்கி ஓடுகிறார்.

பானு வெறித்துக் கொண்டே நிற்கிறாள். அவள் கண்ணீர் விழியோடு துடிக்கிறாள்.

என்ன இருந்தாலும் மந்தா கிழவிக்கு தோள் கொடுத்தவன்... அப்பொழுது தன்னை வேடிக்கை பார்த்து நின்ற ஜனக்கூட்டம் இப்பொழுது இவளைப் பார்க்கிறது. வினை அம்புகள்தான் எத்தனை வேகமாக திரும்பி விடுகின்றன? அவளது ஆச்சரியத்தை கலைக்கிறது சுமோவின் ஹாரன் சப்தம். இறங்கி ஓடி வருகிறார் நரசிம்மன்.

"ஒரு கை பிடிங்கப்பா..." என்று சிலரைப் பார்க்க, அரைமனதாக அவர்கள் முன்வருகின்றனர்.

தாமு ரத்த மூட்டையாக உள் ஏறுகிறான். பானு பார்த்துக் கொண்டிருக்கிறாள்.


செய்தி கேள்விப்பட்டு ஓடிவந்து பார்க்கும் ஜவஹரும் மணியமும் அந்த ரத்தச் சகதி பார்த்துக் கசங்கிப் போகின்றனர்.

மணியத்தை அந்தக் காட்சி என்னவோ செய்கிறது. லாரியின் பக்கவாட்டு பாடி மேல் சாய்ந்து கொண்டு தலையை உதறிக் கொள்கிறான்.

"என்னப்பா...?"

"ஒண்ணுமில்லை..."

"இப்படி நின்னா எப்படி... தாமு பெரிய ஆஸ்பத்திரிக்குதான் போயிருக்கணும். வா போய்ப் பார்ப்போம்..."



"தலைவரே! பஞ்சாயத்துக்கு சொந்தமான டீ.வி.யை உங்க வீட்டில் வச்சிருக்கீங்களே! ஏன்?"

"தலைவலி என் குடும்பத்தோட போகட்டும்... பொதுமக்களுக்கு எதுக்குன்னு ஒரு பெருந்தன்மைநோக்கில் தான்!"

— உ. ராஜாஜி

"வேண்டாம்..."

"ஏன்?"

"வேண்டாம் விட்று. என் மனசே சரியில்லை..."

"போய்ப் பாக்காட்டி கத்துவாள் அவள்..."

"டேய் இந்த மாதிரி விஷயத்துல மனசுக்கு நிர்ப்பந்தமே கூடாதுடா... என்னை விட்று..."

"அப்ப நான் போறேன்..."

"கிளம்பும்மா..." – காரை நிறுத்திவிட்டு உள் நுழைந்த நரசிம்மன் பறக்க ஆரம்பிக்கிறார். முல்லைப் பூவைக் கட்டிக் கொண்டிருக்கும் கனகா ஒரு சின்னச் சிரிப்போடு கேட்கிறாள்.

"எங்கப்பா...?"

"எங்கையா... நம்ம வீட்டுக்குத்தான்."

"அதுக்கென்ன கிளம்பிட்டா போச்சு... ஆமா அத்தானை பாத்தியா? அத்தை வரலை?"

"அத்தான், அத்தை... மண்ணாங்கட்டி அதான் என் மூஞ்சில அந்தப் பய கரிய பூசிட்டானே? இன்னும் என்ன அத்தான்... கிளம்பு கிளம்பு..."

"ஓ... பானு விஷயம் உனக்கும் தெரிஞ்சிடுச்சா...?"

"எனக்குத் தெரிஞ்சது இருக்கட்டும். நீ எப்படி இதை ஜீரணிச்சே?"

"ஜீரணிக்க இதுல என்னப்பா இருக்கு?"

"என்னம்மா அப்படிக் கேட்டுட்டே... இந்த வினாடி என்னால சமாதானம் அடைய முடியலை தெரியுமா...? நொண்டின்னுதானே அந்தப் பய உன்னைத் திரும்பிப் பாக்கலை... இருக்கட்டும்... இருக்கட்டும்... இவன் என்னம்மா பெரிய... நான் உனக்கு அமெரிக்க மாப்பிள்ளையையே பாக்கறேன்."

"ஏம்ப்பா... அப்படி ஒரு மாப்பிள்ளையை நான் பாத்தா நீங்க ஒத்துக்க மாட்டீங்களா?"

கனகாவின் மடக்கலில் ஒரு சின்னத் திணறல் மண்டுகிறது நரசிம்மனிடம்.

"என்னம்மா சொல்றே?"

"முதல்ல உக்காருங்க சொல்றேன்..."

"நீ விஷயத்த சொல்லு..."

"அப்பா... மோகன் அத்தானை தப்பா நினைக்காதே. அவர் பேர்ல எள்ளளவு குற்றமும் கிடையாது. நீயும் நானும் இங்க வருவதற்கு முந்தியே அத்தானுக்கும் பானுவுக்கும் காதல் உண்டு. இது தெரியாம அப்ளிகேஷனோட வந்ததுதான் நாம பண்ணின தப்பு. அத்தான் மாதிரி கண்ணியமான மனுஷனைப் பார்க்க முடியாது. பானு மாதிரி பரிதாபத்துக்குரிய பொண்ணையும் பார்க்க முடியாது. இந்த உலகத்துல எவ்வளவோ விதமான காதலைப் பாக்கறோம். ஆனால் தகுதிகளை சம்பாதிச்சுட்டுதான் காதலையே வெளிப்படுத்தணும்னு நினைக்கற ஒரு கட்டுப்பாடான காதலை நான் அத்தான்கிட்டத்தான் பார்த்தேன். அது மட்டுமில்லை... இப்பல்லாம்

இளரத்தம்னாலே கனவு கற்பனைதான்... கோபம் ஆக்ரோஷம்தான்! ஆனா அத்தான் நேர் எதிர். இன்னிக்கெல்லாம் இந்தச் சமூகமே சிந்திக்கும்படியா அத்தான் காட்டியிருக்கற பொறுமை ஒரு இந்திய ஆச்சரியம்! அத்தானோட சமூகப் பிரக்ஞையும் ஒரு அர்த்தபுஷ்டியுள்ள முன் உதாரணம். உங்க பொண்ணுக்கு அவர் மாப்ளையா கிடைக்கலைங்கற கோபத்துல இத்தனை நியாயங்களை மறக்கறது எந்த விதத்துலப்பா சரி...?"

மகளின் கேள்வி முன் நரசிம்மன் அப்படியே ஒடுங்கிப் போய்த் தலைகுனிகிறார்.

"ஆமாம்... நீ யாரையோ மாப்பிள்ளையா பார்த்ததா..." – நரசிம்மன் நெடுநேரம் கழித்து இந்தக் கேள்விதான் கேட்பார் என்பது தெரிந்தவள் போல கனகா பூச்சரங்களோடு அவரை நிமிர்ந்து அழுத்தமாகப் பார்க்கிறாள்.

"என்னம்மா பதிலையே காணோம்..."

"சொல்றேன்பா... அதுக்கு முந்தி எனக்கு ஒரு உதவி செய்வீங்களா?"

"என்னடா?"

"ஒரு லட்ச ரூபா வரை கடனா தரணும்."

"எதுக்கு...?"

"அப்பதானே ஒரு சாதாரண நெசவாளி அமெரிக்க என்ஜீனியர் மாப்பிள்ளையா ஆக முடியும்?"

"புதிர் போடாத கனகா. விஷயத்துக்கு வா நேரா..." – கனகா பூச்சரத்தை கீழே வைத்துவிட்டு எழுந்து கொள்கிறாள். உள்ளே செல்கின்றவள் திரும்பும் போது அவள் கைவசம் ஒரு கவர் இருக்கிறது.

"அப்பா இந்தக் கவர்ல ஒரு நல்ல படிப்பாளியோட அப்ளிகேஷன்ஸ் இருக்கு. இந்த அப்ளிகேஷன் எல்லாம் அமெரிக்காவுல உள்ள எதாவது ஒரு யூனிவர்சிடிக்கு போகணும். அவருக்கு அங்க படிக்க வாய்ப்புக் கிடைக்கணும். அதுக்கு நீங்க எல்லா உதவியும் செய்யணும். வழியும் காட்டணும். தன் வரையில அது ஒரு சந்திர மண்டலம். தன்னால எல்லாம் அங்க போக முடியாதுங்கற ஒரு தாழ்வு மனப்பான்மை அவருக்கு இருந்தது. நான் அதை மாத்தினேன். உங்களால முடியும்னேன். இப்ப அவருக்கும் அந்த நம்பிக்கை வந்தாச்சு. நான் உதவி செய்யறேன்னும் சொன்னேன். அவர் கேக்கலை. என் காதலுக்காக இதை ஒத்துக்கக் கூடாதுன்னு வெளிப்படையாவே கேட்டேன். அது ஒரு நொண்டிப் பெண்ணுக்கு நான் வைக்கற விலையாயிடும். வேண்டவே வேண்டாம்னு சொல்லிட்டார் அவர். ஒரு கோணத்துல அது சரிதான். அதனாலதான் கடனா கேக்கறேன் உங்ககிட்டே... ஏன்னா அவர் ஒரு ஏழை நெசவாளி..."

"யாருப்பா அவர்?"

"முகுந்தன்" என்கிறாள் வெட்கக் களிப்போடு!

கிரீச்சிட்டு நின்ற பேருந்திலிருந்து இறங்குகிறாள் சுசீலா! மஞ்சள் சோளி, மஞ்சள் புடைவை, கையில் கறுப்புக் கயிறு இரண்டு பெரிய நூல் பை, வயர் கூடை என்கிற லட்சண சொரூபத்தோடு... நெற்றியில் அகலமான சைஸில் குங்குமப் பொட்டு. முகத்தில் எப்பொழுதும் இல்லாதபடி ஒரு வகை சாந்தம்.

"வா சுசீலா... ஆமா இப்படியா காணாம போவே?"

"நீ இங்க இல்லாத நாட்கள்ள இங்கே தெருவே மாறிப் போச்சேடி... தெரியலை உனக்கு?"

"மந்திரம் போட்டாக் கூட இப்படி ஒரு மாறுதல் வருமாங்கறது சந்தேகம் சுசீலா. அந்த மோகன்ராம் புண்ணியத்தக் கட்டிக்கிட்டான்."

எல்லோரும் பேசுவது அவள் வரையில் புதிராக இருக்கிறது. நேரே மோகன்ராம் வீட்டு வாசலில்தான் போய் நிற்கிறாள். உள்ளே தறி ஓடும் சப்தம். எட்டிப் பார்த்தால் தறிமேடையில் பானு!

"அக்காாா..." – பானுவின் அழைப்பொலி மகாலட்சுமியையும், கனகாவையும் கூட ஒருசேர சுசீலா பக்கம் திருப்புகிறது.

"வாடி... திருப்பதிக்கு பஸ்ல போனியா இல்ல பாதயாத்திரையா போனியா நீ?" மகாலட்சுமி அரிசி முறத்துடன் மிகச் சாவதானமாகக் கேட்பதும் கீரை நறுக்கிக் கொண்டு கனகா அமர்ந்த நிலையில் தன்னை பனித்து சென்று பார்ப்பதும்...

சுசீலா திக்குமுக்காடத் தொடங்குகிறாள்.

"பானு நீ எப்படி இவ்வளவு உரிமையோட இங்க...?" – இது முதல் கேள்வி. அடுத்து இரண்டாவது அதற்குமடுத்து மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது...



"சே! காலையில கடையைத் திறந்ததும் முதலாளி என்னை கன்னாபின்னான்னு திட்டிட்டார்!"

"எதுக்கு?"

"ராத்திரி அவரைக் கவனக்குறைவா கடைக்குள்ளே வச்சுப் பூட்டினதுக்குத்தான்!"

— மேல்மங்கலம் பத்ரா

வரிசையாகக் கேள்விகள் - விளக்கங்கள்.

முடிவில் புல்லரிக்கும் ஸ்தம்பிப்பு!

சுசிலா நடந்ததை எல்லாம் கேள்விப்பட்டு சிலையாகவே ஆகிவிட்டாள்.

சைக்கிளில் வந்திறங்கி அதை வாசலில் நிறுத்திவிட்டு வந்து குறுக்கிடுகிறான் முகுந்தன். கைகளில் பாரதி நற்பணி மன்றத்துவக்கத்தை அனைவருக்கும் தெரிவிக்கும் பிட் நோட்டீஸ் புருஃப்!

நோட்டீஸைக் காட்டியபடியே ஒரு நல்ல செய்தியைத் தூக்கிப் போடுகிறான்.

"விஷயம் தெரியுமா உங்களுக்கு? நம்ம பாரதி மன்றத்துக்கு பத்தாயிரம் ரூபா தர முன் வந்துருக்கார் கிருஷ்ணாராவ்!"

"ஏய் நெஜம்மாவா...?"

"சத்யமா தாயே... திருட்டு சரக்கை வாங்கின பாவத்துக்கு இப்படிப் பிராயச்சித்தம் பண்ணிக்கிறேன்னு ஒரே புலம்பல் வேற..."

"இன்னொரு ஷாக் நியூஸ்..."

"என்னப்பா... ஆர்டினரி நியூஸே இன்னிக்குக் கிடையாதா?"

"நம்ம பாம்பே மணியம் இனி சாராய வியாபாரம் செய்யறதில்லைன்னு சத்தியம் செய்துட்டு மன்றத்துல ஆயுட்காப்பாளரா சேரப் போறாரு. துணைத் தலைவர் யார் தெரியுமா...? இஸ்மாயில்!"

"எக்ஸலண்ட்!" கனகா வளையல்கரங்களால் ஒலியெழுப்பிப் பாராட்டுகிறாள்.

"சரி சரி. இன்னிக்கு மோகனை டிஸ்சார்ஜ் பண்ணப் போறாங்க. ஆரத்தியோட ரெடியா இருங்க. பகவந்தராவ் கார்ல கரெக்டா ஒரு மணிக்கெல்லாம் வந்துடுவோம்..."

முகுந்தன் சொல்லிக் கொண்டு கிளம்புகிறான்.

"தம்பி இருப்பா, நானும் வரேன்..." சுசிலா லட்டு பிரசாதமுடன் எழுந்திருக்கிறாள்.

பிரசாதத்தை சாப்பிட்டபடி கண்கலங்குகிறான் மோகன்ராம்.

"உன் பிரார்த்தனை வீண் போகலைக்கா.." என்கிறான்.

"உன் பிரதிஞையும்தான் வீண் போகலை. முக்கியமான சமயத்துல காட்டற பொறுமைக்கும் சகிப்புத்தன்மைக்கும்தான் எத்தனை மதிப்பு?"

"உம்... அவசரப்படக் கூடாது..." என்று கத்தரிக்கிறார் அருகிலேயே நின்று கொண்டிருக்கும் தேசிகாச்சாரி. அனைவர் பார்வையும் அவர் மேல் திரும்புகிறது.

"இந்த மாற்றம் ஒரு ஆரம்பம்தான். போகப் போக காலம் திரும்பவும் கண்ணாமூச்சி விளையாட ஆரம்பிக்கும். பரீட்சை வைக்கத் தொடங்கும். அப்ப இப்ப ஏற்பட்டுருக்கற உறுதியும் பிரக்ஞையும் மெல்ல மாறலாம். களைப்படையலாம். காலைல குளிச்சா மாலைல அழுக்காறதில்லையா? திரும்பக் குளிச்சாதானே அழுக்குப் போகுது...? அதுமாதிரிதான் சமூகச் செயல்பாடுகளும்... கண் கொத்தி பாம்பா கவனிச்சு உற்சாகம் குறையாம செயல்பட்டுக் கிட்டே இருக்கணும். இல்லேன்னா நேற்றைக்கு நான் நல்லவனா இருந்தேன் கதைதான்..."

சுசிலா அதை அசைபோட்டபடி திரும்புகிறாள். பகீரென்கிறது. எதிர்வரிசை படுக்கையில் கும்பிட்ட கரத்துடன் தாமு! ஒரு வினாடி உடம்பே உலுக்கப்பட்ட மாதிரி வியர்க்கிறது சுசிலாவுக்கு.

"என்னம்மா பாக்கறே... தாமு இப்ப மாறிட்டான். அவன் நம்பள்ள ஒருத்தன்" - தேசிகாச்சாரி விளக்கம் அவள் காதுகளில் தேய்ந்து விழுகிறது.

தாமுவிடம் பதற்றம் கூடுகிறது. படுக்கை நிலையில் இருந்து எழப் பார்க்கும் வேகம் தொற்றுகிறது.

"பக்கமாப் போ... உன் கூடப் பேச ஆசைப்படறான்..."

- சுசிலா தயங்கித் தயங்கி அவனருகே செல்கிறாள். சற்றும் எதிர்பாராதபடி படுக்கையிலிருந்து சரிந்து சுசீலாவின் கால்களைப் பற்றுகின்றன அவனது கரங்கள்.

"சுசி... சுசி... சுசி..." - தாமுவால் அழைக்கக்கூட முடியவில்லை.

சுசிலாவால் அந்தச் சூழ்நிலையில் பொங்கி அழாமலும் இருக்க முடியவில்லை. நெடுநேரம் அழுகிறாள்.

அவன், அவள் திரும்பமாட்டாளா என்று பார்த்தபடியே விசும்பிக் கொண்டிருக்கிறான். காலம் போட்டிருக்கும் விபரீதமான கால் கட்டை ஒரு பார்வையும் அவளை மறுபார்வையும் பார்த்து விசும்பலைக் கதறல் நிலைக்குக் கொண்டு செல்கிறான்.

அவள் மெல்லத் திரும்புகிறாள். அவனை நெருங்குகிறாள். தந்திக் கம்பி போல நடுங்கும் அவனது கரங்களைப் பற்றுகிறாள்.

அவனுள் புத்துணர்வு பெருக ஆரம்பிக்கிறது.

அதுவரை இருவரையும் பார்த்துக் கொண்டும் சுசிலா என்ன செய்யப் போகிறாள் என்ற எதிர்பார்ப்போடு இருந்த மோகன்ராம் உற்சாகமாக, "அக்கா இனி நீ தனிக்கட்டையில்லை..." என்று சொல்லிக் கொண்டே கண்கலங்குகிறான்.

வெளியே வானமும்!

(முற்றும்)

அகதி அதிபராகிறார்!

கம்யூனிஸ்டுகள் 1949-ல் சீனாவைக் கைப்பற்றியதும், பல லட்சம் குடும்பங்கள் சீனாவிலிருந்து அகதிகளாக ஹாங்காங்குக்கு ஓடின.

அவற்றிலே ஒன்று துங் சீ ஹூவாவின் குடும்பம். துங் அப்போது பதினோரு வயதுச் சிறுவன். கம்யூனிஸ்டுகளின் ஆட்சியில் தனி மனிதச் சுதந்திரத்தை இழந்துவிடுவோம் என்ற அச்சம் அந்தக் குடும்பத்தை ஹாங்காங்குக்கு விரட்டியது.

சொத்துக்கள் அனைத்தையும் கம்யூனிஸ்ட் சீனாவில் விட்டு வந்த அந்தக் குடும்பமும், இதர குடும்பங்களும் கடுமையான உழைப்பை மூலதனமாகக் கொண்டு வளர்ந்தன.

துங் சீ ஹூவா மிகுந்த சிரமங்களுக்கு இடையே, முதலில் ஹாங்காங்கிலும், பிறகு பிரிட்டனிலும் கல்வி பயின்றார். பிறகு அவர் அமெரிக்காவில் பத்து ஆண்டுகள் வாழ்ந்தார். சர்வதேச அளவில் நிர்வாகம், தொழில், வர்த்தகம் முதலிய துறைகளில் சிறந்த அறிவும், அனுபவமும் அவருக்குக் கிடைத்தன.

ஹாங்காங்கின் மிகப் பெரிய கப்பல் தொழில் அதிபராக துங் சீ ஹூவா இன்று திகழ்கிறார்.

ஜூன் 30ம் தேதி நள்ளிரவு பிரிட்டனின் ஆட்சிப் பொறுப்பிலிருந்து விடுபட்டு, சீன நாட்டுடன் இணைந்த ஹாங்காங்கின் புதிய அதிபரின் சுருக்கமான பின்னணி இது தான்.



• துங் சீ ஹூவா மனைவியுடன்

சீனா நியமித்த 400 உறுப்பினர்கள் கொண்ட ஒரு குழு, துங் சீ ஹூவாவை ஹாங்காங்கின் முதலாவது தலைமை நிர்வாகியாக நியமித்திருக்கிறது.

இதன் அர்த்தம் என்ன?

ஹாங்காங் மக்களால் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்படாதவர் இவர். இந்த நியமனத்திலேயே அந்த மக்களின் சுதந்திரம் பறிபோய்விட்டது என்ற செய்தி, ஹாங்காங், ஆட்சிப் பொறுப்பு கைமாறிய ஆர்ப்பாட்டங்களில் அமுங்கி விட்டிருக்கிறது.

"துங் சீ ஹூவா ஜனநாயக முறையில் ஆட்சி நடத்துவாரா என்பது சந்தேகமே" என்று, ஹாங்காங் 'ஜனநாயகக் கட்சி'யின் தலைவர் மார்டின் லீ கூறியிருக்கிறார்.

ஹாங்காங்கில் இதுவரையில் கம்யூனிஸ்ட் கட்சி சட்டப்படி கிடையாது. சீனக்கம்யூனிஸ்ட் கட்சி அங்கு விரைவில் அமையும் என்று துங் சீ ஹூவா கூறியிருப்பதால், பெரும்பாலான ஹாங்காங் சீனர்கள் பயந்து போயிருக்கிறார்கள்!

சீனாவிடம் ஹாங்காங் ஒப்படைக்கப்பட்ட பிறகு, குறைந்தபட்சம் ஐம்பது ஆண்டுகள் வரையில் "ஒரு நாடு, இரண்டு ஆட்சி முறைகள்" என்ற ஏற்பாட்டை சீனா பின்பற்றும் என்று பிரிட்டனுடன் செய்து கொண்டுள்ள உடன்பாட்டில் அது ஒப்புக் கொண்டிருக்கிறது.

ஹாங்காங்கில் ஜனநாயக ஆட்சி முறை நீடிக்கும் என்பதே இதற்குப் பொருள். இந்த உடன்பாடு அமலாகுமா?

சீனாவிலிருந்து அகதியாக ஓடிவந்து, இன்று நாட்டின் அதிபராகவே ஆகியுள்ள துங் சீ ஹூவா, ஹாங்காங்கில் ஜனநாயகம் தொடர்ந்து தழைக்கவும், கட்டுப்பாடுகள் இல்லாத வர்த்தகம் நடைபெறவும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதே ஹாங்காங் மக்களின் இன்றைய தலையாய பிரார்த்தனை!

— கே.சி. லட்சுமிநாராயணன்

பொற்காலம் பராக்! பராக்!

பத்தாவது நிதி கமிஷன் அளித்த சில சிபாரிசுகளை மத்திய அரசாங்கம் ஏற்றிருக்கிறது. இந்தச் செய்தி, பத்திரிகைகளில் பரபரப்பாக அடிபடாவிட்டாலும் முக்கியத்துவம் வாய்ந்தது.

மத்திய, மாநில அரசுகள் பல்வேறு வரிகளை வசூலித்து, அதைக் கொண்டுதான் நிர்வாகத்தை நடத்துகின்றன என்பது தெரிந்த விஷயம். இப்படி வசூலிக்கப்படும் வரிகளில் பெரும் பகுதியை மத்திய அரசு தனது செலவுக்கே எடுத்துக் கொண்டு விடுகிறது என்பது நீண்டகாலமாக இருந்து வரும் புகார். வருமான வரி, கம்பெனி வரி, தீர்வை, சுங்கத் தீர்வை போன்று அதிக நிதி ஈட்டுபவை மத்திய அரசின் கட்டுப்பாட்டில். மோட்டார் வாகன வரி, விற்பனை வரி, பதிவுத் தொகை (Registration Charges) போன்ற 'சில்லறை' வசூல்கள் மாநிலங்களுக்கு...

எல்லா மாநிலங்களிலும் பொருளாதார முன்னேற்றம் சீராக இருப்பதில்லை. பீஹார் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்க, மஹாராஷ்ட்ரா, குஜராத், பஞ்சாப் ஆகியவை 'பணக்கார' மாநிலங்கள் என்றே சொல்லலாம். பீஹாருடன் ஒப்பு நோக்க, கர்நாடகம், தமிழகம், கேரளம் ஆகியவைகூட நல்ல நிலையில்தான் இருக்கின்றன.

இப்படியொரு ஏற்றத்தாழ்வு நிலவும் என்பதை தீர்க்கதரிசனத்துடன் எதிர்பார்த்தார்கள் நமது அரசியல் சாசனத்தை வடிவமைத்த பெரியோர்கள். வரி வசூலில் பெரும்பகுதியை மைய அரசின் பொறுப்பில் ஒப்படைத்து, பின்தங்கிய மாநிலங்களுக்குக் கூடுதல் உதவி வழங்கப்பட சட்டத்தில் வழி செய்தார்கள். நிதி நிலைமையை ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஆராய்ந்து சீர் செய்ய நிதி கமிஷன் நிறுவப்பட வேண்டும் என்றும் விதித்தார்கள். அதன்படி '94 ஆம் ஆண்டு நிறுவப்பட்டதுதான் பத்தாவது நிதி கமிஷன்.

மத்திய அரசு, மாநிலங்களின் அபிவிருத்தி நிலைமையைப் பொறுத்து நிதியுதவி அளிக்கிறது என்று சொன்னேன். வசூல் செய்த வருமான வரியில் 77.5 சதவிகிதமும், தீர்வையில் 47.5 சதவிகிதமும் இவ்வாறு பிரித்தளிக்கப்படுகின்றன. (கம்பெனி வரி, சுங்கத் தீர்வை ஆகியவை பெற்றுத் தரும் வருமானத்தை மத்திய அரசே வைத்துக் கொள்கிறது!) இப்படி பிரித்தளிக்கப்படும் தொகை அந்தந்த மாநிலத்தில் வசூலாகும் வரியின் அடிப்படையில் அமைவதில்லை... மாறாக, அந்த மாநிலத்தின் வளர்ச்சி நிலையைப் பொறுத்தே அளிக்கப்படுகிறது. வளர்ச்சி நிலையை ஆராய்ந்து, தொகையை நிர்ணயிப்பது நிதி கமிஷன்தான்.

எல்லா மாநிலங்களுமே, மத்திய அரசு தங்களுக்குப் போதுமான அளவு நிதியுதவி செய்யவில்லை என்று புகார் செய்த வண்ணம் இருந்தன. வருமான வரி, எக்ஸைஸ் தீர்வை தவிர இதர வரிகளிலிருந்தும் தங்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டேயிருந்தன.

இந்தக் கோரிக்கைதான் இப்போது பத்தாவது நிதி கமிஷனால் ஏற்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் மொத்த வரி வசூலில் 29 சதவிகிதம் மாநிலங்களின் செலவுக்குத் தரப்பட வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.

இப்பரிந்துரையை மத்திய அரசும் ஏற்றிருக்கிறது. இதன் மூலம் மாநில அரசுகளுக்கு இவ்வாண்டு மூவாயிரம் கோடி ரூபாய் கூடுதலாக விநியோகிக்கப்படும். மாநிலங்களுக்கு மகிழ்ச்சிதான். ஆனால், 'இன்னும் வேண்டும்' என்று கேட்பதை அவர்கள் நிறுத்திவிடவில்லை! ஒரு மாநில முதல்வர், வரி வசூல் தொகையில் மாநில அரசுகளுக்கு ஐம்பது சதவிகிதம் தந்துவிட வேண்டும் என்றுகூடக் கேட்டிருக்கிறார்.

பாதிக்குப் பாதி மாநிலங்களுக்குத் தரப்படுமானால், மத்திய அரசு தனது செலவுகளுக்கு எங்கே போகும் என்பது குறித்து அவருக்கா கவலை?!

29 சதவிகிதம் என்பதே பெரிய முன்னேற்றம். இந்த வாக்குறுதியை இன்னும் பதினைந்து ஆண்டுகளுக்காவது காப்பாற்ற வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறது மத்திய அரசு. (நிதி கமிஷன் பரிந்துரை அப்படி...)

இந்தப் பதினைந்து ஆண்டுகளை மாநில அரசுகள் பொற்காலமாக நினைத்துப் போற்றுமானால், முன்னேற்றம் விரைவாகவும் சிறப்பாகவும் நடைபெறும். இனியும் மத்திய அரசைக் குறைகூறுவதற்கில்லை.

— வி. கோபாலன்

தஞ்சாவூர் பக்கம் போய் லட்சுமி ஆல்பர்ட் என்று சொன்னால் சின்னக் குழந்தையும் சொல்லும். சமூக சேவகியாக, அரசியல்வாதியாக இவரின் பெயர் மிகப் பிரசித்தம்.

ஜூன் மாதம் ஐந்தாம் தேதி அப்படித் தான் வழக்கம்போல அவர்பாட்டுக்குத் தன் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தார். ''உங்களை தலைவர் கட்சியின் பொதுச்செயலாளர்களில் ஒருவராக நியமித்திருக்கிறார்'' என்றார் டெலிபோனில் எஸ்.ஜி. வினாயக மூர்த்தி.

தலைவர் - மூப்பனார்.

''எனக்கு அச்செய்தியைக் கேட்டதும் 'ஜிவ்' என்று மகிழ்ச்சி ஏறியது. தலைவருக்கு என் மீதிருக்கும் நம்பிக்கையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமே என்ற பயமும் கூடவே பரவியது'' என்கிறார் லட்சுமி ஆல்பர்ட்.

பெயரைப் பார்த்ததும் எல்லோருக்கும் ஏற்படும் நியாயமான சந்தேகத்தைக் கேட்டதும்,

''காதல் கலப்புத் திருமணமெல்லாம் ஒன்றும் இல்லை. ஐந்து தலைமுறைக்கு முன்பே என் குடும்பத்தினர் கிறிஸ்துவர்களாக மாறி விட்டார்கள். என் தந்தை ஈ.எம். டேவி. 1930லிருந்தே விடுதலைப் போராட்ட வீரர். என் வீட்டில் எல்லோருக்கும் இப்படி தேச பக்தர்கள் தொடர்பான பெயர்களாகத்தான் இருக்கும். என் சகோதரிகள் பெயர் சரோஜினி, இந்திரா, சகோதரன் மோகன்தாஸ். (இவருக்கு கிறிஸ்டியானா என்று இன்னொரு பெயரும் உண்டு)

'நாங்கள் காதி குடும்பம்' என்கிறார் சிரித்துக் கொண்டே.

1950ல் தஞ்சாவூரில் சி. சுப்ரமணியம் தலைமையில் தம்மை காங்கிரஸ் இயக்கத்தோடு இணைத்துக் கொண்டவர் லட்சுமி.

வாய்த்த கணவரின் குடும்பமும் அரசியல் குடும்பமாக அமைந்தது இவரது அதிர்ஷ்டம்தான்.

மாமியார் அன்னபூர்ணம்மாள் '67லிருந்து 77 வரை தஞ்சாவூர் முனிசிபல் கவுன்சிலர்.

'96ல் த.மா.கா பிறந்தபோது அதன் துணைத் தலைவராக இவரை மூப்பனார் நியமித்தார்.



மகளிர் காங்கிரஸின் தலைவியும் இவரே. பிளவுபடாத காங்கிரஸில் இருந்தபோதே இந்தப் பதவியைப் பல ஆண்டுகள் வகித்து காங்கிரஸில் மகளிர் உறுப்பினர் எண்ணிக்கையை மிகக் கணிசமாக உயர்த்திய பெருமை லட்சுமி ஆல்பர்ட்டுக்கு உண்டு.

''எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. மேல்தட்டு மகளிர் முதல் அடித்தட்டு வரை த.மா.கா.வில் சேர இப்போது புயல் போல ஆர்வம் காட்டுகிறார்கள். இவர்களைச் சேர்ப்பது பெரிதல்ல. அவரவர்களின் சிந்தனை, வாழ்க்கை முறை, செயல்படும் விதம் இவற்றுக்கு ஏற்றமாதிரி அவர்களைக் கட்சிப் பணியில் சரியாக ஈடுபடுத்த வேண்டும். அதில்தான் என் கவனம்.''

''த.மா.கா. மகளிர் பிரிவுக்குத் தனியாக ஒரு ஆளைப் போடுகிறேன். இருந்தாலும் உங்கள் கண்ணும் அதன் மீது இருக்க வேண்டும்'' என்று இவரிடம் சொல்லி யிருக்கிறாராம் மூப்பனார்,

புதிய பொறுப்பை ஏற்றபின் தினமும் காலை பத்து மணிக்கு சத்தியமூர்த்தி பவனில் தம் அறையில் ஆஜராகி விடுகிறார், இந்தப் புதிய பொதுச்செயலாளர். ஜெயந்தி நடராஜன் இருந்த அதே பதவி. அதே அறை. மத்திய அமைச்சராக அவர் ஆன பின் அந்த இடத்துக்கு லட்சுமி நியமனமாகி இருக்கிறார்.

ஒரு மகன், இரண்டு மகள்கள். அனை வருக்கும் திருமணமாகி செட்டில் ஆகி விட் டார்கள். இவரது ஒரு மருமகள் தஞ்சாவூரில் கவுன்சிலராக இருக்கிறார். இவர் குடும்பம் மொத்தமும் த.மா.கா.

லட்சுமி ஆல்பர்ட் பற்றிப் பலருக்குத் தெரியாத ஒரு 'ருசி'யான தகவல். இவர் ஒரு அற்புதமான சமையல் கலை நிபுணி.

புதுப்புது வகைகளை உருவாக்கி சமைப் பதும், அவற்றை தம் மகன்களுக்குக் கற்றுத் தருவதும் பொழுதுபோக்கு.

''முக்கியமாக அசைவம் - அதிலும் சிக்களில் புகுந்து விளையாடுவேன்.''

ஒருமுறை தஞ்சையில் சுற்றுலாக் கழக ஹோட்டலில் தங்கியிருந்தார் மூப்பனார். காலை உணவு தயார் செய்யும் சமையற் காரர் அன்று பார்த்து வரவில்லை.

அந்த சமையல் ரூமில் லட்சுமி ஆல் பர்ட்டே புகுந்து தலைவருக்கு டிபன் செய்தார்.

கேள்விப்பட்டதும், 'நீ சமைச்சு யார் சாப்பிடறது?' என்று இவரது கைவண்ணம் பற்றி முதலில் தெரியாத மூப்பனார் சொல்லிவிட்டு, சாப்பிட்டு முடித்ததும் வெகுவாகப் பாராட்டியதை நினைவில் வைத்திருக்கிறார்.

''நான் புள்ளி விவரம் மற்றும் விஷயம் தெரிந்தவள். ஆனால் மேடைப் பேச்சாளர் அல்ல'' என்று வெளிப்படையாக ஒப்புக் கொள்கிறார்.

லட்சுமி ஓயாத படிப்பாளி. கடைசி யாகப் படித்த புத்தகம் 'விமன் பவர் இன் இண்டியா'

சந்திப்பு: **ராணிமைந்தன்**
புகைப்படம்: **ஸ்ரீஹரி**

நினைத்ததை வெல்ல - நீடிய ஆயுள் பெற
"ஜீவசுத்தி யோகம்" தபால் வழி போதனா முறை

நினைத்ததை சாதிக்கவும் - நீடிய ஆயுட்காலம் வாழவும், நோய் நொடியே வராது தடுக்கவும், வந்த வியாதி எதுவாக இருப்பினும் எடுத்தெறிந்து ஆரோக்கிய மேன்மை பெறவும் - அன்றைய கால அருந்தவ முனிவர்கள் தேவரகஸியமாயிருந்து வந்த ''ஜீவசுத்தி'' என்ற பயிற்சியை மேற் கொண்டனர். அன்றைய நாளிலேயே தேவரகஸியம் என மூடிவைத்த கலையிதை - இன்றைய நாளில் வெகுவாய் எவரும் கற்றவர் இல்லை எனலாம். நிச்சயமாக நிறைவான ஆயுளைத் தரும் அற்புத பயிற்சி இது. அதுமட்டுமல்ல - எவரும் - எவ்வயது இனத்தாரும் செய்ய எளிதான பயிற்சியிது. சிறுவர் செய்யின் காலமுழுவதும் நோயே வராது - கலையில், கல்வியில் வல்லவராவார் - காசினி காக்கும் தலைவராவார் - சற்புத்திரராய் பெற் றோரைக் காத்து பெருமை சேர்ப்பார். பெண் பயிற்சி செய்தால் - பெருமைக்குரிய கணவனை சேர்வாள் - வேதனையின்றி பிரசவமாகும் - சற்புத்திரரை பெற்றெடுப்பாள் - காலமெல்லாம் கணவனை பிரியாது வாழ்வாள் - ஒரு ஆடவர் செய்வாராகில் - அரசனென வாழ்வார் - எவ்வித வியாதியுமே வராது - பணபலம் பெறுவார் - தொழில் வழியில் அபரிதலாபம் அடைவார் எண்ணிய காரியம் எதுவாயினும் வெற்றி அடைந்தே தீருவார்.

மிக எளிதான பயிற்சி முறை - ஏற்றதான நலங்கள் - இதுவெறும் வார்த்தைக்கு சொல்லவில்லை. தேவரகஸியம் எனப்படும் இதனை கைக்கொண்டால் - நோயற்ற நிலை நீடிய ஆயுள் - நிறைவான செல்வ சுகம் - நிலையான கௌரவம் நிச்சயம் கிடைக்கும். இதனை செய்துதான் அன்றைய தபசிகள் - அரசனும் வணங்கிடும் அரியநிலை - ஆண்டாண்டு காலமாக வாழும் ஆயுள் பலம். ஆபத்தே தீண்டாத - அற்புத ஜீவிதம் பெற்றனர். அரிய வாய்ப்பு இனி இது போன்று இந்த ரகஸியத்தை சொல்வார் உதிக்கமாட்டார். இம்முறையை தெரிந்தவர்களும் இருக்கமாட்டார். ''ஜீவசுத்தி'' பற்றி ஆழமாக விவரிக்கப்பட்டிருக்கின்றது. எவரும் செய்கின்ற எளிய முறை சொல்லப்பட்டிருக்கின்றது. கற்றிடுங்கள் - அதிசய நலத்தை உறுதியாக பெறு வீர்கள் - விரும்புவோர் - விவரம் முழுமையாக அரிய தெளிவான விலாசம் எழுதி 6.8.1997 தேதிக்குள் மனு செய்து கொள்ளுங்கள். விவரபடிவம் அனுப்புகின்றோம். செய்ய துவங்கிய 90 நாட்களிலேயே ஒரு அதிசய நிலையை காண்பீர்கள்.



பிரபல ஜோதிடர்: ஜோதிட ஆசிரியர்

ஸ்ரீமத் ஜெயவீரதேவா யோகி

ராஜயோக பயிற்சியாளர்


பிளாட் எண் : 204, அண்ணாநகர்,

மதுரை - 625 020.

தொலைபேசி : 533412, 534634

பஜ்ஜி எப்படிப் போட வேண்டும்? 'சாவி' சொல்கிறார்!

• சாவி



வேணுகோபால்

சாவி பத்திரிகை மறுபடி வெளிவரப் போகிறது. "இம்முறை எனக்கு ஆசிரியர் பொறுப்பு மட்டும்தான்; நிர்வாகப் பொறுப்பை வேறு சிலர் ஏற்றுக் கொள்கிறார்கள்; அதனால் நிம்மதியாக இருக்கிறேன்" என்றார் 'சாவி'.

"அதென்ன, நிர்வாகப் பொறுப்பு அவ்வளவு கஷ்டமானதா?"

விளக்கினார்: "வீட்டிலே பஜ்ஜி போடுவதைப் பார்த்திருக்கிறீர்களா? பஜ்ஜி போட்டு முடியும் போது அரைத்த மாவும் ஒரு சொட்டு மிஞ்சக் கூடாது; நறுக்கப்பட்ட காயும் ஒரு துண்டு கூட மீதமாகக் கூடாது! அப்படி கன கச்சிதமாக நடக்க வேண்டியது நிர்வாகம்!"

ஒரு தமிழனுக்கு பிரிட்டிஷ் அரசி பட்டம் அளித்து கௌரவித்திருக்கிறார். "பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் அங்கத்தினர்" (MBE) பட்டம் பெறுபவர், பிரிட்டிஷ் தூதரகத்தில் முப்பது ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியுள்ள ஆர். வேணுகோபால். இவரைப் பத்திரிகை ஆசிரியர்களுக்கு ரொம்ப நன்றாகத் தெரியும். காரணம், இப்போது வர்த்தகப் பிரிவில் பணியாற்றினாலும் முன்பு தகவல் - செய்தித் துறையில் இருந்தார். பிரிட்டன், பிரிட்டிஷ் மக்கள் அல்லது பிரிட்டிஷ் பிரமுகர்களைப் பற்றிய கட்டுரைகளை இங்குள்ள பத்திரிகைகள் பிரசுரிக்குமாறு செய்வது சுலப சாத்தியமல்ல. வேணுகோபால், இங்கு பிரசுரமாகும் ஒவ்வொரு பத்திரிகையின் தனித் தன்மையை ஆராய்ந்து, அது அதற்கேற்ற ரசமான கட்டுரைகளைப் பிரத்யேகமாகத் தேர்ந்தெடுத்து அனுப்பி ஆசிரியரின் வெறுப்பைத் தவிர்த்து வாழ்த்துக்களைப் பெறுவார்! அது இன்று பிரிட்டிஷ் அரசி தரும் பட்டத்தை விட உசத்தி!



சங்கீத கலாநிதி பி. ராஜம் அய்யருக்கு 75 வது வயது பூர்த்திக்கு ஒரு பாராட்டு; மகாராஜபுரம் சந்தானம் ஃபவுண்டேஷன் அளித்த பதக்கம், பாராட்டு எல்லாம் நடந்தேறின.

"கச்சேரி பண்ணி விடலாம்; ஆனால் பாட்டு சொல்லிக் கொடுப்பதென்பது ரொம்ப சிரமம். அவரவருக்குத்



தக்கபடி பொறுமையாகக் கற்றுத் தர வேண்டும். அதில் ராஜம் அய்யருக்கு இணையே கிடையாது'' என்றார் சி.வி. நரசிம்மன். (ஐ.நா. சபை முன்னாள் துணைக் காரியதரிசி) ''மியூசிக் அகாடமியின் இசைப் பள்ளியில் முதல்வர்களாக இருந்தவர்கள், டைகர் வரதாச் சாரியார், முத்தையா பாகவதர், வாலாடி கிருஷ்ணய்யர், முடிகொண்டான் வேங்கடராமய்யர், சந்தியாவந்தனம் சீனிவாச ராவ், டி.எம். தியாகராஜன்....'' என்று பட்டியல் போட்டுவிட்டு, ''இன்று அவர்களிடத்தை இட்டு நிரப்புகிறவர், பி. ராஜம் அய்யர்'' என்று நரசிம்மன் சுட்டிக்காட்டிய போது 'அடேயப்பா!' என்று வியக்காமலிருக்க முடியுமா என்ன!



நாகநந்தி

✣ ✣

அமரர் கல்கியின் 'நாக நந்தி' பாத்திரப்படைப்பில் மனசைப் பறி கொடுத்த காரணத்தால் தமக்கு 'நாகநந்தி' என்று புனை பெயர் சூடிக் கொண்டார் பேராசிரியர் வேணுகோபால். 'நாகம் என்றாலே அறிவு என்று ஒரு பொருள் உண்டு; நந்தி என்றாலும் அறிவுதான்' என்று விளக்கம் சொன்னார் அவ்வை நடராஜன். 'நாகநந்தி', பாரதி பக்தர்; சிறுகதைகள் எழுதியவர்; நாடகங்கள் அரங்கேற்றியவர்; பண்டைய, நவீன இலக்கிய ஆய்வுகளை நடத்தியவர்; மிகச் சிறந்த மேடைப் பேச்சாளர். அண்மையில் ஆஸ்திரேலியாவில் காலமான இவரைப் பற்றி ஒரு செய்தி கூறினார் வ.வே.சு. தமது வீட்டு நூலகத்துக்காக ஒரு புத்தகம் வாங்கினாலும் நாகநந்தி முதல் காரியமாக அதன் பைண்டிங்கைப் பிரித்து விடுவாராம்! பிறகு ஒவ்வொரு தாளுக்கும் அடுத்த தாளுக்கும் இடையே ஒரு வெள்ளைத் தாள் வைத்து மறுபடி பைண்டு செய்வாராம்! அப்புறம்தான் நூலைப் படிப்பார். படிக்கும்போது தமக்குத் தோன்றுகிற எண்ணங்களை வெள்ளைத் தாள்களில் குறித்துக் கொண்டே போவார்!

— தேனீ

மார்ஜின் மொழி

அறிவிலியை இனிமையாகப் பேசியும், போக்கிரியை லஞ்சம் கொடுத்தும் வெல்லலாம்; ஆனால் நாணய முள்ளவனிடம் இவை செல்லா. — கோல்டன்

கல்வி பெறத் துடிக்கிறார்கள்; கருணை கொண்டு உதவுங்கள்!

• இறுதிப் பரீட்சையில் மிகச் சிறப்பான மதிப்பெண்கள் பெற்று பட்டதாரியாகியிருக்கிறேன். ஜெராக்ஸ் இணைத்திருக்கிறேன். என் படிப்புக்கு உதவிய கல்கி கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளையை மறக்க முடியுமா? நன்றி! நன்றி!!

– இப்படி வருகிற கடிதங்கள், இந்த அறக்கட்டளைக்கு சிறிதும் பெரிதுமாக நன்கொடைகள் அனுப்பிய அனைவருக்கும் உரியன.

அதே சமயம்...

•• என் தாய் சென்ற ஆண்டு இறந்து விட்டாள். என் தந்தை உடல்நலக் குறைவால் கூலி வேலைக்குச் செல்ல முடியவில்லை. வயதான என் தாத்தாதான் சுமைதூக்கும் வேலை செய்து எங்களைக் காப்பாற்றி வருகிறார். இந்தச் சூழலில் மிகவும் கஷ்டப்பட்டு படித்து வருகிறேன். தங்கள் அறக்கட்டளையின் உதவியைக் கோருகிறேன்.

சீரங்கம்பட்டி, குணசேகர பாண்டியன்.

•• என் பெற்றோர் தினசரி இட்டிலி, பஜ்ஜி போன்ற பொருள்கள் தயாரித்து தெருத் தெருவாக விற்பனை செய்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு குடும்பம் நடத்தி வருகிறார்கள். என் மேல்நிலைக் கல்விப் படிப்பை முடிப்பதற்கு உதவுமாறு வேண்டுகிறேன்.

வத்ராயிருப்பு, எஸ். ருக்மிணி.



• குணசேகர பாண்டியன்



• எஸ். ருக்மிணி

இவ்வாறு ஆயிரக்கணக்கான மாணவ மாணவியர் உருக்கமாக, ஆண்டுதோறும் கல்விக்கான உதவித் தொகை கோரி விண்ணப்பிக்கிறார்கள். இவர்களுக்கு உதவுகிற பணி, ரூ. 10,000ல் ஆரம்பித்து,

கல்வியில் சிறந்த ஆனால் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு நடப்பு ஆண்டுக்கு ரூ. 80,000 விநியோகமாகிறது. (சென்ற வாரக் கல்கி காண்க) அமரர் கல்கி அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடப்படும்போது (1999) இத்தொகை ரூ. ஒரு லட்சமாக உயரும்.

வாழ்க்கையில் போராடி வெற்றி பெறத் துடிக்கும் மாணவ மாணவியருக்கு உதவும் ஆர்வம் உள்ளவர்கள் தங்களால் இயன்ற அளவு நன்கொடையைக் கல்கி கிருஷ்ணமூர்த்தி நினைவு அறக்கட்டளைக்கு அனுப்பி வைக்கலாம்.

டிராஃப்ட் அல்லது எம்.ஓ. அல்லது காசோலை மூலம் KALKI KRISHNAMURTHY MEMORIAL TRUST என்ற பெயருக்கு மட்டுமே அனுப்புதல் வேண்டும்.

நன்கொடைகளுக்கு வருமான வரி விலக்கு உண்டு.

முகவரி :

கி. ராஜேந்திரன்
(பதிப்பாளர், கல்கி நிறுவனப் பத்திரிகைகள்)
நிர்வாக அறங்காவலர்,
கல்கி கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளை,
நெ. 1, ஐந்தாவது தெரு,
ஏரி வட்டம், நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034.

உலகெங்கும் சக்தி நெறி ஓங்க வேண்டும் — எல்லோரும் நல்வாழ்வு பெற வேண்டும்

பழனியில் சொன்னது பலிக்கிறது



பழனியில் அருள்வாக்கு சித்தர் மகான் சுப்பிரமணிய சாமி (பிரம்மச்சாரி) அவர்கள் சொன்னது தெய்வ வாக்காக பலிக்கிறது. இன்றே தபால் மூலம் தொடர்பு கொண்டு உங்களின் வாழ்வில் வெற்றி அடைவீர்.

பார் புகழும் பழனியிலேயே அன்னை ஜெகன் மாதா மகா சக்தியின் அருளாலும், எம்பெருமான் முருகப் பெருமானின் ஆசியாலும், உங்கள் பெயரையும் உங்கள் பிரச்சனைகளையும் அன்னையின் அருள் சன்னதியில் வைத்து உங்கள் குடும்பத்திலும் வாழ்க்கையிலும் தொழில் ஸ்தானத்திலும் படிப்பு, பட்டம், பதவியில் சிக்கல், நீண்டகால திருமணதடை உள்ள ஆண்களும் பெண்களும், திருமணம் ஆகி பல ஆண்டுகள் ஆகியும் குழந்தை பேறு இல்லாதவர்களும், செய்யும் தொழிலில் மந்தம், வியாபார தடை மற்றும் எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் தீரவும், நீங்கள் நினைத்த காரியங்கள் வெற்றியடையவும், எதிர்காலப் பலன்களை தெரிந்து கொள்ளவும், தற்சமயம் தங்களின் வாழ்க்கையில் நடந்தது நடக்கப் போகும் காரியங்கள் மற்றும் சகல பிரச்சனைகளுக்கும் சுவாமிகளின் அருளும் ஆசியும் பெற்று சகல நன்மைகளையும் அடையுங்கள். நேரில் சந்திக்க முடியாத பக்தர்கள் தபால் மூலம் தொடர்பு கொள்ளவும். தங்களின் பெயர் வயது பிரச்சனைகள் என்ன என்பதை விவரமாக எழுதவும். அதற்கு அன்னையின் சன்னதியில் வெள்ளி, செவ்வாய் கிழமைகளின் பூஜையில் வைத்து அன்னையின் அருள்வாக்கும் பிரசாதமும் சுவாமிகளின கைப்பட விவரமாக எழுதி அனுப்பி வைக்கிறார். பதில் பெற விரும்புவோர் ரூ. 2/- ஸ்டாம்பு கவருக்குள் வைத்து அனுப்பவும். (காணிக்கை தங்களின் விருப்பம் போல் அனுப்பவும்)

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
அருள்வாக்கு சித்தர்
சுடரொளி ஆர். சுப்பிரமணிய சுவாமிகள்
2-H அண்ணாநகர்,
டி.எஸ். மருத்துவமனை எதிரில்,
சண்முகபுரம், பழனி - 624 602.
மன்னர் திருமலை மாவட்டம். தமிழ்நாடு.
தென் இந்தியா.

குறிப்பு : நேரில் வருவோர் தினசரி காலை 10 மணி முதல் மாலை 1 மணி வரை நேரில் சந்திக்கவும்.

18 சித்தர்களால் உருவாக்கப்பட்ட சகல சக்திவாய்ந்த அபூர்வ மூலிகைகள் கொண்டு பாதரசத்தை, ரசமணியாக தயார் செய்து தரப்படும். இந்த ரசமணிகளை அணிவதன்மூலம் பில்லி, சூன்யம், செய்வினைகள், துஷ்ட தேவதைகளின் கண்பார்வை படாது. நோய் வராது. ரசலிங்கம், ரச விநாயகர், ரச அம்பாள், ரச முருகன் சிலைகள் செய்து தரப்படும்.

'வாழ்க்கைத் துணை தேர்ந்தெடுக்க'



அனைத்து ஜாதியிலும் சிறந்த தம்பதிகளை உருவாக்கித்தருகிறோம். ஆண்/பெண் வரன் தேடுவோர் நாடுங்கள்

ராஜா ராணி திருமண அமைப்பு மையம்

28, நூர்வீராசாமி சந்து,
நுங்கம்பாக்கம் - (காவல் நிலையம் பின்புறம்)
சென்னை - 34.
போன் : 8220904

மணமக்கள் தேவை கம்ப்யூட்டர் ஜாதகம்

அனைத்து சமூகத்திலும், ஆயிரக் கணக்கான வரன்கள் பெற உடன் பதிவு செய்ய தொடர்பு கொள்ளவும்.

கம்ப்யூட்டர் ஜாதகங்கள் நொடிப் பொழுதில்

ஆங்கிலம், தமிழ்	:	ரூ.	50/-
எதிர்கால கணிப்புடன்	:	ரூ.	150/-
கல்யாண பொருத்தம்	:	ரூ.	50/-

CONSULT DIVINE ASTROLOGER THETIYUR V. MAHADEVAN WITH PRIOR APPOINTMENT.

ASTROLOGY SOFTWARE FOR SALE.

ஸ்வயம்வராலயா

(GOVT REGD)

18, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம்,

சென்னை - 33.	போன்	: 4846427
மைலாப்பூர்	போன்	: 4984278
பெங்களூர்	போன்	: 3340146

ALL POOJA ENTHRA/RAKSHA AVAILABLE RATES ON REQUEST

அஞ்சலாட்சிக்கு என்ன ஆச்சு?

ஆவணிபூர் என்ற கிராமத்தில் ஓர் ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்த அஞ்சலாட்சிக்கு சின்ன இடத்தில் பெரிய பிரச்னை. அதாவது இதயத்தில் கோளாறு.

இதயத்தின் வலது, இடது புறங்களைப் பிரிக்கும் மிக மெல்லிய தடுப்புச் சுவரில் ஓர் ஓட்டை. அதன் வழியே இடது புற ரத்தம் வலது புறத்துக்குப் பாய்ந்தபடி இருந்தது. நல்ல ரத்தமே சுத்திகரிக்கப்படாத ரத்தத்துடன் கலந்தது என்றாலும் இதயத்தின் அந்தப் பகுதிக்கு அநாவசியமாய் கூடுதல் அழுத்தம். தவிர மகாதமனி என்கிற இதயத்தின் மிக முக்கியமான ரத்தக் குழாயின் வால்வு ஒன்றும் பழுதுபட்டிருந்தது. இதனால், இதயத்திலிருந்து வெளியேறி மகாதமனியை அடைந்த ரத்தம், அங்கிருந்து உடலின் இதர பகுதிகளுக்குப் போவதற்குப் பதிலாக இதயத்துக்குள்ளேயே திரும்பி வந்து கொண்டிருந்தது!



விளைவு..? நுரையீரலில் சளிகட்டுவது, பசியின்மை, வளர்ச்சிக் குறைபாடு, இதயத்தைக் கிருமிகள் தாக்கி, பாதிப்பு ஏற்படுத்துவது... இறுதியில் இதயம் செயலிழப்பதில் கொண்டு போய் நிறுத்தும், இந்தக் குறைபாடு.

அஞ்சலாட்சி விஷயத்தில் இந்த ஓட்டையுடன் மகாதமனி வால்வு கோளாறும் சேர்ந்து கொள்ளவேதான் விஷயம் மிக சிக்கலாகப் போய் விட்டது.

சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் அட்மிட் ஆன அஞ்சலாட்சியை உயிர் பிழைக்கச் செய்தவர் டாக்டர் ராஜகுரு.

'இது சாதாரண இதய ஆபரேஷன் அல்ல; ஒரு மருத்துவ சாதனை! இந்தியாவிலேயே முதல்முறையாக நிகழ்த்தப்பட்டிருக்கிறது' என்று மருத்துவ உலகம் தலைமேல் வைத்துக் கொண்டாடுகிறது டாக்டர் ராஜகுருவை.

என்னதான் செய்தார் ராஜகுரு? அவரையே சந்தித்துக் கேட்டோம்.

"தடுப்புச்சுவர் ஓட்டையை அடைத்தல், மகா தமனி வால்வை சரி செய்தல் என்கிற இரண்டு முக்கியக் காரியங்கள் என் முன் இருந்தன. இதயத்தைத் திறந்து பார்க்காமல் இவை சாத்தியமில்லை என்பதுதான் இதுவரை இருந்து வந்த நடைமுறை.

"எனக்கு ஒரு யோசனை தோன்றியது. இதயத்தில் கை வைக்காமல் மகாதமனியிலேயே துளையிட்டு இந்தக் குறைபாட்டைச் சரி செய்ய முடியும் என்று நினைத்தேன்.

இந்த முறையில், இதயத் தடுப்புச் சுவரில் ஏற்பட்ட ஓட்டையின் கீழ் விளிம்பில் ஆறு தையல்களைப் போட்டேன். அதை அப்படியே மேற்புறமாகத் தூக்கி மகாதமனியையும் சற்று உயர்த்தி நிறுத்தினேன். இதனால் பாதிக்கப்பட்டிருந்த வால்வும் மீண்டும் சரியான வடிவை அடைந்து விட்டது.

"இந்தியாவில், இதயத்தைத் திறக்காமல்(open heart) இதயக் குறைபாட்டை, அறுவைச் சிகிச்சை மூலம் குணப்படுத்திய முதல் டாக்டர் என்கிற பெருமை எனக்குக் கிடைத்து விட்டது!" என்றார் மகிழ்ச்சியுடன்.


இங்கிலாந்தில் மிடில்செக்ஸ் என்ற பகுதியில் உள்ள ஒரு மருத்துவமனையில் இது போன்ற ஆபரேஷன்கள் முன்பே செய்திருக்கிறார்களாம்.

"இங்கு செய்யாததற்குக் காரணம், மகாதமனியின் மூலம் கிடைக்கும் பாதை மிகக் குறுகலானது என்பதும், இதனால் இதயத் துடிப்புகளை உண்டாக்கும் அதிர்வுகளில் பாதிப்பு உண்டாகலாம் என்று நம்பப்படுவதும்தான்!" என்கிறார் ராஜகுரு.



• டாக்டர் ராஜகுரு

— ஜி.எஸ்.எஸ்.



விடை பெறுகிறார் விமலா சர்மா

பார்க்க எளிமை; பார்வையில் தாய்மை எனத் தோற்றமளிக்கிற இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மாவின் மனைவி விமலா சர்மா, ஜனாதிபதி மாளிகையிலிருந்து தமது உருப்படிகளை மூட்டை கட்டுவதில் இப்போது தீவிரமாக இருக்கிறார். ஒரு காலத்தில் ஆக்டிவான அரசியல்வாதியாக இருந்தவர். மத்தியப்பிரதேசத்தின் உதய்புரா என்ற கிராமப்புறங்கள் மிகுந்த தொகுதியின் எம்.எல்.ஏ.வாக இருந்திருக்கிறார் என்றால் நம்புவது கஷ்டமாக இருக்கும்!

அது மட்டுமில்லை. 42-ல் வெள்ளையனே வெளியேறு போராட்டத்தில் அவரும் பங்கேற்றபோது, விமலா சர்மாவுக்கு வயது பதினைந்து. (பிறந்த தேதி மே பதிமூணு 1927)

ராஜஸ்தான் மாநிலத்தில் ஆள்வார் மாவட்டத்தில் ராஜ்கர் என்ற ஊரில் பிறந்தவர். கல்லூரிப் படிப்பு ஜெய்ப்பூர் மகாராஜா கல்லூரியில். எம்.ஏ. (எகனாமிக்ஸ்) படிப்பை முடித்த கையோடு சங்கர் தயாள் சர்மாவுடன் திருமணம். வாழ்க்கையின் புதிய அத்தியாயம் போபாலில் ஆரம்பமானது. அரசியல்வாதி கணவருக்குக் கூடமாட உதவ ஆரம்பித்து, அவருக்கும் அரசியலிலும், சமூக சேவையிலும் ஆர்வம் ஏற்பட்டது.

"வாழ்க்கையில் நான் சந்தித்த மாபெரும் சோகங்கள் இரண்டு. ஒன்று ராஜீவ் படுகொலை" என்று கூறும் விமலா சர்மா, ராஜீவ் மரணம் பற்றிக் கேள்விப்பட்டதும், துடிதுடித்துச் சொன்ன வார்த்தைகள்: "போச்சு! நமக்கு எல்லாமே போச்சு!"

இரண்டாவது சோகம், தீவிரவாதிகளால் சர்மா தம்பதிகளின் மூத்த மகள் கீதாஞ்சலியும் மாப்பிள்ளை லலித்மக்கானும் படுகொலைக்கு ஆளானது. பேத்தி அவந்திகா, இப்போது தாத்தா, பாட்டியுடன் வசிக்கிறாள்.

ஜனாதிபதி மாளிகைக்குக் குடிபெயர்ந்தபோது, "வாழ்க்கை எப்படி இருக்கிறது?" என்று கேட்ட நண்பரின் கேள்விக்கு "இரண்டு ரூம் ஃபிளாட்டானால் என்ன? ராஷ்டிரபதிபவன் ஆனால் என்ன? சந்தோஷம் என்பது மனதுக்குள்ளேதான் இருக்கிறது!" என்றாராம் விமலா.

இப்போது விடைபெறும் போதும் இதையேதான் சொல்கிறார்!

தொகுப்பு: **கௌதம்**

மார்ஜின் மொழி

○ தாழ்ந்த விஷயங்களுக்குச் சிந்தனையைப் பறிகொடுக்காம லிருப்பதன் மூலம் பணமில்லா மலேயே பணக்காரனாயிருப்பேன்.

– காலிங்வுட்.

● ஜே. ரஜினி ராம்கி, மயிலாடுதுறை.

? த.மா.கா. தலைவர் தமது பெயரில் உள்ள ஜாதி சொல்லை நீக்க வேண்டும் என்று ராமதாஸ் சொல்கிறாரே?

! 'மூப்பனார்' என்பது ஜாதிப் பெயரல்ல. 'தலைவர்' என்பதே அதன் அர்த்தம் என்று எஸ்.ஆர்.பி. விளக்கம் தந்திருக்கிறாரே. அதற்கு ராமதாஸ் பதிலடி தருகிறாரா, அடங்கிப் போகிறாரா பார்ப்போம்.

● தெரிசை ஐயப்பன், திருப்பூர்.

? பஞ்சாபைச் சேர்ந்த ஒரு பெண் தன் கருப்பையை வாடகைக்கு விட நீதிமன்ற அனுமதி கேட்டிருப்பது பற்றி...?



• தைரிய ரசர்!

! வாடகைக் கருப்பை, விந்து வங்கி இவையெல்லாம் இன்று வழக்கத்தில் வந்துவிட்டன. இதில் தகாத உடலுறவு கிடையாது; உணர்ச்சிக் கலவை கிடையாது. வெறும் விஞ்ஞானரீதியான செயல்பாடுதான் என்று விவாதிக்கப்படுகிறது. ஆனால், இந்த விஞ்ஞான விளையாட்டுகள் அடிக்கடி விபரீதங்களில் போய் முடிவதைப் பார்க்கிறோம். உம்: கருப்பையை 'வாடகை'க்குத் தந்த தாய், சிலகாலம் சென்று குழந்தைக்கு உரிமை கொண்டாடுவது.

• வாரம்பில்லை...



● இ. ராதாகிருஷ்ணன், பட்டுக்கோட்டை.

? 'வேஷ்டி கட்டியவர்கள்தான் பிரதமரை நிர்ணயிக்க வேண்டும் என்றவர்கள் இன்று கோஷ்டி சண்டைகளால் தங்கள் வேஷ்டியைக் கிழித்துக் கொள்கிறார்கள்...' என சு. சுவாமி கூறியிருக்கிறாரே...?

! 'ஜெ'யுடன் இவர் உறவுகளைத் தையல் போடுவதைக் காட்டிலும் கேவலமாக எதுவும் நடந்து விடவில்லை. லல்லுவின் ராஜினாமாவைக் கோருவதால் ஐ.மு. உடையும்; ஆட்சி கவிழும் எனில், அந்த விலையைக் கொடுத்தாவது ஓர் உன்னதமான கோட்பாட்டைக் காப்பாற்றுவது நல்லதுதானே.

● நி. மகாராசன், கடமலைக் குண்டு.

? பொற்காலம் என்றால் எப்படி இருக்கும்...?

! அது என்றைக்குமே, எந்த நாட்டிலுமே வெறும் கனவுதான் ஸார்! வாழ்க்கைத் தரம் உயர உயர, தேவைகளும் உயர்வதால் சராசரி மக்களுக்குப் பொற்காலத்தை அடைந்து திருப்திப்படுவதென்பது நடக்காத காரியமே.

● எஸ். சேகர், திருவாரூர்.

? சசிகலா – ஜெயலலிதா உறவு புதிராக இருக்கிறதே?

! இதிலென்ன புதிர்...? அது ஃபெவிகாலின் பலமான இணைப்பு ஆச்சே! குஜ்ராலும் தாடியும் போல அத்தனை அன்னியோன்னியமானது.





• 'தாடி' உறவு!

கருணாநிதி தைரியமற்றவர்

● நா. துரைமுருகன், செய்யாறு.

? கலைஞர் தன்னம்பிக்கையும் தைரியமும் அற்றவர் என்று 'ஜெ' கூறியிருக்கிறாரே?

! ஜெ 'தைரியம்' யாருக்குமே வராதுதான். அப்படிப்பட்ட 'தன்னம்பிக்கை'யோ 'தைரி

யமோ' கருணாநிதிக்கு வந்துவிடக் கூடாது என்பதுதானே நமது எதிர்பார்ப்பு!

● **நிலா காதலன், நாகூர்.**

? தூத்துக்குடியில் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் நல்லதுதானே?

! சூரிய வெப்பத்திலிருந்து மின்சாரமும் கடல் நீரிலிருந்து குடிநீரும் தயாரிப்பது ரொம்ப 'காஸ்ட்லி'யாக இருக்கும். எண்ணெய்வள அரபு தேசங்களுக்குப் பரவாயில்லை. அங்கே



• இனிஷியல் சிந்தனை!



• வராத தைரியம்!



• கில்லாடி!

பணத் தட்டுப்பாடே கிடையாது. இங்கே அப்படியில்லையே... எல்லாம் ணித் துணிக கருமம்.

● **டி.. கண்ணதாசன், வைரிசெட்டிப் பாளையம்.**

? ஐக்கிய முன்னணி அரசு நவம்பர் மாதத்தில் கலையுமென சுப்ரமண்ய சுவாமி கூறியுள்ளாரே?

! கூறட்டும் கூறட்டும்! அவர் குரலில் ஜோசியம் கேட்டு ரொம்ப நாளாகிறது. அடிக்கடி சொன்னாரானால், முன்னர் ஜெயலலிதா ஆட்சி போல் ஐ.மு. ஆட்சியும் முழு ஆயுட்காலம் நீடிக்கலாம்.

● **கே. ராஜேந்திரன், கோவிலூர் அஞ்சல்.**

? அ.தி.மு.க.வை ஜெயலலிதாவால் காப்பாற்ற முடியுமா?

! முடியும். அவர் அரசியல் துறவறம் மேற்கொள்வாரானால்...!

ன்கிறாரே ஜெ...?

● **அ. ஷண்முகசுந்தரம், சென்னை - 64.**

? சோ. பாலகிருஷ்ணன் சர்ச்சைகளில் சிக்கிக் கொள்வதற்கு அவருடைய இனிஷியல்தான் காரணம் என்கிறாரே சோ?

! இனிஷியல் என்பதற்குத் தொடக்கம், ஆரம்பம் என்று அர்த்தம். சிந்தனையின் தொடக்கமே கோணலாக இருந்தால் சர்ச்சைகள் தொடர்வதைத் தவிர்க்க முடியாது. சும்மாவா சொன்னார்கள்... 'முதல் கோணல், முற்றும் கோணல்' என்று!

● **எஸ். அனந்த பத்மாவதி, திருநெல்வேலி.**

? ஆண்கள் (நடிகர்கள்) வயது வரம்பில்லாமல் கதாநாயகர்களாக நடிக்கும்போது, பெண்களை (நடிகைகள்) மட்டும் சிறிது காலத்துக்குப் பின் மக்கள் ஏற்றுக் கொள்ள மறுப்பது ஏன்...?

! ஏன், மனோரமா ஆச்சியை இப்போதும் ரசித்துக் கொண்டுதானே இருக்கிறோம்!

● **சி. கண்மணி சிவாஜி, கீரக்களூர்.**

? சமூகத்தில் உள்ள சாதிகளை நீக்க சட்டம் செய்தால் என்ன...?

! சரியாப் போச்சு..! சாதிகள் ஒழிந்து விட்டால் அப்புறம் எதை வைத்து வோட்டு வாங்குவார்களாம்...?

● **கி. ஸ்ரீதர், வந்தவாசி.**

? 'உண்மையான அ.தி.மு.க. தொண்டன் என்றால் 'ஜெ' காலில் விழத் தயாராக இருக்க வேண்டும்' என்று சேடப்பட்டி யார் கூறுகிறாரே?

! கில்லாடி! நெடுஞ்செழியனை நினைவைத்துத்தான் இப்படிப் பேசியிருப்பார்.

● **கி. இரமேசு பாபு, சேலம் - 1.** ❑

? அந்நிய மொழிகளை எதிர்க்கும் டாக்டர் ராமதாஸ் தனது பெயரை ராமனடிமை அல்லது ராமதொண்டன் என மாற்றிக் கொள்வாரா...?

> ❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
> கி. இரமேசு பாபு,
> கற்பூரக் கடை,
> C/o காளியம்மன் கோயில், ஏ.எம். ரோடு,
> சேலம் - 636 001.

! ஆங்கிலத்தை எதிர்க்கும் அவர், முதலில் தம் பெயர் முன் உள்ள 'டாக்டர்' என்பதை தார்பூசி அழிக்கட்டும். அப்புறம் ராமனடிமை ஆகலாம்!

● **க. மாரியப்பன், கோயமுத்தூர் - 11.**

? இல்லறம் இனிக்க வேண்டுமானால் கணவன் மனைவி இருவரில் யார், யாரிடம் அடங்கிப் போக வேண்டும்...?

! யாரும் யாருக்கும் அடங்கிப் போகவே வேண்டாம். ஒரு தவறு நடந்துவிட்டால், அதை ஒப்புக்கொண்டு வருத்தம் தெரிவிக்கிற துணிவு இருந்துவிட்டால் போதும்.

வலம்புரி ஜான்

முன்பொரு காலத்தில் ஊசு என்கிற நாட்டில் யோபு என்பவர் வாழ்ந்து வந்தார். இவர் கடவுளுக்கு அஞ்சி நடந்த கருணையாளர். அபரிமிதமான செல்வத்தால் ஆண்டவர் இவரை ஆசீர்வதித்தார். இவருக்கு ஏழு மகன்கள்; மூன்று மகள்கள். ஏழாயிரம் ஆடுகள்; மூவாயிரம் ஒட்டகங்கள், ஐநூறு காளைகள், ஐநூறு பெண் கழுதைகள், ஏராளமான 'நிலபுலன்கள்' இருந்தன. பணியாளர்களோ பட்டாளப் படைவரிசைகளைப் போல அவருக்குச் சேவகம் செய்தார்கள். தமது மக்கள் ஒருவேளை தவறு செய்திருப்பார்களோ என்று அவராக நினைத்துக் கொண்டு யோபு கடவுளிடம் அவர்களை மன்னிக்குமாறு பிரார்த்திப்பார். ஆண்டவருக்கு அஞ்சி நடந்த யோபுவிற்கும் சோதனை வந்தது.



ஒருமுறை சொர்க்கத்தில் வானவர்கள் ஆண்டவரை வாழ்த்திக் கொண்டிருந்தார்கள். அப்போது சாத்தான் அங்கே வந்தான். சாத்தானைப் பார்த்த ஆண்டவர், "எங்கிருந்து வருகிறாய்!" என்று கேட்டார். அவனோ "உலகத்தையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்றான். அதற்கு ஆண்டவர், "அதெல்லாம் சரி; என்னையே நினைத்து ஆராதித்துக் கொண்டிருக்கிற நேர்மையாளன் யோபுவைப் பார்த்தாயா? அவனைப் போலப் புண்ணியமூர்த்தி உலகில் ஒருவனும் இல்லை" என்றார். "ஒன்றும் இல்லாமலா யோபு கடவுளுக்கு அஞ்சி நடக்கிறார்? நீர் அவனைச் சூழ்ந்து நின்று காப்பாற்றுகிறீர்; அவனது முயற்சிகளை ஆசீர்வதிக்கிறீர்; அவனது மந்தைகளைப் பெருகச் செய்கிறீர். அவன் மீதும், அவனுக்கு உரியவற்றின் மீது உமது கையை வையும். அப்போது அவன் உமது முகத்திற்கு நேராகவே உம்மைப் பழிப்பான்" என்றான்.


வெளிச்சத்தின் விலாசம் 13



அப்போது ஆண்டவர், "இதோ! அவனுக்கு உரியவை எல்லாம் உன் கையில். அவன் மீது மட்டும் நீ கை வைக்காதே" என்றார். சாத்தான் சந்தோஷத்தில் அக்கணமே அங்கிருந்து புறப்பட்டான்.

ஒருநாள் யோபு தனது வீட்டிலிருந்தார். அவரது மக்கள் உண்டு முடித்து திராட்சை ரசம் பருகிக் கொண்டிருந்தார்கள். அப்போது தூதன் ஒருவன் விரைவாக ஓடிவந்தான். வந்தவன் யோபுவைப் பார்த்து, "நமது நிலத்தில் எருதுகள் உழுது கொண்டிருந்தன; கழுதைகளும் அவற்றுக்கு அருகில் மேய்ந்து கொண்டிருந்

தன. அப்போது எதிரிகள் பாய்ந்து அவற்றைக் கைப்பற்றினர். ஊழியர்களின் உயிரையும் அவர்கள் பறித்தனர்; நான் ஒருவன் மட்டுமே தப்பி உம்மிடம் சொல்ல வந்தேன்" என்றான். இதை அவன் சொல்லி முடிப்பதற்குள் இன்னொருவர் வந்து, "நெருப்பு வானத்திலிருந்து விழுந்து ஆடுகளையும், வேலையாட்களை



அந்த நாட்டு அரசகுமாரன்

யும் சுட்டெரித்து விட்டது; நான் ஒருவன் மட்டுமே தப்பி உம்மிடம் சொல்ல வந்தேன்" என்றான். இதை அவன் சொல்லி முடிப்பதற்குள் வேறொருவன் வந்து "கல்தேயர் மூன்று கும்பல்களாக வந்து நமது ஒட்டகங்களின் மேல் பாய்ந்து அவற்றைக் கைப்பற்றிக் கொண்டனர்; எதிர்த்த ஊழியர்களைக் கொன்று குவித்தனர்; நான் ஒருவன் மட்டுமே தப்பி உம்மிடம் சொல்ல வந்தேன்" என்றான். இதைச் சொல்லி முடிப்பதற்குள் இன்னொரு தூதன் வந்து "வீட்டில் உமது மக்கள் உணவருந்திக் கொண்டிருந்தபோது சூறாவளிக் காற்று பாலை நிலத்திலிருந்து வீசி வீட்டின் நான்கு மூலைகளிலும் தாக்கியது. வீடு இடிந்து விழுந்ததில் உமது மக்கள் அனைவருமே மாண்டனர். நான் ஒருவன்தான் தப்பி உம்மிடம் சொல்ல வந்தேன்'' என்றான்.

யோபு எழுந்தார்; தமது ஆடைகளைக் கிழித்துக் கொண்டார். தமது தலையை மழித்தார். பின்பு தரையில் விழுந்து வணங்கினார். "ஆண்டவர் தந்தார்; ஆண்டவர் எடுத்துக் கொண்டார்; ஆண்டவரது திருநாமம் வாழ்த்தப்படக்கடவது" என்றார். யோபுவிற்குத் தான் கொடுத்த தாங்கமுடியாத சோதனைகளை ஆவியாயிருந்து பார்த்த சாத்தான் அகமகிழ்ச்சி கொண்டான். இரண்டு கொம்புகளும், இரு இறக்கைகளும் ஒரு வாலுமாக அதிசயப் பிராணியாகி அங்கும் இங்கும் துள்ளினான். ஆனால் இத்தனை சோதனைகளுக்குப் பிறகும் யோபு ஆண்டவரைப் பழித்து ஒரு வார்த்தையும் பேசாததால் மிகவே சோர்வடைந்தான்.

வேறொரு நாள் சொர்க்கத்தில் தேவதூதர்கள், "பரிசுத்தர்; பரிசுத்தர்" என்று இறைவனது திருமுன்னிலையில் நாமாவளி பாடிக் கொண்டிருந்தனர். அங்கே சாத்தான் கலக்கமடைந்து நின்றான். கண்கள் இரண்டும், குழிக்குள் இருந்து எட்டிப் பார்க்கும் குட்டி முயல்களைப் போல் காணப்பட்டன. ஆண்டவர் சாத்தானிடம், "எங்கிருந்து வருகிறாய்?''


மார்ஜின் மொரிகன்

○ தன் மனத்தைத் தனக்குள்ளேயே எவ்விதமும் அடக்க இயலாதவன், எவ்விதப் பெரிய காரியத்தையும் சாதிக்க முடியாது.

என்று கேட்டார். "உலகைச் சுற்றி உலாவி வருகிறேன்" என்றான். அப்போது ஆண்டவர், "எனது ஊழியன் யோபுவைப் பார்த்தாயா? அவனைப் போல நீதிமான் உலகத்திலேயே இல்லை" என்றார். மேலும் ஆண்டவர், "நீ காரணம் இன்றி அவனை அழித்துவிட என்னைத் தூண்டி விட்டாய்; நானும் அடுக்கடுக்கான சோதனைகள் அவனுக்கு வரும்போது விலக்கினேன் இல்லை; இருந்தும் அவன் தர்மநெறியில் தவறவில்லை" என்றார்.

ஆத்திரமடைந்த சாத்தான் தனது தலையைக் கொம்பேறி நிற்கும் குரங்கைப் போல அசைத்துச் சிலிர்த்தான். பிறகு ஆண்டவரை அரைக்கண்ணால் பார்த்து, "உமது கையை நீ பிடி. அவனது எலும்பின் மீதும், சதையின் மீதும் கைகளை வையும். பிறகு பாரும் - உம் முகத்திற்கு நேராகவே உம்மைப் பழிப்பான். இது உறுதி" என்றான். ஆண்டவர் சாத்தானை நோக்கி, "இதோ அவன் உன் கையில்; அவனது உயிரை மாத்திரம் விட்டு வை" என்றார். சாத்தான் கணப்பொழுதில் கறுப்பு மின்னலைப் போல பூமியில் பொங்கி விழுந்தான். அடுத்து, 'யோபுவைப் படாதபாடுபடுத்துவேன்; பரமனை அவன் பழிக்கும்படி உருமாற்றுவேன்' என்று நரக நெருப்பின் நாக்குகள் மீது நின்று சபதம் செய்தான்.

உடனே யோபுவிற்கு உடம்பில் ஒருவகை அரிப்பு உண்டானது. உள்ளங்கால் தொடங்கி உச்சம் தலைவரை புண்கள் உண்டாயின. இவற்றில் நாற்றமும், சீழும் உருவாயின. தொழு நோய் தொடர்ந்தது. யோபு வீட்டை விட்டு அகன்றார். குப்பை மேடு ஒன்றில் அமர்ந்து சாம்பலில் புரண்டு உடைந்த மண்பாத்திரத்தின் ஓடு ஒன்றை எடுத்துத் தனது புண்களில் சொறிந்து கொள்ளத் தொடங்கினார். அப்போது அவரது மனைவி, "நான் முழுவதும் ஆண்டவர், ஆண்டவர் என்று அவர் பெயரையே சொன்னீரே; அதற்கு அவர் செய்த கைம்மாறு பார்த்தீரா? உடலெல்லாம் உழுத நிலம் போல ஆகி, சீழ் வடிந்து சித்திரவதைப் படும்போதும் என்ன ஆண்டவன் வேண்டிக் கிடக்கிறது? அவரைப் பழித்துவிட்டு உயிரை நீர் மாய்த்துக் கொள்ளுவதுதான் உத்தமம்" என்றாள். அதற்கு அவர், "அறிவோடு பேசு; நன்மையைக் கடவுளிடமிருந்து பெற்ற நாம், தீமையைக் கொஞ்சம் பெற்றுக் கொண்டால் தவறாகிவிடுமா?" என்றார்.



"என்னங்க மாப்பிள்ளை வாசலில் இருந்தபடியே 'ஜம்ப்' பண்ணி உள்ளே வர்றார்?"

"வரதட்சணை பாக்கி கொடுக்கும் வரை வீட்டு வாசற்படியே மிதிக்க மாட்டாராம்!"

— ஆரூர். பால செல்வக்குமார்

பிறகு யோபுவின் நண்பர்களான எலிப்பாஸ், பில்தாது, சோப்பார் ஆகியோர் அவரைப் பார்க்க வந்தனர். யோபு உயிரோடிருக்கும்போதே அவரது நண்பர்கள் துக்கம் விசாரிக்கிற மாதிரியான சூழ்நிலை வந்தது. தொலைவிலிருந்து யோபுவை அவர்கள் பார்த்தபோது அவரது உருவம் சிதைந்திருந்ததால் அவர்களால் அவரை அடையாளம் தெரிந்து கொள்ள முடியவில்லை. வந்ததும் அவர்கள் வாய்விட்டு அழுதார்கள்; தங்கள் ஆடைகளைக் கிழித்தார்கள்; தங்கள் தலைகளில் புழுதியை வாரி இறைத்தார்கள். யோபுவோடு ஏழு பகல்களும், ஏழு இரவுகளும் அமர்ந்திருந்தார்கள். நகச்சுற்று வந்ததற்காகவே நண்பனைப் பிரிந்து விடுகிற உலகத்தில் யோபுவின் நண்பர்கள் அதிசயப் பிறவிகளாகவே இருந்தார்கள்.

இப்போது துக்கம் தாளாமல், உடல் வேதனையால் யோபு தமது பிறந்த நாளைச் சபிக்கத் தொடங்கினார். இதுதான் தக்க தருணம் என்று எலிப்பாஸ் ஈரத்தரையில் பந்தல்காலை அசைத்து அசைத்து இறக்குவதுபோல யோபுவிற்கு அறிவுரை சொல்ல ஆரம்பித்தார். "இதோ கடவுள் திருத்தும் மனிதர் பேறு பெற்றவர். ஆகவே வல்லவரின் கண்டிப்பை வெறுக்க வேண்டாம்; கட்டாயப்படுத்தினாலும் கட்டுப் போடுகிறவர் அவரே; அடித்தாலும், அணைக்கிற கரங்கள் ஆண்டவருடையதே" என்றார். அதற்கு யோபு, "நான் என் வாயை அடக்கமாட்டேன்; என் மனத்தின் வேதனையை எடுத்துரைப்பேன்; நான் என் குரல்வளை நெறிக்கப்படுவதையும், செத்து ஒழிவதையுமே விரும்புகிறேன்" என்று ஓலமிட்டார்.

அடுத்ததாக பில்தாது என்பவர் பேசத் தொடங்கினார். "எதுவரை இவ்வாறு பேசிக் கொண்டிருப்பீர்? உமது வாய்ச் சொற்கள்



"நீங்களோ வைர மூக்குத்தி போடணுங் கறீங்க...! எங்க பொண்ணோ மூக்கு குத்திக்க மாட்டேன்னு பிடிவாதம் பண்ணுது..."

"அதுக்காகக் கவலைப்பட வேணாம்! நாங்க மாப்பிள்ளைப் பையனை மூக்குக் குத்திக்கச் சொல்றோம்!"

- வலங்கைமான் நூர்தீன்

புயற்காற்றைப் போன்று இருக்கின்றன. இறைவன் நீதியைப் புரட்டுவாரா? எல்லாம் வல்லவரே நேர்மை பிறழ்வாரா?" என்றெல்லாம் பேசினார். அதற்கு யோபு, "மனிதர் இறைவன் முன்பு நேர்மையாய் இருப்பது எப்படி? ஒருவர் ஆண்டவரோடு வழக்காட விரும்பினால் ஆயிரத்தில் ஒரு கேள்விக்கேனும் அம்மனிதரால் பதில் அளிக்கக்கூடுமா?" என்றார்.

அடுத்து சோப்பார் என்ற நண்பர் பேசினார். "மிகுதியாகப் பேசுவதால் ஒருவர் நேர்மையாளராகி விடுவாரா?" என்று கேட்டார். அதற்கு யோபு, "நீங்கள்தாம் எல்லாம் தெரிந்தவர்கள்; உங்களோடு ஞானமும் ஒழிந்துவிடும்! உங்களைப் போலவே அறிவு எனக்கும் உண்டு; உங்களுக்கு நான் தாழ்ந்தவன் அல்ல. இன்பத்தில் திளைத்திருக்கும் நீங்கள் என்னை ஏளனம் செய்கிறீர்கள். ஆண்டவர் அமைச்சர்களை அறிவிழக்கச் செய்கிறார்; நீதிபதிகளை மடையர்களாக ஆக்குகிறார்" என்றார். உடனே எலிப்பாசு யோபுவைப் பார்த்து, "வெற்று அறிவினால் ஞானி விடையளிக்கக்கூடுமா? வறண்ட கீழைக்காற்றினால் அவன் வயிறு நிரம்புமா?" என்று கேட்டார். யோபுவோ, "உங்களின் வெற்று உரைக்கு முடிவே இல்லையா? நீங்கள் என்னதான் சொன்னபோதிலும் நீங்கள் சொல்லுவது சரியென்று ஒருபோதும் ஒப்புக் கொள்ள மாட்டேன்" என்றார்.

இவர்கள் இவ்வாறு தங்களுக்குள் தர்க்கித்துக் கொண்டிருப்பதைக் கேட்ட எலிகூ என்கிற இளைஞன் இவர்களின் வாக்குவாதங்கள், இல்லாத ஊருக்கு வழிகாட்டும் வறட்டு வேதாந்தங்கள் என்று உணர்ந்தான். அவன் பேசத் தொடங்கினான் – "இதோ இறைவன் வல்லவர். அவர் எவரையும் புறக்கணிக்க மாட்டார்; கொடியவரை அவர் வாழ விட மாட்டார்; ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு வழங்குவார்" என்றான். "எல்லாம் வல்லவரை நாம் கண்டுபிடிக்க இயலாது; ஆற்றலிலும், நீதியிலும் உயர்ந்தவர் ஆண்டவரே! எல்லாம் தெரியும் என்பவர்களைக் கடவுள் கண்ணெடுத்தும் பாரார்" என்று எலிகூ சொன்ன வார்த்தைகள் யோபுவின் மனநிலத்தில் விருட்சங்களை விதைத்தன.

இப்போது வானத்தின் வல்லமை அசைக்கப்பட்டது. நட்சத்திரப் பூக்களை நாலாபுறமும் சிதறி எறியத்தக்கதான மாபெரும் சூறைக் காற்று உருவானது. புயலின் மையத்தில் நின்று இறைவன் பேசினார். "இந்த உலகத்தை நான் உருவாக்கியபோது நீ எங்கே இருந்தாய்? கடலே இதுவே உனது எல்லை; இதற்கு மேல் வருவதற்கு உனக்கு உத்தரவில்லை என்று நான் எல்லை வகுத்தபோது நீ எங்கே இருந்தாய்? பாலைவனத்தில் மழை பொழியச் செய்தவர் யார்? பாழ்வெளியில் பசும்புற்களைப் பயிரிட்டது யார்? மழையின் தந்தை யார்? பனித் துளிகளுக்கும் பிரசவம் பார்த்தது யார்? குட்டிகள் வளர்ந்தபிறகு மான்கள் தமது குட்டிகளை ஏன் தேடி வராது என்று உனக்குத் தெரியுமா? யோபுவே! குற்றம்காண்பவன் என்னோடு வழக்காட வருவானா?" என்று கேட்டார்.

யோபு பணிந்து, "என் வாயைக் கையால் பொத்திக் கொள்ளுகிறேன். இனி நான் பேசவே மாட்டேன்" என்றார். மன்னிப்புக் கோரிய யோபுவின் சொற்களை ஆண்டவர் அப்போதே மன்னித்தருளினார். யோபு தமது கண்களை ஏறெடுத்து ஆண்டவரிடம் மன்றாடினார். "நீர் நினைத்த எதனையும் தடுக்க இயலாது" என்று புலம்பினார். எந்தச் சோதனையிலும் தன்னை இகழ்ந்துரைக் காத தனது அடியானை ஆண்டவர் ஆசீர்வதித்தார்.

ஆண்டவர் அகமகிழ்ந்தார். முன்பு அவருக்கு இருந்த செல்வத்தைப் போல இரண்டு மடங்கு அருளினார். அழிந்துபோன, அவரது மக்கள் தூக்கத்திலிருந்து விழித்தவர்களைப் போலக் கண்களைக் கசக்கிக் கொண்டு வந்தார்கள். அவரது ஆட்டுக்கிடைகளும், ஒட்டகத் தொகுதிகளும் மிகுதியாயின. அதன் பின்னர் யோபு நூற்று நாற்பது ஆண்டுகள் வாழ்ந்திருந்தார். பிறகு, "ஆண்டவர் தந்தார்; அவரே எடுத்துக் கொண்டார்; அவரது திருநாமம் வாழ்த்தப்படக்கடவது" என்று உதடுகள் உச்சரிக்க, மரணமடைந்தார்.

(தொடரும்)

'Chicken Soup for the Soul at Work' என்றொரு புத்தகம் சமீபத்தில் படிக்கக் கிடைத்தது. எக்கச்சக்கமான வெளிநாட்டுக்காரர்களின் வெற்றிக் கதைகள். செய்யும் தொழில் எதுவாயினும் அதன் சிகரம் தொட்டுப் பார்க்க ஆசைப் படுகிறவர்களுக்கு ரொம்ப உபயோகமாயிருக்கும் இந்த நூல் என்று தோன்றி யது. இந்தப் புத்தகம் கொடுத்த இன்ஸ்பிரேஷனில் நாமும் இப்படிச் சில கதைகள் தந்து, வாசகர்களுக்கு உற்சாக ஊசி ஏற்றலாம் என்று தோன்றிய தால், முதலில் இந்த

தொண்ணுத்தஞ்சு பைசா



குன்னூருக்குக் கொஞ்சம் முன்னால் வெல்லிங்டன் ஏரியாவுக்குப் போய் ரங்கநாத கவுண்டர் என்று கேட்டால் எல்லாருக்கும் தெரி யும். அந்தப் பகுதியில் ஆர்மி காம்பஸுக்கும் ரோஜாவில் அரவிந்தசாமியைக் கடத்திப்போன இடத்துக்கும் அடுத்தபடியாக ரொம்பப் பிரசித் தம், அவரது தேயிலை எஸ்டேட். உபரியாக முட் டைக்கோஸ், கேரட், உ. கிழங்கு என்று மலை மண்ணில் விளையக்கூடிய சகலமானதையும் ரிப்பன் சைஸ் வரப்பு கட்டிப் பயிரிட்டு, லாரி யில் ஏற்றி, கொத்தவால் சாவடிக்கு அனுப்பி, சுருக்குப் பைகளில் கருள் நோட்டுக்களாக நிறைய சேர்த்திருக்கிறார்.

பக்கிங்காம் பேலஸின் மினியேச்சர் மாதிரி ஒரு சின்னக் குன்றின் உச்சியில் அவரது வீட்டைப் பார்த்தாலே கவுண்டரின் வளமை புலப்படும். ரொம்ப நல்லவர்; சாத்வீகி.

கவுண்டரைப் பற்றி இது போதும். இந்தக் கதை அவரைப் பற்றியதல்ல. அவரிடம் தொண் ணுத்தஞ்சு பைசா பிச்சை வாங்கிய ஒரு பெண் ணைப் பற்றியது.

லேசான தூறலும் அசாத்தியக் குளிரும் கலந்த ஒரு சாம்பல் நிறக் காலைப் பொழுதில் கவுண்டர் பனிச்சென்று குளித்து முழுகி, விபூதித் தீற்றலும் வெளேர் கதர் உடையுமாகத் தன் வீட்டை விட்டு வெளியே வந்தார். பரதே சத்தில் படிக்கப் போயிருந்த அவரது மகன் அன்றுதான் ஊர் திரும்புகிறான். கோயமுத்தூர் விமான நிலையம் போய்க் கூட்டி வர வேண்டும்.

எஸ். ஐ. ஆர்

ஷெட்டிலிருந்து காரை எடுத்து வெளியே கொண்டு வந்து நிறுத்திவிட்டு, கேட்டை மூடப் போனவர் முன் அந்தப் பெண் குளிர் உதறலுடன் வந்து நின்றாள்.

"ஐயா....."

"யாரும்மா?"

"ஏதாவது தர்மம் பண்ணுங்க. பசிக்குது..."

அவருக்குத் தாங்காத வியப்பு. இப்படியெல் லாம் வீடு தேடிப் பிச்சைக்காரர்கள் வருவது இந்தப் பகுதியில் வழக்கமல்ல. அதுவும் இத்

மார்ஜின் மொழிகள்

தன்னை ஒதுக்கும் தியாகம் – இதுவே இறைவன் மனிதனுக்கு அருளியுள்ள தலை சிறந்த ஞானமாகும்.

— கார்லைல்

தனை காலையில். அதுவும் இத்தனை இளம் பெண். அதுவும் தனியாக!

கவுண்டர் அவளை உற்றுப் பார்த்தார். பதினேழு, பதினெட்டு வயசு இருக்குமா? கிழிந்த ஸ்வெட்டரும் கையில் ஒரு அலுமினிய டிபன் பாக்ஸூம் வார் அறுந்த செருப்புமாக தூசு படிந்த பொம்மை போல இருந்தாள். ஆனால் கண்களில், என்ன ஒரு கூர்மை! பளீர்!

"காசு தரேன்! ஆனா ஒண்ணு சொல்லணும்னு தோணுது. ஊட்டியிலே கிடைக்காத வேலை இல்லை. சம்பாதிக்க, முடியாத வழியில்லை. சின்னப் பொண்ணா இருக்கே: உழைக்க ஆசை இல்லை?"

உழைப்புக்கு அஞ்சாத
குணம், சந்தர்ப்பத்தை
சரியாகப் பயன்படுத்தத்
தெரிந்த சாமர்த்தியம்,
துணிச்சலான முடிவுகள்
எடுக்கத் தயங்காமை,
அப்புறம்... அடிப்படையில்
கொஞ்சம் நேர்மை -
வெற்றிக்கான
ஃபார்முலா - நம்பர் 1.

"இருக்குங்க" என்றாள் பட்டென்று.

"நீங்க வேலை தருவீங்களா?"

'தபார்ரா!' என்று நினைத்துக் கொண்டவர், எண்ணாமல் அப்படியே பிடி சில்லறையை அவள் கையில் திணித்துவிட்டுச் சொன்னார்: "முடிஞ்சால் வாசலைக் கொஞ்சம் பெருக்கிட்டுப் போ. தோட்டக்காரன் இன்னைக்கு லீவு!"

அவர் போனதும் அவள் அந்த சில்லறையை எண்ணிப் பார்த்தாள். தொண்ணுத்தஞ்சு பைசா!

பையனைக் கூட்டி வரப் போன கவுண்டர் அப்படியே



ஃபேக்டரி ஆபீஸுக்குப் போய்விட்டு, சோலிகளை முடித்துக் கொண்டு, அங்கேயே அவனை குளிக்க, சாப்பிடப் பண்ணி, எஸ்டேட்டையெல்லாம் சுற்றிக் காட்டி விட்டு, சமஸ்தானத்து இளவரசனைத் தமது ஊழியர்களுக்கு அறிமுகம் செய்து வைத்துக் களைத்து, மாலை மறுபடி குளிரும் நேரத்துக்கு வீடு வந்தார்.

முதல் பார்வையிலேயே ஆச்சர்யம். காலை உதிர்ந்து கிடந்த இலை, பூ தழைகளெல்லாம் காணோம். தோட்டத்துப் புற்கள் சலூனுக்குப் போய் வந்தது போல சம உயரமாய் வெட்டப்பட்டிருக்க, நடு நடுவே புதிதாக நடப்பட்ட ரோஜா செடிகள். நடை பாதையின் இரு பக்கமும் எடுக்கப்படாமல் கிடந்த அட்டைகள், சருகுகளெல்லாம் காணாமல் போய், அழகாக செம்மண்ணால் பார்டர் போடப்பட்டிருந்தது. உபரியாக நடு வாசலில் ஒரு சின்னக் கோலம்!

மறு நாள் காலை அவர் எஸ்டேட் ஆபீஸுக்கு மகனுடன் கிளம்பும்போது வாசலில் நேற்றுப் பார்த்த அதே பெண் மீண்டும் நிற்பதைக் கண்டார்.

"என்னம்மா? மறுபடி?"

"நல்லா இருக்கா?" என்றாள் அவர் வீட்டு முன் தோட்டத்தைச் சுட்டிக் காட்டி.

"நீயா செஞ்சே?"

"உம்."

"நான் செய்யச் சொல்லலையே?"

"அதனால பரவாயில்லை. இதுக்குக் கூலி எதுவும் தரவேணாம்."

இத்தனை போல்டாக ஒரு பிச்சைக்காரப் பெண் பேசி அவர் பார்த்ததில்லை. ஆகவே பெருவியப்புடன், "குட். உன் பேரென்ன?"

"ஸ்ரீதேவி" என்றாள் உடனே.

"ஸ்ரீ? தேவி... ஒகே. விருப்பமிருந்தால் இங்கேயே இரு. ஏதாவது வேலை பார்!" என்றவர், தன் மேனேஜரைக் கூப்பிட்டு ஏதோ சொல்லி விட்டுப் போய் விட்டார்.

கவுண்டருக்குத் தாம் ஒரு பெண்ணைப் புதுசாக வேலைக்குச் சேர்த்தோம் என்பதே ஞாபகம் இல்லாது போகுமளவுக்கு வேலை நெருக்கடி. சில்லறைப் பிரச்னைகள்.

சுமார் மூணு மாசங்கள் கழித்து ஒரு நாள் ஏதேச்சையாகக் கொஞ்சம் சமயம் கிடைத்து தோட்டத்தில் உலாவ வந்தவர் கண்ணில் அவள் பட்டாள்.

"நீ....?"

"சரிதான். ஞாபகமில்லையா? பிச்சை கேட்டு வந்தேன். வேலை குடுத்தீங்களே!"

"அட... ஆமாம்!" என்றவர், அவன் போனதும் மேனேஜரிடம், "பொண்ணு எப்படி?" என்றார்.

"ரொம்ப கெட்டிங்க. படு சுறுசுறுப்பு. ஒரு நிமிஷம் உட்காராது. தோட்டவேலை, வீட்டு வேலை, சமயத்துல சமையல் கூட செய்யும்..."

"அட!" என்ற கவுண்டர் ஸ்ரீதேவியைக் கூப்பிட்டார்.

"உன் வீடு எங்கே?"

"ரண்ணிமேட்டுல ரயில்வே லைன் பக்கம்."

"அம்மாடியோவ்! தினம் அங்கேருந்து வரே?"

"ஆமாங்க. காலைல நாலு மணிக்குக் கிளம்பிடுவேன். ஏதாவது லாரி கீரி கிடைக்கும். சமயத்துல நடந்தே வந்துடுவேன்."

"வீட்டுல யார் இருக்காங்க?"

"அம்மாவும் ரெண்டு தங்கச்சிங்களும்."

"அவங்க என்ன பண்றாங்க?"

"முன்ன பிச்சை எடுத்திட்டிருந்தாங்க. இப்ப இல்லை. நான் சம்பாதிக்கறேனில்லை?" எல்லாம் உங்களால்தான்!"

சட்டென்று அவள் ஒரு காரியம் செய்தாள். தடாலென்று அவர் காலில் ஒரு சாஷ்டாங்கம்!

"அடடே எழுந்திரும்மா!"

"நீ இனி வீட்டுல வேலை செய்ய வேணாம்..."

"ஐயா?"

"எஸ்டேட்டுக்கு வந்துடுங்கறேன். டீ இலை பறிக்கறியா?"

"சரிங்க. ஆனா வீடு ரண்ணிமேட்டுல...."

"வேணாம். இங்க வந்துடு. தங்கற இடம் நான் ஏற்பாடு பண்ணறேன்."

மேலும் கொஞ்ச நாள் போனது. கவுண்டர் அவளை அப்புறம் சந்திக்கவேயில்லை. சந்தர்ப்பம் வாய்க்கவில்லை; அதான்.

ஒரு சரஸ்வதி பூஜை சமயம். வித்தியாசமாக ஏதாவது செய்யலாமே என்று தம் ஊழியர்களுடன் தாமும் உட்கார்ந்து சாப்பிடும் சமபந்தி போஜனத்துக்கு ஏற்பாடு செய்யச் சொன்னார்.

அப்போது அவளைச் சந்திக்க நேர்ந்தது.

"ஸ்ரீதேவிதானே உன் பேர்? நல்லாருக்கியா?"

"ஆமாங்க! எல்லாம் உங்களாலதான்" என்றாள் அதே மாறாத பணிவுடன்.

சட்டென்று அந்தப் பக்கம் வந்த எஸ்டேட் மேனேஜர், "ரொம்ப சின்ஸியர் உழைப்பாளிங்க இந்தப் பொண்ணு. கேஷுவல் லீவ், ஸிக் லீவ், கல்யாணம் ஆகாததாலே மெட்டர்னிட்டி லீவ்

மார்ஜின் மொழி

உள்ளத்தூய்மை உள்ளவனே நன்னெறியை நாடுகிற உணர்ச்சிகளுக்கு உருக் கொடுக்க முடியும்.

— நியூமன்



''டாக்டரோட ஆலோசனையின் பேர்ல அந்தத் தயாரிப்பாளர் இனிமே பக்திப் படங்களா எடுக்கப் போறதா தீர்மானிச்சிருக்கார்!''

''அதுக்கெதுக்கு டாக்டரோட ஆலோசனை?''

''அவர்தான் வயித்துல அல்சர் இருக்கறதால இனிமே 'மசாலா' பக்கமே தலைவச்சுப் படுக்காதீங்கன்னாராம்!''

— மேல்மங்கலம் பத்ரா

எதுவும் எடுத்ததில்லை இது வரை. மூணு பொண்ணுங்க வேலையை இவள் ஒருத்தியே பார்ப்பாள்!''

''அட!'' என்றார் கவுண்டர்.

''லீவ் போட்டு, சும்மா சுத்தறதா சுகம்? உழைச்சா இல்ல சந்தோஷம்!'' பட்டென்று அவள் உதிர்த்த ஸ்ட்ரோக்கில் ஆடிப் போனார் கவுண்டர்.

''என்னா போடு போடறே நீ? சொல்லு. உனக்கு எதுனா செய்யணும்னு தோணுது. என்ன வேணும்?''

அவள் ஒரு கணம் தயங்கினாள். பின் மெதுவாகக் கேட்டாள். ''ஐயா... இப்ப நான் இருக்கிற வீடு... அதை எனக்கே குடுத்துடுவீங்களா?''

கவுண்டர் அவளை உற்றுப் பார்த்தார். சரி என்றார் சந்தோஷமாக.

''இலவசமா வேணாங்க. ஒரு விலை சொல்லுங்க. கொஞ்சம் கொஞ்சமா அடைச்சிடறேன்.''

''எப்படி, எப்படி?''

''மேனேஜருட்ட சொல்லி கொடோன் பெருக்கற வேலையையும் எனக்கே தரச் சொல்லுங்க. ஓ.டி. பார்க்கேன். எப்படியும் அடைச்சுடுவேன். சத்தியம்!''

இரவு பகலாக உழைத்துக் காசு சேர்த்தாள். உபரியாகப் பத்து வீடுகளில் பாத்திரம் தேய்த்து, துணி துவைத்தாள். தையல் கற்றுக் கொண்டு, சைடு பிஸினஸ் ஆரம்பித்தாள். சில வருஷங்களில் சொன்னபடி கடனை அடைத்தாள்!

அந்தப் பகுதியில் சொந்த வீட்டில் இருந்து கொண்டு டீ பறிக்கிற உத்தியோகம் பார்க்கும் ஒரே பெண் அவளாகத்தான் இருந்தாள். கொஞ்சநாள் தான்.

''ஸ்ரீதேவி எங்கே?'' என்று கேட்டார் கவுண்டர்.

''அவ ரெண்டு நாளா வேலைக்கு வர்றதில்லீங்க முதலாளி!''

''ஏன்?''

''தெரியலீங்க.''

''வந்தா என் வீட்டுக்கு வரச் சொல்லு...''

மறுநாள் காலை தன் வீட்டு வாசலில், முன்பு பார்த்த அதே இடத்தில் நின்று கொண்டிருந்த ஸ்ரீதேவியைச் சந்தித்தார் கவுண்டர்.

''ஏம்மா? ரெண்டு நாளா வேலைக்கு வரலையாம்? உடம்பு சரியில்லையா?''

''இல்லைங்க. நான் வேலையை விட்டுடலாம்னு இருக்கேன்.''

''ஏன்?'' என்றார் அதிர்ந்து.

''குன்னூர்ல சின்னதா ஒரு பெட்டிக்கடை வைக்கலாம்னு யோசனை.''

''காசு?'' என்றார் கேள்விக் குறியுடன்.

''வீட்டை வித்துடறேங்க.''

''என்னது? புரிஞ்சிதான் பேசறியா?''

''ஆமாங்க. சின்னதா எட்டடிக்கு எட்டடி பெட்டிக்கடை, பகடி இல்லாம கிடைக்கும் போல இருக்குது. அதான் வீட்டை வித்துட்டு, அதை வாங்கி, வியாபாரம் தொடங்கி, அங்கேயே தங்கிக்கிட்டு...''

கவுண்டர் பதில் சொல்லவில்லை. ஒரு சொந்த வீட்டின் மதிப்பு இந்தப் பெண்ணுக்குத் தெரியவில்லையே என்று மனசுக்குள் நினைத்துக் கொண்டார்.

ஆனால் தாம் நினைத்தது எத்தனை பிசகு என்று அவருக்குக் கொஞ்ச நாளிலேயே புரிந்தது.

குன்னூரில் அவளது கடை ரொம்பப் பிரசித்தமாகிப் போய் விட்டது. மளிகை - அண்டு ஃபேன்ஸி என்று பிசிறு தட்டும் எழுத்துக்களுடனான போர்டு வைத்து, வாடிக்கையாளர்களிடம் இன்முகம் காட்டி, இடைவிடாமல் உழைத்து, சேர்ந்த காசை தண்டச் செலவு செய்யாமல் சேமித்து, கடையை மேலும் விரிவாக்கி, மேலும் மேலும் விரிவாக்கி, மேலும் மேலும் மேலும் விரிவாக்கி, மூன்று வருஷங்களில் ஒரு பெரிய டிப்பார்ட்மெண்டல் ஸ்டோராக்கி விட்டாள் அவள்.

தற்செயலாக ஒருநாள் அந்தக் கடைக்கு வந்த கவுண்டர் அவளைப் பார்த்ததும் ஆச்சர்யப்பட்டு, ''இங்கியா வேலை பாக்கே?'' என்றார்.

''ஐயா வாங்க! நான் இங்க வேலை பார்க்கலை. கடையே என்னுதுதான்!'' என்ற போது 'தபார்றா' என்று வாய்பிளந்தார் கவுண்டர்.

''எப்படிம்மா இது சாத்தியம்?''

''தொண்ணுத்தஞ்சு பைசா!'' என்றாள் அவள்.

"சம்பந்தி, நீங்க என்னதான் அரசியல்வாதியாக இருந்தாலும் முதல் பந்தியில் பெண்களுக்கு 33% இட ஒதுக்கீடு வேணும் அப்படின்னு சொல்லி உங்க ஆளுங்களுடன் தகராறு செய்வது கொஞ்சம் கூட நல்லாயில்லை!"

— வி. முத்துக்குமரன்

♦ ♦

"என்னங்க இது சம்பந்தி சண்டைக்கு அரிவாள் கத்தில்லாம் எடுத்துக்கிட்டு வராங்க!"

"மாப்பிள்ளை வீடு திருநெல்வேலி மாவட்டம். பெண்ணு வீடு சிதம்பரனார் மாவட்டம். இப்படி சண்டை போட்டா தான் அது சண்டை மாதிரி இருக்கு மாம்!"

— ரா. ரெகுபதி

❑ ❑

கல்கி - பாலு ஜுவல்லர்ஸ்

இணைந்து வழங்கும்

'சம்பந்தி சண்டை' ஜோக்

போட்டி - 10

"வசதியானவங்க வீட்டுக் கல்யாணம் போலிருக்கு!"

"எப்படி சொல்றே?"

"சம்பந்தி சண்டையை அமைச்சுக் கொடுத்தது யார் தெரியுமா? சூப்பர் சுப்பராயனும், கனல் கண்ணனும்!"

— எஸ்.எஸ். பூங்கதிர்

❖ ❖

"நான்தான் வரதட்சணை பாக்கியை முழுசா தந்துட்டேனே... அப்புறம் எதுக்கு சத்தம் போடறீங்க?"

"எல்லா நோட்டுலயும் 'வரதப்பன் வயிற்றெரிச்சலோடு தந்தது'ன்னு எழுதியிருக்கே!"

— வே. செந்தில்குமார்

⌘ ⌘

"பொன்னோட அப்பா ஆளுங்கட்சி அரசியல்வாதி..."

"இருக்கட்டுமே... அதுக்காக சம்பந்தி கூட சண்டை வந்ததுக்கு எதிர்க்கட்சிகளின் சதி வேலைதான் காரணம்னு சொல்லணுமாக்கும்...!"

— ஜெ. முருகன்

☞ ☞



''என்னடி இது. ஒரு மாதிரியா 'சம்பந்தி சண்டை' ஓய்ஞ்சுதுன்னு நினைச்சேன். மறுபடியும் என்னாச்சு? ஏன் கத்த ஆரம்பிக்கறே?''

''யாரோ 'Action Replay'ன்னு கேட்டாங்க. அதான்!''

— என்.கே. வெங்கடேஷ்

● ●

''என்ன... அநியாயமா இருக்கு. லட்டெல்லாம் சீடை சைஸ்லே பண்ணியிருக்கீங்க?''

''ஆயிரம் லட்டு வேணும்னு எண்ணிக்கைதான் சொன்னீங்களே தவிர, சைஸ் பத்தி பேச்சு இல்லையே!''

— ஆர். சாந்தி ராஜேஸ்வரன்

✠ ✠

''சம்பந்திகளுக்குள் என்ன சண்டை?''

''வரதட்சணையாக டு-வீலர் கேட்டதுக்கு மாட்டு வண்டி வாங்கிக் கொடுத்திருக்கிறார்களாம்!''

— பெ. பொன்ராஜபாண்டி

☺ ☺

பிரசுரமாகியுள்ள ஒவ்வொரு ஜோக்கும் ரூ. 100 பரிசு பெறுகிறது.



ஒரு 1-4-3 பரம்பரை!

அந்தப் பரம்பரையையே 143 பரம்பரை என்றால் மிகையில்லை. அந்த அளவுக்குக் காதல் திருமணங்கள். லேட்டஸ்ட் காதல் பறவைகள் - மதுவந்தி, அருண்குமார்.

மதுவந்தி, ஒய்.ஜி. மகேந்திராவின் மகள். அருண்குமார், ஜெமினி கணேசன் - சாவித்திரியின் மகள் விஜயசாமுண்டீஸ்வரியின் பையன். இவர்களது (காதல்) திருமண நிச்சயதார்த்தம் ஜூன் 23ம் தேதி ஓட்டல் காஞ்சியில் நடந்தது. சிவாஜி உட்பட பல திரையுலகப் பிரபலங்களும், இரு குடும்பத்து நண்பர்களும் திரளாய் வந்திருந்தனர்.

மதுவந்தி - அருண் காதல், லயோலா கல்லூரியில் மலர்ந்தது. இரண்டு பேருமே, லயோலாவில் விஷுவல் கம்யூனிகேஷன் படிக்கிறபோது நட்பு மலர்ந்து, காதலாகியது. (அவர்கள் இருவருமே, தம் மனத்தில் இருப்பதை விஷுவலாக கம்யூனிகேட் பண்ணிக் கொண்டு விட்டதன் விளைவுதான் இந்தக் காதல் கல்யாணம் என்று கமெண்ட் அடிக்கிறார் ஒய்.ஜி. மகேந்திரா.)

அருண், கல்லூரியில் மதுவுக்கு இரண்டு வருடம் சீனியர். கல்லூரியில் ப்ராஜக்ட்களில் இருவரும் பரஸ்பரம் உதவிக் கொண்டார்கள்.

கல்லூரிக்கு வெளியிலும் இவர்களது நட்புக்கரம் நீண்டது. மதுவந்தி, 'கன்யா', 'நவராத்திரியில் நவரஸங்கள்', 'கர்தவ்யம்' என்று புதுப்புது நாட்டிய நிகழ்ச்சிகளை வடிவமைத்து, மேடை ஏற்றியபோது லைட்டிங் முதலிய டெக்னிகல் விஷயங்களில் உதவியவர் அருண்தான்.

இப்படியாக நட்பின் நெருக்கம் இறுகியபோது, மது, அருண் வீட்டுக்குப் போய் வருவதும், அருண், மது வீட்டுக்குப் போய் வருவதும் சகஜமானது.

மதுவந்தி வீட்டில் விஷயம் தெரியும். ஒரு மாதிரி, 'மதுதான் தம் வீட்டு மருமகள்' என்று

அருண் வீட்டிலும் நிர்மாணமாகிவிட்டது!

ஒரு யூகத்தின் அடிப்படையில் மகேந்திராவே, இருவரிடமும் நேரடியாய் இந்தக் காதல் விஷயமாய் சில மாதங்களுக்கு முன் கேட்டுவிட்டார்.

"நாங்களே, இதை எப்படிப் பேச ஆரம்பிப்பது என்று யோசித்துக் கொண்டிருந்தோம்" என்று பதில் கிடைத்தது.

அப்புறமென்ன? இரண்டு தரப்பிலும் பச்சைக் கொடி.

"மதுவை எங்களுக்கு ரொம்பப் பிடித்துப் போய்விட்டது" என்கிறார் அருணின் தாய் விஜயசாமுண் டீஸ்வரி. (சாவித்திரியின் மகள்)



• மதுவந்தி

"நான் நடிகையர் திலகம் சாவித்திரி மீது பெரும் மதிப்பு கொண்டவன். அவரது பேரனை, மாப்பிள்ளையாக்கிக் கொள்ள மறுப்பேனா? தவிர அருண் ரொம்ப புத்திசாலி, அமைதியான டைப். (என் பொண் மதுவுக்கு நேரெதிர் என்றால், உடனே அவளுக்குக் கோபம் வந்து, நான் சொல்வது சரிதான் என்று நிரூபணமாகிவிடும்)" என்று பெருமைபடச் சொல்கிறார் மகேந்திரா.

அருண் இப்போது பம்பாயில் ஒரு விளம்பர நிறுவனத்தில் பணிபுரிகிறார். மதுவந்திக்கு, கல்லூரியில் இது கடைசி வருடம்.

இவர்கள் திருமண நிச்சயதார்த்தம் முடிந்துவிட்டாலும், திருமணம் இன்னும் ஒரு வருடம் கழித்துத்தான். இல்லாவிட்டால், மது படிப்பை நிறுத்திவிட்டு, பம்பாய் போக வேண்டிவருமே!

இருவருமாய் அமெரிக்கா சென்று மேற்கொண்டு படிக்கவும், பிற்காலத்தில் சொந்தமாக விளம்பர ஏஜென்ஸி துவங்கவும் திட்டம் வைத்திருக்கிறார்கள்.

— எஸ். சந்திரமௌலி

படங்கள் : செல்லா

காதல் தலைமுறைகள்...

மதுவந்தியின் பெற்றோர் மகேந்திரா - சுதா திருமணமும் காதல் திருமணம்தான். சுதாவின் அண்ணன் ரவிராகவேந்தரும், மகேந்திராவும் நண்பர்கள். மகேந்திராவின் நாடகக் குழுவில் அவரும் நடித்தார். தவிர மகேந்திரா நடத்தி வந்த இசைக்குழுவில் சுதா ஒரு பாடகி.

மகேந்திராவுக்கு 25 வயதில் திருமணம். அப்போது பதினெட்டு வயது சுதா, கல்லூரியில் இரண்டாம் வருடம் படித்துக் கொண்டிருந்தார். இருதரப்பினரும் ஏற்கெனவே அறிமுகமானவர்கள் என்பதால், திருமணத்துக்கு எதிர்ப்பு ஏதுமில்லை. (சுதா இன்னமும் ஏர் இந்தியாவில் பணிபுரிகிறார்).

சுதாவின் தங்கை லதா, ரஜினியைக் காதலித்து மணந்த கதை வெகு பிரசித்தம்.

மகேந்திராவின் பெற்றோர் ஒய்.ஜி. பார்த்தசாரதி (ஒய்.ஜி.பி.) ராஜலட்சுமி (ராஷ்மி) திருமணம் கூடக் காதல் திருமணமே. அந்தத் திருமணம் கைகூடப் பெரிதும் உதவியவர் ஒய்.ஜி.பி.யின் சகோதரிதான்.


அருண் தரப்பில், அவரது பெற்றோர் விஜயசாமுண்டீஸ்வரி - கோவிந்தராவ் திருமணம் மட்டும் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட ஒன்றுதான்.

தாத்தா ஜெமினியைப் பற்றி சொல்லவே வேண்டாம்! காதல் மன்னனாயிற்றே!

இந்த இதழில் வெளியாகியுள்ள (மார்ஜினைத் தாண்டியும் கொஞ்சம் மூக்கை நீட்டும்) மார்ஜின் மொழிகள், வானதி பதிப்பகம் வெளியிட்டுள்ள ஆங்கில அறிஞர்களின் சிந்தனைகள் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டவை.

டென்னிஸ் கோர்ட்டில் அணுகுண்டு!





1. விம்பிள்டனில் இந்த வருடம் ஆண்கள் ஒற்றையர் ஆட்டத்தில் வெற்றி பெறுபவர் பெறப் போகும் பரிசுத் தொகை எத்தனை தெரியுமா? 96 லட்ச ரூபாய்!

2. இந்த ஆண்டு விம்பிள்டனைப் பொறுத்தவரை 121ம் ஆண்டு. அதன் முதல் ஆண்டில் 22 பேர் மட்டுமே கலந்து கொண்டனர். 200 பார்வையாளர்கள் மட்டுமே போட்டிகளைப் பார்த்தனர். இன்று சுமார் 4.5 லட்சம் ரசிகர்கள் விம்பிள்டனைக் கண்டு ரசித்து மகிழ்கிறார்கள்.

3. பெண்களுக்கான ஒற்றையர் போட்டி 1884ம் ஆண்டுதான் துவங்கப்பட்டது.

4. 1919ல்தான் இந்தப் போட்டியின் ஐந்து பட்டங்களையும், பிரிட்டனைத் தவிர மற்ற வெளிநாட்டினர் பெற்றனர்.

5. சூசானிவென்குலென் என்ற பெண்மணிக்கு தனிப்பெருமை உண்டு. இவர்தான் முதன் முதலாக ஒரே ஆண்டில் மூன்று போட்டிகளில் வென்றவர்!

6. உலகப் போர் நடக்கத் துவங்கியதை ஒட்டி 1939-ம் ஆண்டு முதல் இந்தப் போட்டி சிறிது காலம் நிறுத்தப்பட்டது. 1940ம் ஆண்டில், ஜெர்மனி போட்ட குண்டு ஒன்று விம்பிள்டன் மைதானத்திலேயே விழுந்து வெடித்தது!

7. ஆர்தர்கோர் என்ற வீரர் மொத்தம் மூன்று முறை இந்தப் பட்டத்தைப் பெற்றார். அதில் முதல் தடவை தன்னுடைய 20 வயதிலும், கடைசி தடவை 41 வயதிலும் பெற்றார். இவர் 59 வயது வரையிலும், பல நடுத்தர டென்னிஸ் போட்டிகளில் கலந்து கொண்டு சாதனை படைத்தவர்.

8. விம்பிள்டன் போட்டி நடக்கும் இடத்தில் மொத்தம் 18 கோர்ட்டுகள் உள்ளன. இதில் சென்டர்கோர்ட் மிகவும் பிரபலமானது. இதில்தான் இறுதி ஆட்டம் நடைபெறும்.

9. விம்பிள்டனில் விளையாடிய வீரர், வீராங்கனைகளில் மற்றொரு போட்டியில் கத்தியால் குத்தப்பட்ட ஒரே வீராங்கனை... மோனிகாசெலஸ்!

10. இந்தியாவைப் பொறுத்த வரை ராமனாதன் கிருஷ்ணன் அரை இறுதி ஆட்டம் வரை இருமுறை வந்தார். ரமேஷ் கிருஷ்ணனும், விஜய் அமிர்தராஜும் கால் இறுதி ஆட்டம் வரை வந்து தோற்றனர்.

11. விம்பிள்டன் ஜூனியர் பட்டத்தை இரண்டு இந்தியர்கள் இதுவரை பெற்றுள்ளனர். ஒருவர் ரமேஷ் கிருஷ்ணன். மற்றொருவர் லியாண்டர் பயஸ்.

12. டென்னிஸ் வீரர்களில் மறக்க முடியாதவர் ஜான் மெக்கன்ரோ! இவருடைய ஆட்டத்தில் மட்டுமல்ல; கோபத்திலும் ஆக்ரோஷம் அதிகம்.

13. சமீப காலங்களில் பெண்களை மிகவும் கவர்ந்த வீரர் ஆண்ட்ரு அகாஸி...!

ஆதாரம் : **ஸ்போர்ட்ஸ் ஸ்டார்**

தகவல்கள் : **ராஜி ராதா**

பரதன் அச்சகத்தில் அச்சிட்டு, பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622; ஃபேக்ஸ் : 2345621.
ஆண்டுச் சந்தா : ரூ. 208/-; ஆறு மாதச் சந்தா : ரூ. 104/- (உள்நாடு).

Registered with the Register of Newspaper of India under No. 1041/57 " Registered No. TN / MS (S) M4392 /97" Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 " Registered as a Newspaper in Srilanka

L.R.SWAMI / PP